life, பொதுநடை, உலகநடை, உலகவழக்கு.
measure, சாதாரணபாககம், சேடமின்றிப்பிரிக்குந்தொகை.
names, பொதுப்பெயர்.
prayer, சாதாரணவிண்ணப்பபுத்தகம், பிராத்தனைப்புத்தகம்.

sense, புத்தி, இயற்கையறிவு, சுபாப வறிவு.
stock, பொதுமுதல், கணத்திரவியம்.
use, வழக்கம், பெருவழக்கு.
woman, பொதுப்பெண், பொதுஸ்திரி.
word, வழக்கச்சொல்.
Com′mon-al-ty, *s.* பிரசைகள், சாதாரணசனம்.
Com′mon-er, *s.* கைவினைஞன்.
Com′mon-ly, *adv.* பொதுவாய், வழக்கமாய், வாடிக்கையாய், பெரும்பாலும்.
Com′mon-ness, *s.* பொதுமை, வழக்கம், வாடிக்கை.
Com′mon-plāce, *s.* ஞாபகக்குறிப்பு, சாதாரணமானது.
Com′mon-plāce, *a.* வாடிக்கையான, பரும்படியான, சாதாரணமான.
Com′mons, *s.* (*pl.*) குடிசனங்கள்.
house of, பிரசாபட்சமந்திரிகள்.
for boarding, பொதுப்போசனம்.
Com′mon-wealth, *s.* ஊரரசாட்சி, பொதுஅரசாட்சி, சுயபராபத்தியம்.
as territory, சுயபராபத்தியதேசம்.
as people, சுயபராபத்தியமானசனம்.
Com-mō′tion, *s.* கலக்கம், குழப்பம், கலாதி, கொந்தளிப்பு, கலம்பகம், கலகம், அமளி.
Com-mō′tion-er, *s.* கலம்பகன், குழப்பஞ்செய்வோன்.
Com-mūne′, *v. n.* கலந்துபேசுதல், பேசிக்கொள்ளுதல், சம்பாஷணைபண்ணுதல்.
as receive the communion, நற்கருணைவாங்குதல்.
Com-mū′ni-ca-ble, *a.* அறிவிக்கத்தக்க, சொல்லத்தக்க.
Com-mu-ni-ca-bil′i-ty, Com-mū′ni-ca-ble-ness, *s.* அறிவிக்கத்தக்கத்தன்மை.
Com-mū′ni-cant, *s.* நற்கருணைக்காரன், இராப்போசனத்திற்பங்காளி.
Com-mū′ni-cāte, *v. a.* அறிவித்தல், அறியச்செய்தல், தெரியப்பண்ணுதல்.
to impart, கொடுத்தல், பகிர்ந்துகொடுத்தல்.
to impart mutually, கலந்துபகிர்ந்துகொள்ளுதல்.

secrets, திறந்துசொல்லுதல், வெளி விடுதல், பகிரங்கப்படுத்தல்.
by words, சொல்லியறிவித்தல்.
by signs, பயில்காட்டுதல், குறிப்புக் காட்டுதல், சூசனைசெய்தல்.

Com-mū'ni-cāte, *v. n.* பரிமாறுதல், நடமாடுதல், பழகுதல், ஐக்கப்படுதல்.
to converse with, பேசிக்கொள்ளுதல், கலந்துபேசுதல்.
to have communication, சேர்ந்திருத்தல், தொடுத்திருத்தல்.
to partake of the Lord's supper, நற்கருணைவாங்குதல்.

Com-mu-ni-cā'tion, *s.* வழி, போக்கு, சம்பந்தம், இசைவு, சொல்லுகை, தொடுப்பு.
as interchange, intercourse, போக்குவரவு, பரிமாற்றம், அன்னியோன்னியம், சம்பந்தம், ஊடாட்டம்.
as impartation, கொடை, ஈவு, அறிவிப்பு, தெரிவிப்பு, வரவு.
as information, account, செய்தி, காரியம், விருத்தாந்தம், சமாசாரம், வத்தமானம், சங்கதி.
as conversation, பேச்சு, சம்பாஷிப்பு, வாய்மொழியறிவிப்பு, வாய்மொழிப்பரிமாற்றம்.
by letter, காகிதம், திருமுகம், பத்திரம்.

Com-mū'ni-ca-tive, *a.* வெளிப்படையாய்ப்பேசுகிற, திறந்துசொல்லவிரும்புகிற.

Com-mū'ni-ca-tive-ness, *s.* வெளிப்படையாய்ப்பேசுந்தன்மை, அறிவிக்கும்விருப்பம்.

Com-mūn'ion, *s.* ஐக்கியம், ஒன்றிப்பு, ஒற்றுமை, சேர்த்திக்கை, அன்னியோன்னியம், சம்பந்தம்.
as agreement, இணக்கம், பொருத்தம், இசைவு.
body, or sect, விகற்பசமயிகள், விகற்பசமயசங்கத்தார், ஒரேமதத்திலிருந்துபிரிந்தமதத்தார்.
celebration of the Lord's supper, நற்கருணை, இராப்போசனம்.
of saints, பரிசுத்தருக்குண்டாகுமைக்கியம், அன்னியோன்னியசம்பந்தம்.

Com-mūn'ion-ser'vice, *s.* நற்கருணைபரிமாறுமொழுங்கு, இராப்போசனம் வழங்குமொழுங்கு.

Com-mū'ni-ty, *s.* பொதுமை, பொது உரிமை, பொது உடைமை.
as body politic, ஒரேஇராச்சியத்துச் சனம், ஒரேபிரமாணபந்தமுள்ளசனம், ஒரேயரசாட்சிக்குட்பட்டசனம்.
common people, சனங்கள், பிரசைகள்.
class of society, சனப்பகுதி, சபை, கூட்டம்.

Com-mū-ta-bil'i-ty, *s.* மாற்றத்தக்கதகுமை.

Com-mū'ta-ble, *a.* மாறத்தக்க, மாற்றத்தக்க.

Com-mu-tā'tion, *s.* மாறுகை, திரிபு.
tax, மாற்றுவரி.

Com-mū'ta-tive, *a.* மாறத்தக்க.

Com-mū'ta-tive-ly, *adv.* மாற்றத்தக்கதாய், மாற்றி மாறி.

Com-mūte, *v. a.* மாற்றுதல், பிரதியாக மாற்றுதல்.

Com-mūte, *v. n.* மாறுதல்.

Com-mū'tu-al, *a.* ஒன்றற்கொன்றுமாறுன.

Com'pact, *s.* உடன்படிக்கை, பொருத்தம்.

Com'pact', *v. a.* இறுக்கமாக்குதல், அழுத்தமாக்குதல், சேர்த்தல்.

Com-pact', *a.* அழுத்தமான, இறுக்கமான, கட்டுப்பாடான, வைரமான, உரப்பான, திரமான, கடினமான, உறுதியான.
brief, close, சுருக்கமான, அடக்கமான, பொழிப்பான.
snug, அடக்கமான.
body, உரத்தபொருள், கட்டுப்பாடானசரீரம்.

Com-pact'ly, *adv.* இறுக்கமாய், அழுத்தமாய், கட்டுப்பாடாய்.

Com-pact'ness, *s.* இறுக்கம், அழுத்தம், வைரம், உரம், திரம்.

Com-pan'ion, *s.* கூட்டாளி, தோழன், சினேகிதன், சங்காத்தி, மித்திரன்.
a female friend, சேடி, நண்பி, ஏடி, சகி, சகாயி.

a male friend, சேடன், நண்பன், சகாயன், ஏடன்.
female attendant, சேடியர்.
Com-pan'ion-a-ble, *a.* சினேகத்துக்கேற்ற.
Com-pan'ion-ship, *s.* ஐக்கம், உடந்தை, சேர்த்திக்கை, அன்னியோன்னியம்.
Cŏm'pa-ny, *s.* கூட்டம், திரட்சி.
as associated body, கூட்டம், சங்கம்.
as persons accompanying, தோழர், சங்காத்தர், துணைவர்.
as society, சபை, சங்கம்.
of soldiers, ஓர்தளகத்தனுக்குச்சேர்ந்தபடைஞர்.
of women, பொய்தல், ஆயம், பண்ணை, மகளிர்கூட்டம்.
to bear company, சேர்ந்துபோகுதல், துணைபோகுதல்.
to keep company, கூடித்திரிதல், கூடிநடத்தல்.
Com'pa-ra-ble, *a.* உவமிக்கத்தக்க, ஒப்பிடத்தக்க.
Com-par'a-tive, *a.* ஒப்பான, சமானமான.
degree, உயர்ஒப்புப்படி, ஒப்புப்படி.
Com-par'a-tive-ly, *adv.* ஒப்பிடுகில், ஒத்துப்பார்க்கில்.
Com-pāre', *s.* உவமை, உவமானம், நிகர்.
Com-pāre', *v. a.* ஒத்துப்பார்த்தல்.
to liken, ஒப்பிடுதல், உவமித்தல்.
the thing to be compared, உவமேயம்.
the thing with which another is to be compared, உவமானம்.
Com-pāre', *v. n.* சமரசமாதல், ஒப்பாகுதல்.
Com-pār'er, *s.* உவமிப்போன், ஒப்பிடுவோன்.
Com-par'i-son, *s.* ஒப்பு, நிகர், நிபம், துல்லியம்.
similitude, ஒப்பிடுகை, உவமிக்கை.
Com-pärt', *v. a.* பகுத்தல், வகுத்தல்.
Com-pär-ti'tion, *s.* பகுப்பு, வகுப்பு.
Com-pärt'ment, *s.* அறை, பாத்தி, பிரிவு, பங்கு, அமிசம், பகுதி.
Cŏm'pass, *s.* அளவு, மட்டு, புறவெல்லை, உட்பரப்பு, சுற்றளவு.

mariners, திசையறிகருவி, காந்தப்பெட்டி, காந்தஊசிப்பெட்டி.

Cŏm'pass, *v. a.* சூழ்தல், வளைதல், சுற்றுதல்.
to besiege, block up, அடைத்தல், முற்றுகைபோடுதல்.
to contrive, புணர்த்துதல், யோசித்தல்.
to effect, நடப்பித்தல், நிறைவேற்றல்

Cŏm'pass-es, *s. (pl.)* கவராசம்.

Com-pas'sion, *s.* இரக்கம், உருக்கம், பரிதாபம், கருணை, அன்பு, அனுதாபம்.

Com-pas'sion-a-ble, *a.* இரக்கம்பெறத்தக்க, தயைவைக்கத்தக்க.

Com-pas'sion-āte, *v. a.* இரங்குதல், பரிதபித்தல், கண்பார்த்தல், அருளுதல்.

Com-pas'sion-āte, *a.* இரக்கமுள்ள, மனவுருக்கமுள்ள.

Com-pas'sion-ate-ly, *adv.* இரக்கமாய், உருக்கமாய், அனுதாபமாய்.

Com-pat-i-bil'i-ty, *s.* தகுதி, ஏற்றதன்மை, இணக்கம்.

Com-pat'i-ble, *a.* தகுதியான, ஏற்ற, பொருந்திய, இணங்கிய.

Com-pat'i-ble-ness, *s.* தகுதி, இணக்கம், இசைவு, பொருத்தம்.

Com-pat'i-bly, *adv.* தகுதியாய், இணக்கமாய், இசைவாய்.

Com-pā'tri-ot, *s.* ஏகதேசி, ஒரேதேசத்தான், சகதேசவாஞ்சகர், சுதேசவாஞ்சகசகிதன்.

Com-peer', *s.* சரிவந்தவன், ஒத்தவன், கூட்டாளி, உடனொத்தவன், இணையானவன்.

Com-peer', *v. a.* சரியாக்குதல்.

Com-pel', *v. a.* வலிமைசெய்தல், பலாற்காரம்பண்ணுதல், கட்டாயம்பண்ணுதல், நெருக்குதல்.

Com-pel'la-ble, *a.* பலாற்காரம்பண்ணக்கூடிய.

Com-pel'ler, *s.* கட்டாயம்பண்ணுகிறவன்.

Com'pend, *s.* அடக்கம், சுருக்கம், குறிப்பு, பொழிப்பு.

Com-pend'i-ous, *a.* சுருக்கமான, அடக்கமான.

Com-pend'i-ous-ly, *adv.* சுருக்கமாக, பொழிப்பாக.

Com-pend'ious-ness, *s.* சுருக்கம், குறுக்கம், அடக்கம், பொழிப்பு, திரட்டு.

Com-pend'i-um, *s.* சுருக்கம், அடக்கம், பொழிப்பு, திரட்டு, தொகுப்பு.

Com-pens'a-ble, *a.* சரிக்கட்டத்தக்க, பதிலளிக்கத்தக்க, பிரதிசெய்யத்தக்க.

Com-pen'sāte, *v. a.* சரிக்கட்டுதல், ஈடுசெலுத்துதல், உத்தரவாதம்பண்ணுதல்.

Com-pen-sā'tion, *s.* ஈடு, கைமாறு, பிரதியுபகாரம், உத்தரவாதம்.
as pay, கூலி, சம்பளம், சீதந்தரம், பிரதிபலன்.

Com-pen'sa-tive, Com-pen'sa-to-ry, *a.* பிரதிபலன் கொடுக்கிற, சரிக்கட்டுகிற, கைம்மாறுசெய்கிற.

Com-pēte,' *v. n.* வெல்லப்பார்த்தல், மேற்கொள்ளத்தெண்டித்தல், வீம்பொட்டுதல், தாயதிபண்ணுதல்.

Com'pe-tence, Com'pe-ten-cy, *s.* திராணி, தகுதி, திருத்தி.
as ability, சமர்த்து, சாமர்த்தியம், தத்துவம், திறம்.
as fitness, தகுதி, யோக்கியம்.

Com'pe-tent, *a.* தகுதியான, யோக்கியமான, ஏற்ற.

Com'pe-tent-ly, *adv.* தகுதியாய், திராணியாய், திறமையாய், திருத்தியாய்.

Com-pe-ti'tion, *s.* முந்திக்கொள்ளவகைதேடுகை, எதிரித்தனம், எதிர்வாதம், தாயதி.

Com-pet'i-tor, *s.* எதிராளி, எதிரி, தாயதிக்காரன்.

Com-pi-lā'tion, *s.* திரட்டு, சேர்வை, கலவை, கலம்பகம்.

Com-pīle', *v. n.* திரட்டுதல், சேர்த்தல், கோத்தல், கலக்குதல்.

Com-pīl'er, *s.* கோக்கிறவன், சேர்க்கிறவன், கலம்பகநூல்செய்வோன்.

Com-plā'cence, Com-plā'cen-cy, *s.* பிரியம், உவப்பு, சந்தோஷம், இட்டம், பூரிப்பு.
civility, மரியாதை, உபசாரம், ஒழுக்கம்.

Com-plā'cent, *a.* உபசாரமான, சாதுவான, மரியாதையுள்ள.

Com-plā'cent-ly, *adv.* உபசாரமாய், சாதுவாய், மரியாதையாய்.

Com-plāin', *v. n.* குறைசொல்லுதல், குறையெடுத்துச்சொல்லுதல், முறையிடுதல், பிராதுபண்ணுதல், குறையிரத்தல்.
to moan, அனுங்குதல்.
to murmur, முறுமுறுத்தல், மொறுமொறுத்தல்.
to whine, குணுகுதல், சிணுங்குதல், அழுதல்.

Com-plāin'ant, *s.* வாதி, வழக்காளி, தொடர்ச்சிக்காரன், பிராதுக்காரன்.

Com-plāin'er, *s.* குறைசொல்லுகிறவன், முறுமுறுக்கிறவன், புலம்புகிறவன்.

Com-plāin'ing, *s.* முறைப்பாடு, பிரலாபம்.

Com-plāint', *s.* குறை, புலம்பல், முறைப்பாடு, முறையீடு.
as accusation, charge, முறைப்பாடு, பிராது, அறைகுறை.
as lamentation, விதனக்குறிப்பு, பிரலாபம், புலம்பு.
as malady, வியாதி, நோய், ஏலாமை.
as moan, அனுக்கம், சிணுக்கம், குணுக்கம்.
as murmuring, முறுமுறுப்பு.

Com'plai-sance, *s.* உபசாரம், மரியாதை, உபசரணை, கடாட்சம்.

Com'plai-sant, *a.* தாட்சணியமான, மரியாதையான, போதரவான.

Com'plai-sant-ly, *adv.* மரியாதையாய், உபசாரமாய்.

Com'plai-sant-ness, *s.* மரியாதை, உபசாரம், கடாட்சம்.

Com'ple-ment, *s.* அளவு, மட்டு, பிரமாணம், பூரணம்.
of an arc, கோடி, தனுக்கோடி, விற்கோடி.

Com-plēte', *v. a.* தீர்த்தல், முடித்தல்.
to accomplish, நிறைவேற்றுதல்.
to fill, நிரப்புதல், நிறைத்தல்.
to be completed, தீர்தல், முடிதல், நிறைவேறுதல், ஆகுதல்.

Com-plēte', *a.* பூரணமான, நிறைவான.
finished, முடிந்த, தீர்ந்த.

Com-plēte'ly, *adv.* பூரணமாய், நிறைவாய், முற்றும், முழுதும்.
Com-plēte'ment, *s.* முடிப்பு, நிறைவு, தீர்ப்பு, சம்பூரணம்.
Com-plēte'ness, *s.* பூரணம், நிறைவு, தீர்ப்பு, சம்பூரணம்.
Com-plē'tion, *s.* நிறைவு, நிறைவேற்றம், பூரணம், முடிவு, தீர்ப்பு, சமாப்தி.
Com'plex, *a.* கூட்டான, கலப்பான, சேர்வையான, பலகருத்துள்ள, சங்கரமான.
involved, difficult, சுற்றுச்சுழற்சியான, சிக்குமுக்கான, சன்னல்பின்னலான, கருகலான.
fraction, சங்கரபின்னம்.
idea, தொடர்பொருள், பலபொருள்.
Com-plex'ion, *s.* முகநிறம், சரீரவன்னம்.
as condition, சீர், நிருவாகம், போங்கு.
Com-plex'ion-al, *a.* நிறத்துக்குரிய, தோற்றத்துக்குரிய.
Com-plex'ion-al-ly, *adv.* தோற்றமாய், நிறமாய், நிறத்தின்படி.
Com'plex-ly, *adv.* கலப்பாய்.
Com-plex'i-ty, Com'plex-ness, *s.* பலபொருட்கலவை, பலகருத்து, சன்னல்பின்னல்.
Com-plī'a-ble, *a.* இணக்கமான.
Com-plī'ance, *s.* இணக்கம், சம்மதம், அமைவு, அடக்கம், இசைவு.
Com-plī'ant, *a.* இணக்கமான, அமைதியான, பதிவான, அடக்கமான.
Com-plī'ant-ly, *adv.* இணக்கமாய், இசைவாய்.
Com'pli-cāte, *v. a.* சிக்குப்பண்ணுதல், பின்னலாக்குதல்.
Com'pli-cate, *a.* சிக்குமுக்கான, கலப்பான, சன்னல்பின்னலான.
Com'pli-cate-ly, *adv.* சிக்குமுக்காய், சன்னல்பின்னலாய், கலப்பாய்.
Com'pli-cate-ness, *s.* சிக்குமுக்கு, சுற்றுச்சுழற்சி, சன்னல்பின்னல், சிக்குடைமை.
Com-pli-cā'tion, *s.* பின்னுகை, கலவை.
of diseases, பலரோகக்கலவை.
Com-plī'er, *s.* இணங்குகிறவன், சம்மதிக்கிறவன்.

Com'pli-ment, *s.* நயச்சொல், உபசரணை, உபசாரம், ஆசாரம்.
as present, வெகுமதி, வெளிப்பாடு.
Com'pli-ment, *v. a.* புகழ்தல், முகமன் சொல்லுதல், உபசரித்தல், உபசாரஞ் செய்தல்.
to present, வெகுமதிகொடுத்தல்.
to congratulate, மங்கலஞ்சொல்லுதல், சோபனஞ்சொல்லுதல், வாழ்த்தல்.
Com'pli-ment, *v. n.* வாழ்த்துச்சொல்லல், கீர்த்தித்தல்.
Com-pli-ment'a-ry, Com-pli-ment'al, *a.* } உபசாரமுள்ள, புகழச்சியுள்ள, மங்கலஞ்சொல்லுகிற.
Com'pli-ment-er, *s.* உபசாரம்பேசுவோன், இச்சகன்.
Com'plot, *s.* புனைசுருட்டு, புணர்ப்பு, சதியோசனைக்கூட்டு.
Com-plot', *v. a.* துராலோசனைசெய்தல், புனைசுருட்டுப்பண்ணுதல், புணர்ப்புச்செய்தல்.
Com-plot'ment, *s.* புணர்ப்பு, புனைசுருட்டு, வினையக்கட்டு, துராலோசனை.
Com-plot'ter, *s.* துராலோசனைக்காரன், சதியோசனைக்குட்பட்டவன், இராசத்துரோகி.
Com-ply', *v. n.* அமைதல், அடங்குதல், சம்மதித்தல், இணங்குதல், ஒவ்வுதல்.
Com-pō'nent, *a.* அங்கமான, உறுப்பான, கலவையான.
part, அங்கம், உறுப்பு, சினை, கூறு, பிரிவு, அமிசம்.
Com-pōrt', *v. n.* சுமத்தல், சகித்தல்.
with, ஒத்துக்கொள்ளுதல், ஏற்குதல், பொருந்துதல், இணங்குதல், இசைதல்.
Com-pōrt'ment, *s.* நடக்கை.
Com-pōse', *v. a.* கூட்டுதல், சேர்த்தல், அடுக்குதல், கோத்தல், புணர்த்துதல்.
to calm, quiet, assuage, ஆற்றுதல், தணித்தல், அமர்த்துதல், அமைத்தல், அடக்குதல்.
to settle, adjust, திருத்துதல், திட்டம் பண்ணுதல், சரிப்படுத்தல்.
to settle a difficulty, சமாதானப்படுத்துதல், பொருத்துதல், இணக்குதல்.

as printers, எழுத்துச்சேர்த்தல், அச்சடுக்குதல்.
language, வாசகங்கட்டுதல், தொடுத்தல், இணைத்தல்.
music, சுதிகற்பித்தல், சுதிகூட்டடல்.

Com-pōs'ed, *a.* அமைந்த, பதிந்த, அமர்ந்த, சாந்தமான.
as set together, சேர்ந்த, அடுக்கான, அணியான.
mind, தெளிந்தமனம், கலக்கமற்றமனம்.

Com-pōs'ed-ness, *s.* அமைதி, அமைவு, சாந்தம், சமாதானம்.

Com-pōs'er, *s.* உண்டாக்கிறவன், சேர்க்கிறவன், ஆக்கியோன்.

Com-pos'ite, *a.* இணைக்கப்பட்ட, சரிபெருக்கமுள்ள.
in numbers, சினையெண், சமகூறுசெய்யுந்தொகை, அமிசவெண்.

Com-po-si'tion, *s.* கூட்டு, திரட்டு, கலவை.
adjustment, ஒழுங்கு.
mixture, கலப்பு, கூட்டு.
mutual agreement, பொருத்தம், உடன்பிடிக்கை, கடனிறுக்கத்திராணியில்லையென்றுவிடுதலைபெறுகை.
writing, வாசகக்கட்டு, வாசகப்புணர்ச்சி, சொல்லடுக்கு, புணர்வு, தொடை.
of music, சுதிகற்பிப்பு, இராகப்போக்கு, கானம்.
in chemistry, கலவை.

Com-pos'i-tor, *s.* எழுத்துச்சேர்க்கிறவன், அச்சடுக்குவோன்.

Com'pos-men-tis, *s.* மனஆரோக்கியம், மனத்தெளிவு.

Com'pōst, *s.* எரு, உரம், பசளை.

Com-pōs'ure, *s.* ஒழுங்கு, அமைவு, அமைதி, சாந்தம், சமாதானம், அடக்கம்.

Com'pound, *s.* கலப்பு, கூட்டு, கலவை.
as garden, &c., வளவு, முற்றம்.

Com-pound', *v. a.* கலத்தல், கூட்டுதல், சேர்த்தல், திரட்டுதல், ஒழுங்காக்கல்.
to pay by agreement, கடன்காரருக்குப்பங்கீடுபண்ணுதல்.
to settle amicably, இணக்குதல், சமாதானப்படுத்துதல், பொருத்துதல்.

Com-pound', *v. n.* பொருந்துதல், இணங்குதல், இசைதல்.
Com'pound, *a.* கலப்பான, கூட்டான, தொடரான, ஒற்றுமையான.
idea, பலகருத்து, கலந்தவெண்ணம்.
interest, வட்டிக்குவட்டி.
letter, கூட்டெழுத்து, சார்பெழுத்து.
number, விவிதவெண்.
ratio, சக்கரவிகிதம்.
syllables, தொடர்அசை.
tense, விரவுக்காலம்.
verb, தொடர்மொழிவினை.
word, தொடர்மொழி.
Com-pound'a-ble, *a.* கலக்கக்கூடிய, இணைக்கக்கூடிய.
Com-pound'er, *s.* கலக்கிறவன், கலவைசெய்கிறவன்.
Com-pre-hend', *v. a.* கொள்ளுதல், பிடித்தல், அடக்குதல்.
to comprise, embrace, தழுவுதல், அடக்குதல், அமைத்தல்.
to understand, மட்டுக்கட்டுதல், கிரகித்தல், அறிதல், கண்டுபிடித்தல்.
Com-pre-hen'si-ble, *a.* கொள்ளத்தக்க, கிரகிக்கத்தக்க, விளங்கத்தக்க, புலப்படத்தக்க.
Com-pre-hen'si-ble-ness, *s.* புலப்படுந்தன்மை, விளக்கம்.
Com-pre-hen'si-bly, *adv.* விரிவாய், பலபொருண்மையாய், பலகருத்தாய்.
Com-pre-hen'sion, *s.* அடக்கம், கொள்ளுகை.
of mind, அறிவு, உணர்வு, கிரகிப்பு, அவதானம்.
Com-pre-hen'sive, *a.* கொள்ளுகிற, அடக்குகிற.
as extensive, விரிவான, விஸ்தாரமான, தழுவிக்கொள்ளுந்தன்மையான.
mind, விரிவானமனம், விவேகமான மனம்.
plan, விசாலயூகம், விரிவானஎண்ணம்.
rule, நுட்பவிதி.
Com-pre-hen'sive-ly, *adv.* அடக்கமாய், தொகையாய், விரிவாய்.
Com-pre-hen'sive-ness, *s.* அடக்குகை, பலவடக்கியதன்மை, விரிவு, விஸ்தாரம், தழுவிக்கொள்ளுந்தன்மை.

of mind, மனஆழம், விவேகம், கரு த்து.

Com′press, *s.* மடித்ததுண்டு.

Com-press′, *v. a.* அமர்த்துதல், அடக் குதல், சுருக்குதல், குறுக்குதல், ஒடு க்குதல், அமுக்குதல்.

Com-press-i-bil′i-ty, *s.* அடங்கத்தக்கத ன்மை, நசுங்கத்தக்கதன்மை, அமை யுந்தன்மை.

Com-press′i-ble, *a.* அடங்கத்தக்க, நசு ங்கத்தக்க, அமையத்தக்க.

Com-pres′sion, *s.* அடக்கம், இறுக்கம், ஒடுக்கம், அமுக்கம்.

Com-press′ive, *a.* அமர்த்தத்தக்க, அட க்கத்தக்க, இறுக்கத்தக்க.

Com-press′ure, *s.* அமர்த்துகை, இறுக் குகை, தாக்குகை, அமுக்குகை.

Com-prīs′al, *s.* கொள்ளுகை, தழுவு கை.

Cōm-prīse′, *v. a.* அடக்குதல், கொள் ளுதல், பிடித்தல்.

to be comprised, அடங்குதல்.

Com′pro-mīse, *s.* இருதிறவிணக்கம், இ ருதிறவிசைவு.

Com′pro-mīse, *v. a.* இணக்குதல், சரி க்கட்டுதல், நேர்படுத்துதல்.

to compound, இருதிறத்தாருந்தாழ்ந் திணங்குதல், பொறுத்திணங்குதல், ஒ த்திணங்குதல்.

Com-pul′sa-tive, Com-pul′sa-to-ry, *a.* கட்டாயம்பண்ணுகிற.

Com-pul′sion, *s.* பலபந்தம், நெருக்கு வாரம், கட்டாயம், வலிமை, பலாற் காரம்.

Com-pul′sive, *a.* பலபந்தமான, கட்டா யமான.

Com-pul′sive-ly, *adv.* பலபந்தமாய்.

Com-pul′sive-ness, *s.* பலபந்தம், வலி மை, கட்டாயம், பலாற்காரம்.

Com-pul′so-ri-ly, *adv.* பலபந்தமாய், க ட்டாயமாய்.

Com-pul′so-ry, *a.* பலபந்தமான, கட் டாயமான.

Com-punc′tion, *s.* மனவிதனம், மனஸ் தாபம், பச்சாத்தாபம்.

Com-pūt′a-ble, *a.* எண்ணத்தக்க, கண க்கிடத்தக்க.

Com-pu-tā'tion, *s.* எண், கணிதம், கணக்கு, மதிப்பு.
as sum, amount, தொகை, தீர்ப்பு.
Com-pūte', *v. a.* எண்ணுதல், கணக்குப்பார்த்தல், கணக்கிடுதல், கணித்தல், மதித்தல்.
Com-pūt'er, *s.* கணக்கன், கணிதன், மதிக்கிறவன்.
Com'rade, *s.* கூட்டாளி, தோழன், சகாயன்.
Con, *v. a.* பாடம்அவதானித்தல், ஞாபகத்திலழுத்துதல், பாடம்படித்தல்.
Co-nā'tus, *s.* செய்கை, முயற்சி, நேரோடுகை.
Con-cat'e-nāte, *v. a.* தொடுத்தல், கோத்தல்.
Con-cat-e-nā'tion, *s.* சங்கிலிக்கோவை, கோவை, தொடுப்பு, தொடர்.
Con-ca-vā'tion, *s.* கவிக்கை, அகவளைவாக்குகை, குடைவாக்குகை.
Con'cāve, *s.* கவிகை, கவிப்பு, கவிவு.
Con'cāve, *v. a.* கவித்தல், உள்வளைத்தல், குடைதல்.
to be concave, கவிதல், உள்வளைதல்.
Con'cāve, *a.* கவிப்பான, உட்கவிந்த.
Con'cāve-ness, Con-cav'i-ty, *s.* கவிகை, கவிவு, உள்வளைவு, அகவளைவு.
Con-cā'vo-con'cāve, *a.* இருபுறமுங்குடைவுள்ள, இருபுறமுமுட்கவிந்த.
Con-cā'vo-con'vex, *a.* கவிந்தவடிவுள்ள, உட்குடைவும் புறவளைவுமுள்ள.
Con-cēal', *v. a.* மறைத்தல், ஒளித்தல், கரத்தல், மூடுதல்.
defects, போர்த்துமூடுதல்.
one's self, ஒளித்துக்கொள்ளுதல்.
to be concealed, மறைதல், கரத்தல்.
Con-ceal'a-ble, *a.* மறைக்கக்கூடிய.
Con-cēal'ed-ness, *s.* மறைவானவிடம், இராசியம், அந்தரங்கம், மறைவு, ஒளிப்பு, கரப்பு.
Con-cēal'er, *s.* ஒளிக்கிறவன், மறைக்கிறவன்.
Con-cēal'ing, *s.* ஒளிப்பு, மறைப்பு.
Con-cēal'ment, *s.* மறைவு, மறைப்பிடம், மறைவிலிருக்குந்தன்மை.
as keeping secrets, அடக்கம், வெளிவிடாமை.

as hiding, மறைவு, மறைப்பு, ஒளிப்பு, கரவு, கரப்பு, பொதுக்கு.
a hidden place, மறைவு, மறைவிடம், ஒளிப்பிடம்.
privacy, அந்தரங்கம், அமைவடக்கம், இரகசியம்.
Con-cēde' *v. a.* ஒத்துக்கொள்ளுதல், இணங்குதல், ஏற்றுக்கொள்ளுதல், சம்மதித்தல்.
to grant, make over, ஒப்புக்கொடுத்தல், ஒப்புவித்தல்.
Con-cēit, *s.* சிந்தனை.
as opinion, எண்ணம், நினைப்பு, நினைவு, கருத்து.
an idea, image, மனத்தோற்றம்.
a fantastic notion, வீணெண்ணம்.
self conceit, நானென்கிறவெண்ணம், மமதை, தன்மதிப்பு, அகந்தை.
Con-cēit', *v. a.* எண்ணுதல்.
Con-cēit'ed, *a.* அகந்தையுள்ள, நானென்கிறவெண்ணமுள்ள.
Con-cēit'ed-ly, *adv.* நானென்கிறவெண்ணமாய், பெருமையாய், அகம்பிரமமாய்.
Con-cēit'ed-ness, *s.* நானென்கிறவெண்ணம், மமதை, தன்மதிப்பு, அகந்தை.
Con-cēiv'a-ble, *a.* எண்ணத்தக்க, நினைக்கக்கூடிய, சிந்திக்கத்தக்க.
Con-cēiv'a-ble-ness, *s.* எண்ணிக்கை, அறியக்கூடியதன்மை.
Con-cēiv'a-bly, *adv.* எண்ணத்தக்கவிதமாய், மட்டிடத்தக்கவிதமாய்.
Con-cēive', *v. a.* கருப்பமுண்டாதல், சினைகொள்ளுதல்.
to think, நினைத்தல், எண்ணுதல்.
Con-cēive', *v. n.* கருக்கொள்ளுதல், கருப்பந்தரித்தல்.
as a beast does, பொலிதல்.
to comprehend, கிரகித்தல், மட்டுக்கட்டுதல்.
to imagine, எண்ணுதல், நினைத்தல், கிரகித்தல், உத்தேசித்தல், பாவித்தல்.
Con-cēiv'er, *s.* கருப்பிணியாகிறவள்.
a thinker, நினைக்கிறவன்.
Con-cent', *s.* ஒத்திசை, ஒவ்வுகை.
Con-cen'ter, *v. a.* மையத்துக்கிழுத்தல், ஓரிடத்திலேசேர்த்சல்.

Con-cen'trāte, *v. a.* மத்தியிலேசேர்த்தல், நடுப்பெறச்சேர்த்தல்.
the thoughts, சிந்தனையொன்றிலே விடுதல், செலுத்துதல்.
Con-cen-trā,tion, *s.* மத்தியிற்சேர்க்கை. ஒன்றாய்க்கூட்டுகை, ஒருப்பாடு.
of thoughts, ஒருசிந்தனை, ஏகசிந்தனை, ஒரெண்ணம்.
Con-cen'tre, *v. a.* மத்தியிலேசேர்த்தல், ஓரிடத்திலேசேர்த்தல்.
Con-cen'tre, *v. n.* ஒன்றுகூடுதல், ஒருப்படுதல்.
Con-cen'tric, *a.* ஒரேமையத்தைச்சுற்றுகிற.
circles, அனுமையவட்டங்கள்.
Con-cep'ta-cle, *s.* கொள்கலம், பாத்திரம்.
in botany, கோது, ஓடு, உமி, வித்தைச்சூழ்ந்திருப்பது.
Con-cep'tion, *s.* சனிப்பு, கருப்பவுற்பத்தி.
notion, idea, எண்ணம், நினைவு, தோற்றம், பாவனை, உபதேசம்.
Con-cern', *s.* பொறுப்பு, காரியம், அலுவல், கருமம்.
as anxiety, பரிதாபம், இரக்கம்.
as connexion, உடந்தை, சேர்மானம், கூட்டு, சம்பந்தம்.
as interest, தொடர்ச்சி, உடந்தை, உரித்து, தொடிசு.
as regard, கவனம், கரிசனை, பற்று.
as solicitude, எண்ணம், சிந்தனை, விசாரம்.
Con-cern', *v. a.* அடுத்தல், உரித்தாயிருத்தல், அனுதாபப்படுதல், அவாவுதல், கவலித்தல்.
to intermeddle, கையிடுதல், தலையிடுதல், தலைவைத்தல்.
to concern one's self about, பிரயாசப்படுதல்.
Con-cern'ed, *a.* பற்றின, உடந்தையான, சேர்த்திக்கையான.
earnestly engaged in, கரிசனையான, புலனுள்ள, முயற்சியுள்ள, அவாவுள்ள.
solicitous, கவலையான, சிந்தனையுள்ள
to be concerned in, உடந்தையாகுதல், சேர்தல், உடன்படுதல்.

to be concerned for, இரங்குதல், பரிதபித்தல், கவலைப்படுதல், அனுதாபப்படுதல்.

Con-cern'ing, *prep.* குறித்து, பற்றி, தொட்டு, சுட்டி.

Con-cern'ment, *s.* (*see* Concern.) காரியம், கவலை, கவ்வை.

as interposition, தலையீடு, கையீடு.

Con'cert, *s.* பொருத்தம், உடன்பாடு, இணக்கம், இசைவு, உடந்தை.

of music, பலர்கூடிப்பாடும்சாகித்தியசங்கீதம், ஒத்திசை, சங்கீதசாகித்தியம்பாடுவோர்.

to act in concert, இணங்கிநடத்தல், உடந்தையாயிருத்தல்.

Con-cert', *v. a.* ஆலோசனைபண்ணுதல், பொருத்துதல், இணக்குதல்.

Con-ces'sion, *s.* ஒப்பு, சம்மதம், ஒப்புவிப்பு, இணக்கம்.

as apology, பிழையென்றொத்துக்கொள்ளுகை, மன்னிப்புக்கேட்டல்.

Con-ces'sive, *a.* இடங்கொடுக்கிற, ஒத்துக்கொள்ளுகிற.

Con-ces'sive-ly, *adv.* இணக்கமாய், சம்மதமாய், ஒப்புமையாய்.

Conch, *s.* சங்கு, சுரிமுகம்.

which turns to the right, வலம்புரிச்சங்கு.

Conch'īte, *s.* கல்லாகமாறினசங்கு.

Conch-oid'al, *a.* சங்குவடிவமான.

Conch-ol'o-gist, *s.* சங்குத்தத்துவசாத்திரி, சங்கியலறிஞன்.

Conch-ol'o-gy, *s.* சங்குத்தத்துவசாத்திரம், சங்கியலறிநூல்.

Con-cil'i-āte, *v. a.* இணக்குதல், சம்மதிக்கச்செய்தல், உறவாக்கல்.

Con-cil'i-ā-ting, *a.* சம்மதமான, சாதுவான, சாந்தமான, இதமான.

Con-cil-i-ā'tion, *s.* இணக்கம், சம்மதம், ஐக்கம், இசைவு, அன்னியோன்னியம், சமாதானம்.

Con-cil'i-a-to-ry, *a.* இணக்கமான, இதமான, சமாதான.

measures, சாமோபாயம், இதமானவழிவகை.

Con-cīse', *a.* சுருக்கமான, அடக்கமான, பொழிப்பான.

to be concise, சுருங்குதல், குறுகுதல்.

Con-cīse'ly, *adv.* சுருக்கமாய், பொழிப்பாய், அடக்கமாய்.
Con-cīse'ness, *s.* சுருக்கம், அடக்கம், பொழிப்பு.
Con-cis'ion, *s.* வெட்டுகை, சீவுகை, நறுக்குகை, சேதிப்பு.
Con-ci-tā'tion, *s.* எழுப்பிவிடுகை, ஏவுகை, மூட்டுகை.
Con-cla-mā'tion, *s.* ஆரவாரம், பேரொலி.
Con'clāve, *s.* பாப்புவைநியமிக்கக்குருப்பிரதானிகள்வைக்குங்கூட்டம், குருப்பிரதானிகள்கூடுஞ்சாலை, அந்தரங்கக்கூட்டம்.
Con-clūde', *v. a.* முடித்தல், தீர்த்தல்.
 to decide, தீர்ப்புக்கட்டுதல், முடிப்புக்கட்டுதல்.
 to infer, எண்ணுதல், துணிதல், அனுமானித்தல், மதித்தல், உத்தேசித்தல்.
Con-clūde', *v. n.* முடிதல், தீர்தல்.
Con-clūd'er, *s.* உத்தேசிக்கிறவன், முடிக்கிறவன்.
Con-clūd'ing, *a.* முடிவான, கடையான, ஈறுன, அந்தமான.
Con-clū'si-ble, *a.* தீர்மானிக்கத்தக்க, அனுமானிக்கத்தக்க, கருதத்தக்க.
Con-clū'sion, *s.* முடிவு, கடை, இறுதி.
 consequence, துணிவு, நிச்சயிப்பு, வரையறுப்பு, நிதானிப்பு, அனுமானிப்பு.
 final decision, முடிப்பு, தீர்ப்பு, தீர்மானம், அறுதி, அறுவாய்.
 inference, அனுமானம், எண்ணம், சித்தாந்தம், சித்தி.
 of a book, நூன்முடிவு.
Con-clū'sion-al, *a.* முடிவான, தீர்ந்த.
Con-clū'sive, *a.* முடிப்பான, தீர்ப்பான, தீர்க்கமான.
Con-clū'sive-ly, *adv.* தீர்க்கமாக, தீர்ப்பாக, முடிவாக.
Con-clū'sive-ness, *s.* அறுதி, தீர்ப்பு, தீர்க்கம், தீர்மானம், முடிப்பு.
Con-coct', *v. a.* சமிப்பித்தல், சீரணிப்பித்தல், செரிப்பித்தல்.
 to manage, திட்டம்பண்ணுதல், நடப்பித்தல்.
 to ripen, பழுப்பித்தல், கனியப்பண்ணுதல்.

to sublimate, சுத்திபண்ணுதல், தெளிவித்தல்.
to be concocted, சமித்தல், செரித்தல், சீரணித்தல், தெளிதல், கனிதல்.
Con-coc'tion, *s.* சமிப்பு, சீரணிப்பு.
as ripening, கனிகை, பழமாகுகை, பழுக்கை.
Con-coc'tive, *a.* சீரணிக்கிற, சீரணிக்கப்பண்ணத்தக்க, கனியப்பண்ணத்தக்க.
Con-com'i-tance, Con-com'i-tan-cy, *s.* கூட்டு, உடனிகழ்ச்சி, ஒற்றுமை, சேர்மானம், சகசம்.
Con-com'i-tant, *s.* கூட்டாளி, உடந்தைக்காரன், சேர்ந்தது.
Con-com'i-tant, *a.* கூடிய, சேர்மானமான, உடனிகழ்ச்சியான.
Con'cord, *s.* இசைவு, இணக்கம், பொருத்தம், ஒவ்வுகை, ஒருமிப்பு, சமாதானம், ஒருமனம், ஒருமை, ஒப்பு.
suitableness, தகுதி, இசைவு, இணக்கம்.
in grammar, சம்பந்தம், இலக்கணமுடைமை.
to live in concord, ஒத்திருத்தல், ஒத்துவாழ்தல், ஒத்துநடத்தல், ஐக்கமாய் வாழ்தல்.
Con-cord'ance, *s.* ஒற்றுமை, சம்பந்தம்.
a dictionary, ஒத்துவாக்கியஅகராதி.
Con-cord'an-cy, *s.* ஐக்கம், இணக்கம், ஒப்பு, ஒற்றுமை.
Con-cord'ant, *s.* இசைந்தது, ஒத்தது.
Con-cord'ant, *a.* இணக்கமான, இசைவான, ஒற்றுமையான.
Con-cord'ant-ly, *adv.* ஐக்கமாய், இணக்கமாய், இசைவாய்.
Con-cor'po-rāte, *v. a.* ஒன்றுக்குதல், திரட்டுதல், கூட்டுதல்.
Con-cor-po-rā'tion, *s.* திரட்சி, தொகுப்பு.
Con'cōurse, *s.* கூட்டம், திரட்சி, திரள், சங்கமம், மொய்ப்பு.
of people, சனக்கூட்டம், சனநெருக்கம், சனத்திரள்.
Con'cre-ment, *s.* திரட்சி, பலகலந்தொன்றுனதிரள்.
Con-cres'cence, *s.* வளருகை, திரளுகை, பெருகுகை.

Con'crēte, *s.* கட்டியாகுகை, பிண்டமாகுகை, தொகைப்படுகை, திரளுகை. as compound, கலப்பு, கட்டு, ஒற்றுமை.

Con-crēte', *v. a.* உறைவித்தல், கட்டியாக்குதல், இறுக்குதல், பிண்டமாக்குதல்.

Con-crēte', *v. n.* உறைதல், கட்டிபடுதல், இறுகுதல், பிண்டமாதல்.

Con'crēte, *a.* உறைவான, கட்டியான, பிண்டமான, ஒற்றுமையான. terms, பிரகிருதி, தாது, பகுதி, மூலம், அடி.

Con-crēte'ly, *adv.* தொகையாய், எச்சமாய்.

Con-crēte'ness, *s.* உறைவு, கட்டி, பிண்டம், தொகை.

Con-crē'tion, *s.* உறைகை, இறுக்கம், கடினம். as mass, கட்டி, பிண்டம்.

Con-crē'tive, *a.* உறையப்பண்ணுகிற, திரட்டுகிற, உரமாக்குகிற, ஒன்றாக்குகிற.

Con-cū'bin-age, *s.* வைப்பு, சோரமணம்.

Con'cu-bīne, *s.* வைப்பாட்டி, கூத்தி.

Con-cul'cāte, *v. a.* மிதித்தல்.

Con-cū'pis-cence, *s.* மோகவிச்சை, காமாதுரம், விரகாசை, மோகாதுரம்.

Con-cū'pis-cent, *a.* மோகாதுரமுள்ள, காமாதுரமான.

Con-cur', *v. n.* ஒத்துவருதல், சம்மதித்தல், இசைதல், இணங்குதல், பொருந்துதல், ஒத்துக்கொள்ளுதல். to co-operate, கூடிச்செய்தல்.

Con-cur'rence, *s.* சந்திப்பு, ஒற்றுமை. agreement, இணக்கம், இசைவு, பொருத்தம், ஐக்கம். approval, சம்மதம், அங்கிகரிப்பு, ஏற்பு, ஒப்புக்கொள்கை. co-operation, உடன்வேலை.

Con-cur'rent, *s.* சேருகை, ஐக்கப்படுகை, ஒன்றுபடுகை.

Con-cur'rent, *a.* இசைவான, இணக்கமான, சம்பந்தமான. testimony, ஒத்துவருமத்தாட்சி, இசைவானசாட்சி.

Con-cur'rent-ly, *adv.* இசைவாய், ஐக்கமாய், ஒத்து, சமுசாரமாய்.
Con-cus'sion, *s.* தாக்கு, மொத்து, குலுக்கு, அசைவு, அதிர்ப்பு, அதிர்ச்சி.
Con-cus'sive, *a.* அசையத்தக்க, சலனமான.
Con-demn', *v. a.* குற்றங்காணுதல், குற்றவாளியென்றுகண்டுபிடித்தல்.
to doom to punishment, ஆக்கினைக்கென்றுதீர்த்தல், ஆக்கினைக்குள்ளாக்குதல், தண்டனைக்குள்ளாக்குதல், குற்றம்பாரித்தல்.
to fine, தண்டம்போடுதல், அபராதம்போடுதல்.
to pass sentence, குற்றவாளியென்றுதீர்த்தல், குற்றஞ்சுமத்தல்.
to pronounce unfit, அடாதென்றுதீர்த்தல், பழுதென்குதல், தள்ளுதல், கழித்தல்.
to prove guilty, குற்றமென்றுஒப்பனைபண்ணுதல்.
Con-dem'na-ble, *a.* தண்டனைக்குள்ளாக்கப்படத்தக்க, குற்றமுள்ள.
Con-dem-nā'tion, *s.* ஆக்கினைக்குத்தீர்ப்பு, ஆகாதென்றதீர்ப்பு; ஆக்கினைக்குரியதன்மை, தண்டனை.
Con-dem'na-to-ry, *a.* ஆக்கினைக்கேதுவான, பழுதென்றுதள்ளின, கழிவான.
Con-dem'ner, *s.* ஆக்கினைத்தீர்ப்புச்செய்வோன், கழிக்கிறவன்.
Con-dens'a-ble, *a.* அடக்கக்கூடிய, ஒடுக்கக்கூடிய.
Con-dens'āte, *v. a.* அடக்குதல், ஒடுக்குதல், சுருக்குதல், அமர்த்துதல்.
Con-dens'āte, *v. n.* அடங்குதல், ஒடுங்குதல், சுருங்குதல், அமருதல்.
Con-dens'āte, *a.* அடக்கமான, ஒடுக்கமான, சுருக்கமான.
Con-den-sā'tion, *s.* அடக்கம், ஒடுக்கம், சுருக்கம், இறுக்கம்.
Con-dense', *v. a.* அடக்குதல், ஒடுக்குதல், சுருக்குதல்.
as inspissate, தடிக்கச்செய்தல், இறுகச்செய்தல்.
Con-dense', *a.* அடர்த்தியான, இறுக்கமான, கடினமான, நெருக்கமான.
Con-dens'er, *s.* உள்ளடக்குங்கருவி.

Con-dens'i-ty, *s.* அடக்கம், இறுக்கம்.
Con-de-scend', *v. n.* தயவுசெய்தல், அருளுதல்.
to look, தயவாய்ப்பார்த்தல், கடாட்சித்தல், அருள்நோக்குவைத்தல்.
Con-de-scend'ence, *s.* கருணை, தயவு, தயை, அருள்.
Con-de-scend'ing, *a.* தயவான, இரக்கமான.
Con-de-scend'ing-ly, *adv.* தயவாய்.
Con-de-scen'sion, *s.* தயவு, இரக்கம், கடாட்சம், தாட்சணியம்.
Con-dīgn', *a.* ஏற்ற, உரிய, தக்க, அடுத்த, தகுந்த.
Con-dīgn'ly, *adv.* தகுதியாய், ஏற்றதாய்.
Con'de-ment, *s.* தொடுசுவை.
Con-di'tion, *s.* தன்மை, நிலைமை, நிலைபரம், சீர், இயல்பு, நிருவாகம், அந்தஸ்து.
quality, குணம், பண்பு, இயல்பு.
rank, நிலைமை, படி, தரம், அந்தஸ்து.
terms given, &c., திட்டம், சட்டம், முகாந்திரம், பொருத்தம், பொருத்தனை.
to take on condition, ஈரொட்டாக வாங்குதல்.
Con-di'tion-al, *s.* எல்லை, அளவு.
Con-di'tion-al, *a.* திட்டமான, ஈரொட்டான, இரண்டுக்குற்ற.
Con-di'tion-al-ly, *adv.* பொருந்தினதிட்டத்தின்படி, ஈரொட்டாய்.
Con-di'tion-a-ry, *a.* உடன்பிடிக்கையுள்ள, ஈரொட்டான.
Con-di'tion-ed, *a.* பொருந்திக்கொண்ட, இணங்கின.
Con-dōle, *v. n.* பிறரோடுதுக்கங்கொண்டாடுதல், இரங்குதல், பரிதபித்தல், கூடித்துக்கித்தல், அனுதபித்தல்.
Con-dōle'ment, *s.* } பிறரோடுகொள்ளுந்துக்கம், இரக்கம், பரிதாபம், விதனம், அனுதாபம்.
Con-dō'lence, *s.* }
Con-dōl'er, *s.* அனுதாபப்படுவோன்.
Con'dor, *s.* பெருங்கழுகு.
Con-dūce', *v. n.* ஏதுவாகுதல், காரியப்படுதல்.
Con-dūce'ment, *s.* ஏது, ஏதுவாகுகை, ஏவுகை.

Con-du'ci-ble, *a.* ஏதுவாகுகிற, வருவி
க்கிற, ஏவுகிற.
Con-dū'ci-ble-ness, *s.* ஏவுந்தன்மை.
Con-dū'ci-bly, *adv.* ஏவத்தக்கவிதமாய்,
ஏற்றவிதமாய்.
Con-dū'cive, *a.* காரணமான, ஏதுவான.
Con-dū'cive-ness, *s.* ஏது, காரணம்.
Con'duct, *s.* நடக்கை, ஒழுக்கம், ஆசா
ரம், கமனம்.
guard, convoy, துணை, காவல், வழி
த்துணை, மெய்க்காவல்.
management, பராபரிப்பு, விசாரணை,
காரியவிசாரிப்பு, நடப்பிப்பு.
Con-duct', *v. a.* நடத்துதல், இயற்றுதல்,
காரியப்படுத்துதல்.
to escort, துணைபோதல்.
to give direction to, போக்குதல், ஓ
ட்டுதல், துரத்துதல்.
to guide, protect, கூட்டிக்கொண்டு
போகுதல், துணைப்போகுதல்.
to show the way, வழிகாட்டுதல், வ
ழிநடத்துதல்.
one's self, நடத்தல், நடத்துதல்.
water, &c., நீர்பாய்ச்சுதல், ஒழுக்கு
தல்.
Con-duct'or, *s.* வழிகாட்டி, துணையா
ள், நடத்துகிறவன்.
as commander, தலைவன்.
in electricity, மின்வாங்கி, சபலாக
ருஷணி, மின்சத்துவதாரை.
Con'duit, *s.* நீரோடுங்குழல், நீர்த்தூம்பு.
as channel, வாய்க்கால், மதகு.
Cōne, *s.* குவிந்தவடிவு.
Cō'ney, *s.* (*see* Cony.) முயல், குழிமு
யல்.
Con-fab'u-lāte, *v. n.* பேசிக்கொள்ளு
தல்.
Con-fab-u-lā'tion, *s.* பேச்சு, கொஞ்சு
மொழி.
Con'fect, } *s.* இனிப்பிட்டபண்ட
Con-fec'tion, } ம், இனித்தபண்டம்,
சீனிவடகம், அதிரசம்.
Con-fec'tion-er, *s.* அதிரசம்விற்போன்.
Con-fec'tion-er-y, *s.* இனிப்புப்பண்ட
ம், இனிப்புப்பண்டக்கடை.
Con-fed'er-a-cy, *s.* பொருத்தம், உடன்
படிக்கை, பந்துக்கட்டு, புனைசுரு
ட்டு.

as persons confederate, பந்துக்கட்டாயிருக்கிறவர்கள்.

Con-fed'er-ate, *s.* ஐக்கப்பட்டவன், பந்திக்கப்பட்டவன், சம்பந்தப்பட்டவன்.

as nation, ஐக்கியராச்சியம்.

Con-fed'er-ate, *v. a.* பொருத்தம்பண்ணிக்கொள்ளுதல், ஒப்பந்தம்பண்ணிக்கொள்ளுதல்.

to be confederate, கூடிக்கொள்ளுதல், உடன்படிக்கைபண்ணுதல்.

Con-fed'er-ate, *a.* உடன்படிக்கையான, ஒன்றுகூட்டான.

Con-fed-er-ā'tion, *s.* உடன்படிக்கை, பந்துக்கட்டு, பொருத்தம்.

Con-fer', *v. a.* ஈதல், கொடுத்தல்.

favors, தயவுசெய்தல், பேறளித்தல்.

honors, வரிசைகொடுத்தல்.

titles, பட்டங்கட்டுதல், சூட்டுதல்.

Con-fer', *v. n.* பேசிக்கொள்ளுதல், யோசித்தல், சம்பாஷித்தல்.

Con'fer-ence, *s.* பேச்சு, சம்பாஷணை, ஆலோசனை, ஆலோசனைக்கூட்டம்.

Con-fer'rer, *s.* ஆலோசனைக்காரன், ஈவோன்.

Con-fess', *v. a.* ஒத்துக்கொள்ளுதல், அறிவித்தல், அறிக்கையிடுதல், பிரதிக்கினைபண்ணுதல், உள்ளத்தைச்சொல்லியறிவித்தல்.

Con-fess'ed-ly, *adv.* ஒத்துக்கொள்ளத்தக்கதாய், வெட்டவெளிச்சமாய், சந்தேகமின்றி.

Con-fes'sion, *s.* குற்றப்பிரசித்தம், ஒத்துக்கொள்ளுகை, அறிவிப்பு, அறிக்கை, பிரதிக்கினை.

as creed, விசுவாசப்பிரமாணம், சமயகோட்பாடு.

auricular, பாவசங்கீர்த்தனம்.

fruits of auricular, பாபோச்சாரணம்.

Con-fes'sion-al, } *s.* பாவஅறிக்கைகேட்குங்குருபீடம், பாவசங்கீர்த்தனங்கேட்குங்குருவின்ஆசனம்.
Con-fes'sion-a-ry, }

Con-fes'sion-a-ry, *a.* பாவசங்கீர்த்தனத்துக்குரிய.

Con-fess'or, *s.* பிரதிக்கினைசெய்வோன், பாவசங்கீர்த்தனம்பண்ணுவோன்.

as confessing priest, பாவவிமோசனங்கூறுங்குரு.

Con'fi-dant, s. (*see* Confident.) அந்தரங்கன், உள்ளாள்.

Con-fīde', *v. a.* நம்புதல், நம்பிக்கைகொள்ளுதல், நம்பிக்கைவைத்தல், கடைப்பிடித்தல்.

to intrust, நம்பிக்கைக்குக்கொடுத்தல், அடைக்கலங்கொடுத்தல், ஒப்புவித்தல்.

Con'fi-dence, s. நம்பிக்கை, பிடி, பிடிமானம்.

assurance, உறுதிப்பாடு, கடைப்பிடி, நிண்ணயம், நிச்சயிப்பு, தேற்றம்.

boldness, courage, திடன், தைரியம், துணிவு, வீரம், திரம்.

excessive boldness, துணிகரம், நெஞ்சுத்துணிவு.

Con'fi-dent, s. அந்தரங்கன், உள்ளாள், நண்பன், உள்ளாந்தரங்கன்.

Con'fi-dent, *a.* நம்பிக்கையுள்ள, உறுதியுள்ள.

bold, தைரியமுள்ள, திடனுள்ள, திடாரிக்கமான.

certain, நிசமான, நிச்சயமான, உறுதியான.

positive, dogmatical, சாதிப்பான, ஒருபிடியான, பிடிவாதமுள்ள, குறட்டுப்பிடியான.

Con-fi-den'tial, *a.* நம்பிக்கையுள்ள, அந்தரங்கமான.

person, நம்பத்தக்கவன், அந்தரங்கன்.

Con-fi-den'tial-ly, *adv.* நம்பிக்கையாய்.

Con'fi-dent-ly, *adv.* நம்பிக்கையாய், சந்தேகமில்லாமையாய், உறுதியாய்.

as positively, பிடிவாதமாய், நிச்சயமாய், திட்டமாய், உறுதியாய்.

Con'fi-dent-ness, s. நம்பிக்கை, உறுதி, திட்டம், திடாரிக்கம், பூரணநம்பிக்கை.

Con-fīd'er, s. நம்புவோன்.

Con-fig'u-rāte, *v. n.* கிரகநோக்குதல், கிரகம்பார்க்குதல்.

Con-fig-u-rā'tion, s. கோலம், வடிவு.

of planets, கிரகநோக்கு, கிரகப்பார்வை.

Con-fig'ure, *v. a.* உருவாக்குதல், வடிவமாக்குதல்.

Con-fīn'a-ble, *a.* பந்திக்கக்கூடிய.
Con'fīne, *s.* எல்லை, இறுவரையம்.
Con-fīne', *v. a.* கட்டுதல்.
to imprison, காவலில்வைத்தல், சிறைப்படுத்தல், காவற்பண்ணுதல்.
to limit, restrain, மட்டுப்படுத்துதல், எல்லைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல், மறித்துக்கட்டுதல்.
to make close, to crowd, நெருக்குதல், அடர்த்தல்.
to make fast, பலப்பித்தல்.
to shut up, அடைத்தல், மறித்தல், கட்டிவைத்தல்.
to tie, bind, கட்டுதல், பந்தித்தல், பூட்டுதல்.
to wedge in, இடுக்குதல், நெருக்குதல்.
Con-fīn'ed, *a.* ஒடுக்கமான, நெருக்கமான, இடுக்கமான, இடைஞ்சலான, பூட்டப்பட்ட, கட்டுப்பட்ட.
as in child birth, (*see* Confinement.) வயாவினால்முடங்கின, கருமாரியுள்ள.
prospect, முடுகினகாட்சி, குறுகினகாட்சி.
room, நெருக்கமானஅறை, ஒடுக்கமானஅறை, ஒடுங்கினஅறை, முட்டுவீடு.
views, எல்லைப்பட்டவெண்ணம், பாலயூகம், அற்பாலோசனை.
to be confined, நெருங்குதல், ஒடுங்குதல், தடங்குதல், இடுக்கப்படுதல், மறிபடுதல், மட்டுப்படுதல், கட்டுப்படுதல்.
Con-fīne'ment, *s.* தொடக்கு, பந்திப்பு.
as child-birth, பிள்ளைப்பேறு, பிள்ளைப்பேற்றுமுடக்கம், வயாமுடக்கம், பிரசவகாலம், பிரசூதகாலம், வயாவருத்தம்.
imprisonment, காவல், சிறை, கட்டுப்பாடு, அடைப்பு.
restraint, கட்டுமுகனை, கட்டுப்பாடு, பந்தம், நிபந்தனம்.
by sickness, முடக்கம், கிடைப்பாடு.
tightness, இடைஞ்சல், இறுக்கம்.
voluntary restraint, கட்டுமுகனை, கட்டுப்பாடு, அடக்கம், தன்னொறுப்பு.
want of room, நெருக்கம், முட்டு, ஒடுக்கம்.

Con-fīn'er, *s.* பந்திக்கிறவன், அடைக்கிறவன், அடக்குகிறவன்.

Con-fĭrm', *v. a.* பலப்பித்தல், திரப்படுத்தல், உரப்பித்தல்.
catechumens, திட்டப்படுத்தல், உறுதிபூசுதல்.
to fix, settle, establish, நிறுத்துதல், ஸ்தாபித்தல், ஏற்படுத்துதல், நிலைப்படுத்துதல்.
to make certain, நிச்சயப்படுத்துதல், திடப்படுத்துதல்.
to ratify, உறுதிப்படுத்துதல், திடப்படுத்துதல்.

Con-fĭrm'a-ble, *a.* உறுதிப்படுத்தத்தக்க.

Con-fĭrm-a'tion, *s.* உறுதி, உறுதிப்பாடு, திடம், ஸ்திரம், உரப்பு, பலப்பு.
of catechumens, திடப்படுத்துகை, உறுதிபூசுகை.
as additional evidence, மேற்சாட்சி, மேலத்தாட்சி, மேலொப்பனை.
as additional strength, மேலுறுதி, மேற்பலப்பு.

Con-fĭrm'a-tive, *a.* உறுதிப்படுத்துகிற, உறுதிப்படுத்துதற்கேற்ற.

Con-fĭrm'a-tor, *s.* உறுதிப்படுத்துகிறவன்.

Con-fĭrm'a-to-ry, *a.* மேலுறுதியான, மேற்பலப்பான.

Con-fĭrm'ed-ness, *s.* அசையாநிலை, உறுதியானநிலை.

Con-fĭrm'er, *s.* உறுதிப்படுத்துகிறவன், மேற்சாட்சிக்காரன்.

Con-fis'ca-ble, *a.* பறிகொடுக்கத்தக்க, இழந்துபோகத்தக்க.

Con-fis'cate, *v. a.* பறித்தெடுத்தல், இழந்துபோகப்பண்ணுதல்.

Con-fis'cate, *a.* பறித்துக்கொண்ட.
goods, பறித்தெடுக்கப்பட்டது, அபகரிக்கப்பட்டது.

Con-fis-cā'tion, *s.* பறித்தெடுக்கத்தீர்ப்புச்சொல்லுகை.

Con'fis-cā-tor, *s.* பறித்தெடுக்கத்தீர்ப்புச்செய்வோன்.

Con-fix', *v. a.* ஊன்றல், தைத்தல், நாட்டுதல்.

Con-fix'ure, *s.* ஊன்றுகை, நாட்டுகை, திரப்படுத்துகை.

Con-flā'grant, *a.* எரிகிற, வேகிற.
Con-fla-grā'tion, *s.* பெருநெருப்பு, பெருந்தீ.
of the world, அக்கினிப்பிரளயம், ஊழித்தீ.
Con-flā'tion, *s.* இணைக்குழலூதுகை.
Con'flict, *s.* மோதுகை, முட்டுகை, தாக்கு.
as agony of death, மரணஅவஸ்தை.
combat, போர், போராட்டம், யுத்தம், கடும்போர், முட்டுயுத்தம்.
contention, யுத்தம், சண்டை, பிணக்கு, இகல், முரண்.
opposition, ஒவ்வாமை, எதிரிடை, விரோதம், முரண்.
struggle, போராட்டம், பிரயாசம், உலைச்சல், தொந்தரவு.
mental struggle, மனப்போராட்டம், மனத்தொந்தரவு.
Con-flict', *v. n.* முட்டுதல், மோதுதல், தாக்குதல், எதிர்த்தல், விரோதித்தல்.
to fight, போராடுதல், சண்டைபிடித்தல்.
to strive, struggle, பிரயாசப்படுதல், போராட்டம்பண்ணுதல்.
Con-flict'ing, *a.* போராட்டமான, யுத்தஞ்செய்கிற, விரோதிக்கிற.
opinions, &c., ஒவ்வாத, பொருந்தாத, மாறுபாடான.
Con'flu-ence, *s.* சேர்ந்தநீர்ப்பாய்ச்சல், ஆற்றுச்சந்தி, ஆற்றுச்சங்கமுகம்.
concourse, பெருங்கூட்டம், சனநெருக்கம், சங்கம், திரள்.
Con'flu-ent, *a.* சந்தித்துப்பாய்கிற, ஒன்றித்தோடுகிற.
Con'flux, *s.* ஆற்றுச்சந்தி, சந்திக்கை, பொருந்துகை, கூட்டம்.
as crowd, சங்கம், கூட்டம், திரள்.
Con-form', *v. a.* ஒன்றைப்போலாக்குதல், ஒத்திருக்கச்செய்தல், இணக்குதல், போலியாக்குதல்.
Con-form', *v. n.* ஒத்தல், இசைதல், இணங்குதல், போலாதல்.
Con-form'a-ble, *a.* ஒப்பான, இணக்கமான, இசைவுள்ள.
Con-form'a-bly, *adv.* ஒப்பாய், இசைவாய், அமைவாய், பொருத்தமாய்.

Con-form-ā'tion, *s.* இசைவு, ஒப்பு, இணக்கம், அனுசாரம், சாங்கம், தன்சாயலாக்குகை.

Con-form'er, } *s.* இசையநடப்போன், அனுசாரி.
Con-form'ist, }

Con-form'i-ty, *s.* இசைவு, இணக்கம், அமைவு, ஒப்பு, அனுசாரம்.

Con-found', *v. a.* குழப்புதல், கலக்குதல், தடுமாற்றம்பண்ணுதல், மலைக்கச்செய்தல்.
to dismay, ஏங்கப்பண்ணுதல், பிரமிக்கப்பண்ணுதல், திகைக்கப்பண்ணுதல்.
to disorder, கலைத்தல், குழப்பிவிடுதல், தாறுமாறுக்குதல்.
to mistake one for another, ஒன்றையொன்றாகக்கொள்ளுதல், விகற்பமாயெண்ணுதல், திரியக்காண்டல்.
to perplex, கலக்குதல், மயக்குதல், மலைக்கச்செய்தல்.
to be confounded, கலங்குதல், மலைத்தல், திகைத்தல்.

Con-found'er, *s.* குழப்புகிறவன், ஆட்சேபிக்கிறவன், மலைக்கப்பண்ணுகிறவன்.

Con-frŏnt', *v. a.* முகமுகமாய்நிற்றல், எதிரெதிராய்நிற்றல், எதிர்முகமாய்நிற்றல், எதிராக்குதல், நேர்முகமாக்குதல்.
to compare, ஒத்துப்பார்த்தல், ஒப்பிடுதல், எதிர்வைத்தல்.

Con-fron-tā'tion, *s.* எதிர்முகமாய்நிறுத்துகை, எதிர்நிலை.

Con-fūse', *v. a.* குழப்புதல், கலக்கடிபண்ணுதல்.
to perplex, மனங்கலங்கச்செய்தல், மனதைமயக்குதல்.

Con-fūs'ed, *a.* கலக்கமான, குழப்படியான, தாறுமாறுன.
to be confused, கலங்குதல், குழம்புதல், பிரமித்தல், மலைத்தல், தடுமாறுதல், பதறுதல், தாறுமாறுதல்.

Con-fūs'ed-ly, *adv.* குழப்பமாய், கலக்கமாய், தடுமாற்றமாய்.

Con-fūs'ed-ness, *s.* கலக்கம், குழப்பம், தாறுமாறு, தடுமாற்றம்.

Con-fūse'ly, *adv.* மங்கலாய், தெளிவின்மையாய்.

Con-fū'sion, s. குழப்பம், கலக்கடி, தடுமாற்றம், தாறுமாறு.
as astonishment, மலைப்பு, மலைவு, பிரமிப்பு, மார்ச்சரியம்.
as overthrow, சங்காரம், குழப்பம், தாறுமாறு.
of face, முகவாட்டம், கோட்டம்.
Con-fūt'a-ble, a. மறுக்கப்படத்தக்க, நிராகரிக்கத்தக்க, ஆட்சேபிக்கப்படத்தக்க.
Con-fū'tant, s. எதிர்த்துமடக்குகிறவன், நிராகரிக்கிறவன், திக்கரிக்கிறவன்.
Con-fū-tā'tion, s. மறுப்பு, அழிப்பு, நிராகரிப்பு, திக்காரம், ஆட்சேபம்.
Con-fūte', v. a. மறுத்தல், அழித்தல், நிராகரித்தல், நியாயமறுத்துரைத்தல், திக்கரித்தல்.
Con-fūt'er, s. எதிர்த்துமடக்குவோன், ஆட்சேபிக்கிறவன், நிராகரிப்போன்.
Con'gē, s. அனுப்பு, விடை, பிரயாணசோபனம், பயணஉபசாரவார்த்தை.
Con-gēal', v. a. உறையச்செய்தல், கடினமாக்குதல், இறுகச்செய்தல்.
Con-gēal', v. n. உறைதல், கட்டியாகுதல், இறுகுதல், கடினமாதல், திரளுதல்.
Con-gēal'a-ble, a. உறையத்தக்க, கட்டிபடத்தக்க.
Con-gēal'ment, } s. உறைவு, இறுகுகை, வைரிப்பு, கண்டிப்பு.
Con-ge-lā'tion, }
Con'ge-ner, s. சம்பந்தமானது, ஒரேயியல்புள்ளது, போலிவஸ்து, ஓரினவஸ்து.
Con-gē'ni-al, a. இனமான, உறவான, இணக்கமான.
Con-ge-ni-al'i-ty, } s. இணக்கம், இசைவு, பிடிப்பு.
Con-gē'ni-al-ness, }
a natural affinity, சம்பந்தம், ஒத்தது, உறவு.
Con-gē'ri-ēs, s. திரள், தொகை, பிண்டம்.
Con-jest', v. a. திரட்டுதல், கூட்டுதல், பிண்டமாக்குதல்.
Con-ges'tion, s. சூலைத்திரட்சி, நீர்த்திரட்சி, வீக்கம்.
Con-glō'bāte, } v. a. திரட்டுதல், உண்டையாக்கல், கவளமாக்குதல்.
Con-glōbe', }

Con-glō′bate, *a.* உண்டையான, திரண்ட, கவளமான.

Con-glo-bā′tion, *s.* திரட்டு, உண்டை, கவளம்.

Con-glob′u-lāte, *v. n.* உண்டையாகுதல், திரளுதல், கவளமாதல்.

Con-glom′er-āte, *v. a.* திரட்டுதல், உண்டையாக்குதல், கவளித்தல்.

Con-glom′er-āte, *a.* திரட்டப்பட்ட, திரண்ட, உண்டையான.

Con-glom-er-ā′tion, *s.* திரட்டு, திரளை, குமிழாகுகை.

Con-glū′ti-nāte, *v. a.* பசையிட்டொட்டுதல்.

Con-glū-ti-nā′tion, *s.* பசையிட்டொட்டுகை, பொருத்துகை.

Con-glū′ti-nā-tor, *s.* ஒட்டப்பண்ணத்தக்கது, பசை.

Con-grat′u-lant, *a.* வாழ்த்துகிற, மங்கலஞ்சொல்லுகிற.

Con-grat′u-lāte, *v. a.* சோபனஞ்சொல்லுதல், மங்கலஞ்சொல்லுதல், வாழ்த்துதல்.

Con-grat-u-lā′tion, *s.* சோபனவார்த்தை, மங்கலச்சொல், சுகமொழி, வாழ்த்து, பல்லாண்டு.

Con-grat′u-lā-tor, *s.* வாழ்த்துவோன், சோபனஞ்சொல்லுவோன்.

Con-grat′u-la-to-ry, *a.* சோபனமான, மங்கலமுள்ள, வாழ்த்துள்ள.

Con′gre-gāte, *v. a.* கூட்டுதல், திரட்டுதல், சேர்த்தல்.

Con′gre-gāte, *v. n.* கூடிக்கொள்ளுதல், சேர்தல், திரளுதல், மொய்த்தல்.

Con′gre-gāte, *a.* திரண்ட, திரட்டின, சேர்க்கப்பட்ட, திரட்டப்பட்ட.

Con-gre-gā′tion, *s.* சனக்கூட்டம், சபை, சங்கம், சமுதாயம்.

Con-gre-gā′tion-al, *a.* சபைக்கடுத்த.

Con′gress, *s.* சங்கம், கூட்டம்.
 in conflict, முட்டுயுத்தம்.
 of delegates, ஆலோசனைச்சங்கம், மந்திராலோசனைச்சங்கம், மந்தனம்.

Con-gres′sion-al, *a.* ஆலோசனைச்சங்கத்துக்குரிய.

Con′gru-ent, *a.* ஏற்ற, உரிய, இணக்கமான, ஒத்த.

Con-grū'i-ty, *s.* இணக்கம், ஒப்பு, தகுதி, தகைமை, இசைவு.
Con'gru-ous, *a.* ஏற்ற, இசைவான, தகுந்த.
Con'gy, *s.* கஞ்சி, மோழை, காடி.
Con'ic, Con'ic-al, Cō'ni-form, *a.* குவிந்தவடிவான, குவிந்த, மொட்டான, திரண்ட, சூச்சிய.
Con'ic-al-ly, *adv.* குவிந்தவடிவாய், கணையமாய், மொட்டாய்.
Con'ics, *s.* சூச்சியகணிதம்.
Con-ject', *v. a.* எறிதல்.
Con-ject'or, *s.* உத்தேசிக்கிறவன், நினைக்கிறவன், யோசிக்கிறவன்.
Con-ject'u-ral, *a.* உத்தேசமான, திட்டமான, சந்தேகமுள்ள.
Con-ject'u-ral-ly, *adv*, உத்தேசமாய், மதிப்பாய்.
Con-ject'ure, *s.* எண்ணம், அளவிடை, உத்தேசம், திட்டம், பாணிப்பு.
Con-ject'ure, *v. a.* எண்ணுதல், அளவிடுதல், உத்தேசித்தல், திட்டம்பார்த்தல், பாணித்தல்.
Con-ject'ur-er, *s.* அளவிடுவோன், உத்தேசிக்கிறவன், எண்ணுகிறவன்.
Con-join', *v. a.* இணக்குதல், இசைத்தல், இணைத்தல், பொருத்துதல், கூட்டுதல், சேர்த்தல்.
Con-join', *v. n.* கூடுதல், சந்தித்தல், இசைதல், பொருந்துதல்.
Con-joint', *a.* ஒன்றித்த, இசைந்த, இணைந்த.
Con-joint'ly, *adv.* ஒன்றாய், ஏகமாய், கூட்டமாய், ஒருமிக்க.
Con'ju-gal, *a.* இல்லறமான, இல்வாழ்வான, விவாகத்துக்குரிய.
life, சமுசாரவாழ்வு, இல்வாழ்க்கை.
Con'ju-gal-ly, *adv.* விவாகமுறையாய், சமுசாரமார்க்கமாய்.
Con'ju-gate, *s.* குறுக்குவிட்டம், நாராசம்.
Con'ju-gāte, *v. a.* வினைச்சொல்லைமுறையாய்வகுத்துவேறுபடுத்தல், திரித்துச்சொல்லுதல், கிரியாமாலைப்படுத்தல்.
Con-ju-gā'tion, *s.* புணர்ப்பு, புணர்ச்சி.
of verbs, கிரியாமாலை, பதப்பிரிப்பு, பதச்சேதம்.

Con-junct', *a.* இணைக்கப்பட்ட, சேர்க்கப்பட்ட.
Con-junc'tion, *s.* இணைவு, ஒட்டு, கூட்டம், புணர்ச்சி, ஐக்கம்.
in grammar, புணரிடைச்சொல், எண்ணும்மை, இறந்தது தழீஇயஉம்மை, எச்சவும்மை.
copulative, கூட்டிடைச்சொல், இயைபிடைச்சொல்.
disjunctive, பிரிநிலையிடைச்சொல்.
of planets, கிரகசங்கம், கிரகயோகம், கிரகசங்கமம், கிரகாத்துவம்.
Con-junc'tive-ly, *adv.* ஒன்றாய், ஒருமிக்க, ஐக்கியமாய், கூட.
Con-junc'tive, *a.* இணக்கமான, இசைவான, இணைவான, ஐக்கியமான.
Con-junc'tive-ness, *s.* இணக்கம், இசைவு, ஐக்கம்.
Con-junct'ly, *adv.* கூட, ஒன்றாய், ஒருமிக்க.
Con-junct'ure, *s.* ஐக்கியம், அன்னியோன்னியம்.
as occasion, தறுவாய், உற்றசமயம்.
Cŏn-ju-rā'tion, *s.* ஆணை, மந்திரவித்தை, சாலவித்தை, குறி, மாந்திரிகம், கட்டு.
Con-jūre', *v. a.* ஆணைசெய்தல், குறிசொல்லுதல், உச்சாடணம்பண்ணுதல், மந்திரஞ்சொல்லல், சபதஞ்சொல்லல்.
Cŏn'ju-rer, *s.* கட்டுக்காரன், வித்தியாபாரகன், தம்பனவித்தைக்காரன், மாந்திரியன்.
a sea conjurer, கடல்கட்டுவோன், சலத்தம்பனகாரன்.
Con-jūr'ing, *s.* தம்பித்தல், கட்டுதல், உறுக்கு, கட்டு, தம்பனம்.
the art, மாந்திரியவித்தை, சாலவித்தை, மாயவித்தை.
Con-jūre'ment, *s.* தம்பனஞ்செய்கை, கட்டுகை, உறுக்குகை, ஆணையிட்டுக்கேட்கை.
Con-nas'cence, *s.* உடன்பிறப்பு, இரட்டைப்பிறவி.
Con'nāte, *a.* உடன்பிறந்த, உடன்பிறப்பான, இரட்டைப்பிறப்பான.
Con-nat'u-ral, *a.* கூடப்பிறந்த, ஏகசுபாவமுள்ள.

Con-nat'u-ral-ness, *s.* சுபாவவைக்கிய ம், சகோதரத்தன்மை.
Con-nect', *v. a.* இணைத்தல், பொருத்து தல், இசைத்தல், சேர்த்தல், புணர்த் தல்.
Con-nec'tion, *s.* இணைவு, சம்பந்தம், ப ற்று, உடந்தை, கூட்டம், சார்பு, கூ ட்டு, சேர்மானம், தொடர்ச்சி.
as context, அடுத்தவசனம்.
united body, சங்கத்தார், கூட்டத்தார்.
Con-nect'ive, *s.* இசைவு.
in grammar, சாரியை, இடைநிலை, சந்தியெழுத்து, இணைமொழி.
Con-nect'ive, *a.* இசைக்கிற, இணைக்கி ற, சந்திசெய்கிற.
Con-nect'ive-ly, *adv.* இசைவாய், சந்தி யாய்.
Con-nex', *v. a.* இணைத்தல்.
Con-nex'ions, *s. (pl.)* உறவர், சேர்ந்தா ர், இனத்தார்.
Con-nīv'ance, *s.* கண்சாடை, கண்சாய் ப்பு, கண்டுங்காணாமை, உபேட்சை.
Con-nīve', *v. n.* கண்டுசாய்ப்பாய்விடுத ல், உபேட்சைபண்ணல்.
Con-nīv'-en-cy, *s.* கண்சாடை, உபேட் சை.
Con-nīv'ent, *a.* கண்டுங்காணாமையாயி ருக்கிற, கண்சாடையான.
Con-nīv'er, *s.* கண்சாடைக்காரன்.
Con-nois-seūr', *s.* வித்தைவல்லபன், நு ண்ணியன்.
Con-nōte', *v. a.* கூடஅறிவித்தல், குறி த்தல்.
Con-nū'bi-al, *a.* விவாகநிலையான, இ ல்வாழ்வுக்குரிய.
love, தொடர்ந்தஅன்பு, இராகம், அ நுராகம்.
Con'quer, *v. a.* வெல்லுதல், வெற்றி கொள்ளுதல், சயித்தல், சயங்கொள் ளுதல்.
in a game, race, &c., கெலித்தல், வெல்லுதல்.
to drive, or cause to flee, ஓட்டுதல், துரத்துதல்.
to be conquered, தோற்றல், புறங் கொடுத்தல்.
a conquered country, வெற்றிகொ ண்டநாடு, வென்றெடுத்தநாடு.

Con'quer-a-ble, *a.* வெல்லப்படத்தக்க, செயிக்கப்படக்கூடிய.

Con'quer-or, *s.* வெற்றியாளன், வென்றோன், விசயன்.
 conqueror's song, கொய்யோ, சயசங்கீதம், சயோற்காரம்,ஆவலங்கொட்டுகை.

Con'quest, *s.* வெற்றி, சயம், விசயம்.

Con-san'guine, *a.* இரத்தக்கலப்பான, ஒரேவமிசமான.

Con-san-guin'i-ty, *s.* இரத்தஉறவு, இரத்தக்கலப்பு, உரிமை, உரிமைவழியுறவு.

Con'science, *s.* மனச்சாட்சி, தனனியாயம், பகுத்தறிவு, நன்மைதின்மையறிகிறசுபாபவறிவு, சீவசாட்சி.
 case of, மனச்சங்கடம், மனச்சந்தேகம்.

Con-sci-en'tious, *a.* அந்தர்க்கரணசாட்சிபெற்ற, உணர்ச்சியுள்ள, மனநேர்மையுள்ள.
 conduct, மனச்சாட்சிக்கேற்றசெய்கை.

Con-sci-en'tious-ly, *adv.* மனச்சாட்சிப்படி, நல்மனதாய்.

Con-sci-en'tious-ness, *s.* மனச்சாட்சி, அந்தர்க்கரணசாட்சி.

Con'scion-a-ble, *a.* மனநீதியுள்ள.

Con'scion-a-bly, *adv.* மனநீதிப்படி.

Con'scious, *a.* நெஞ்சறிந்த, அகவறிவுள்ள, பிறக்கினையுள்ள.

Con'scious-ly, *adv.* அறிவோடே, நெஞ்சறிய, மனதார, தன்னறிவாய்.

Con'scious-ness, *s.* உணர்ச்சி, உணர்வு, அறிவு, தன்னறிவு.
 of guilt, தன்குற்றங்கண்டவுணர்ச்சி, தற்பாவவுணர்ச்சி.

Con'script, *s.* பேரெழுதப்பட்டசேவகன்.

Con'script, *a.* எழுதப்பட்ட, பதியப்பட்ட.

Con-scrip'tion, *s.* பேரெழுதப்படுகை.

Con'se-crāte, *v. a.* பிரதிட்டைபண்ணுதல், நியமித்தல், நேர்தல், வரித்தல், ஒப்புவித்தல்.
 an idol, &c., ஆவாகனம்பண்ணுதல், தாபித்தல்.

a king, அபிஷேகம்பண்ணுதல், தா பித்தல், முடிசூட்டுதல்.
a priest, அபிஷேகம்பண்ணுதல்.
one's self, தன்னையொப்புக்கொடுத் தல்.
a temple, or church, பிரதிட்டைப ண்ணுதல்.
the eucharist, ஆசீர்வதித்தல்.
Con'se-crāte, *a.* நிவேதிக்கப்பட்ட, நே ர்ந்துவிடப்பட்ட.
Con'se-crā-ted, *a.* நியமித்த, நேர்ந்த, அபிஷேகம்பண்ணப்பட்ட, பிரதிட் டையான. [லம்.
water, புண்ணியதீர்த்தம், பரிசுத்தச
Con-se-crā'tion, *s.* பிரதிஷ்டை, நியமி ப்பு, அபிஷேகம்.
of an image, அபிஷேகம்.
of one's self, நியமித்தல், நேர்தல்.
of the eucharist, நிவேதனம்.
of a priest, king, &c., அபிஷேகம், தாபிதம்.
of a temple, church, &c., கோயிற் பிரதிஷ்டை.
Con'se-crā-tor, *s.* அபிஷேகம்பண்ணு கிறவன், பிரதிஷ்டைசெய்கிறவன்.
Con-se-cū'tion, *s.* தொடர்ச்சி, தொடர் பு, பின்வருகை, நிரை, தோரணி.
as a series, சங்கிலிக்கோவை.
in astronomy, சாந்திரமாதம்.
Con-sec'u-tive, *a.* தொடர்ச்சியான, சங் கிலியான, அணியணியான.
Con-sec'u-tive-ly, *adv.* தொடர்ச்சியாய்.
Con-sent', *s.* இசைவு, சம்மதம், அநும தி, பிரியம், இணக்கம், உடன்பாடு.
Con-sent', *v. n.* இசைதல், சம்மதித்த ல், உடன்படுதல், இணங்குதல், ஒத் துக்கொள்ளுதல், பிரியப்படுதல்.
Con-sent'er, *s.* சம்மதிக்கிறவன், உட ன்படுகிறவன்.
Con-sen'tient, *a.* பொருந்துகிற, ஒரும னப்படுகிற, ஒத்த, இணங்குகிற.
Con'se-quence, *s.* காரணத்தாலாகுங்கா ரியம், பலம், காரணசித்தி.
as importance, கணிசம், மதிப்பு, பி ரதானம், முக்கியம்.
self-consequence, நிமிர்ச்சி, அகந்தை, அகங்காரம், மேட்டிமை, செருக்கு, மமதை.

Con'se-quent, *s.* தொடர்ந்துவருவது, தொடர்வு.
in logic, அனுமேயம், காரணத்தால் வந்தகாரியம்.
Con-se-quen'tial, *a.* ஏதுவுள்ள, தொடர்ச்சியுள்ள, சம்பந்தமுள்ள.
as conceited; இறுமாப்புள்ள.
Con-se-quen'tial-ly, *adv.* ஆதலால், தொடர்ச்சியாய்.
as conceitedly, செறுவமாய்.
Con-se-quen'tial-ness, } *s.* } தொடர்ச்சி.
Con'se-quent-ness,
Con'se-quent-ly, *adv.* ஆதலால், அப்படியிருப்பதால்.
Con-serv'ant, *a.* பாதுகாக்கிற.
Con-ser-vā'tion, *s.* பதனழியாதுவைத்தல், பரிபாலனம்பண்ணுகை.
Con-serv'a-tive, } *a.* } பாதுகாக்கத்தக்க, பரிபாலிக்கத்தக்க.
Con-serv'a-to-ry,
Con-ser-vā'tor, *s.* பாதுகாப்போன், சமாதானகாரகன்.
Con'serve, *s.* தித்திப்புப்பண்டம், இனிப்புப்பணிகாரம், அதிரசம்.
Con-serve', *v. a.* பரிபாலித்தல், பாதுகாத்தல்.
Con-serv'er, *s.* பாதுகாப்போன், பரிபாலிப்போன், காவலன்.
Con-ses'sion, *s.* கூட்டம், கூட்டிருக்கை.
Con-sid'er, *v. a.* நினைத்தல், சிந்தித்தல், எண்ணுதல், தேர்தல், ஆய்தல், ஆராய்தல், ஆலோசித்தல், உணருதல், பாணித்தல்.
to requite, பிரதிபலனளித்தல்.
Con-sid'er-a-ble, *a.* மதிக்கத்தக்க, கனிசமான, அதிகமான, எண்ணிக்கையான.
Con-sid'er-a-ble-ness, *s.* முக்கியம், மேன்மை, அதிகம்.
Con-sid'er-a-bly, *adv.* மிகுதியாய்.
Con-sid'er-ate, *a.* விவேகமுள்ள, சாவதானமுள்ள, கருத்தான, அவதானமான, ஆராய்வுள்ள.
Con-sid'er-ate-ly, *adv.* யோசனையோடே, புத்தியாக, சாவதானமாய்.
Con-sid'er-ate-ness, *s.* யூகம், யோசனை, சாவதானம்.

Con-sid-er-ā'tion, *s.* அவதானம், சாவதானம், ஆலோசனை, சிந்தனை, உசாவு, யோசனை, தேர்ச்சி.
motive, reason, காரணம், முகாந்திரம்.
price, விலை, கிரயம், பிரதி.
respectability, கணிசம், மேன்மை.
Con-sid'er-er, *s.* நினைக்கிறவன், யூகிக்கிறவன், சிந்திக்கிறவன்.
Con-sīgn', *v. a.* ஒப்புக்கொடுத்தல், நேர்தல், கையளித்தல்.
Con-sig-nā'tion, *s.* ஒப்புவிப்பு, ஒப்படைபண்ணுகை, ஈகை.
Con-sīgn-ee', *s.* ஒப்புக்கொண்டவன், ஏற்றுக்கொண்டவன், காரியகாரன்.
Con-sign'er, Con-sign'or, *s.* ஒப்படைகாரன், ஒப்புவிப்போன்.
Con-sīgn'ment, *s.* ஒப்படை, ஒப்புவிப்பு.
the thing consigned, ஒப்புவிக்கப்பட்டபொருள்.
the writing, ஒப்புவிப்புப்பத்திரம், தத்துவபத்திரம்.
Con-sist', *v. n.* கூடநிற்றல், கலந்திருத்தல், அடங்குதல், உண்டாயிருத்தல்.
with, ஒத்தல், ஒண்ணுதல், பொருந்துதல், ஒவ்வுதல்.
Con-sist'ence, Con-sist'en-cy, *s.* தகுதி, சீர், தன்மை, கூடநிற்கை, இசைவு.
as firmness, உரம், இசைவு, வைரம், இறுக்கம், நிலை, திரம்.
agreement, இசைவு, ஒருமை, ஒற்றுமை, ஒப்பு.
thick, தடிப்பு, இறுக்கம்.
Con-sist'ent, *a.* உரமான, திரமான, நிலைபரமான, ஒவ்வுதலான, சம்பந்தமுள்ள, பொருந்திய, ஏற்ற.
Con-sist'ent-ly, *adv.* தகைமையாய், ஒவ்வுதலாய், ஒப்ப.
Con-sis-tō'ri-al, Con-sist'o-ry, *a.* குருஆலோசனைச்சங்கத்துக்குரிய.
Con-sist'o-ry, *s.* ஆலோசனைச்சங்கம், சங்கமண்டபம், மந்திராலயம்.
ecclesiastical, திருச்சபைத்தலைவர்சங்கம்.
Con-sō'ciāte, *s.* கூட்டாளி, பங்காளி, தோழன், சகன்.

Con-sō′ciāte, *v. a.* கூட்டுதல், சேர்த்தல்.
Con-sō′ciāte, *v. n.* கூடுதல், சேர்தல், ஒன்றுதல்.
Con-sō-ci-ā′tion, *s.* ஐக்கம், ஐக்கியசங்கம், திருச்சபைப்பிரதானிகள்கூட்டம்.
Con-sōl′a-ble, *a.* மனவாறுதலடையத்தக்க, மனமாறத்தக்க, ஆறுதலுள்ள, தேற்றத்தக்க.
Con-so-lā′tion, *s.* மனஆறுகை, மனக்குளிர்ச்சி, தேற்றம், தேற்றரவு.
Con-sol′a-to-ry, *a.* மனங்குளிரத்தக்க, துக்கமாறத்தக்க, ஆறுதல்செய்கிற.
Con-sōle′, *v. a.* ஆற்றுதல், தேற்றுதல், தணித்தல், உறுதிசொல்லுதல், திடன்சொல்லுதல், மனங்குளிரப்பண்ணுதல், சலிப்பாற்றுதல்.
to be consoled, மனங்குளிர்தல், சலிப்பாறுதல், தேற்றப்படுதல்.
Con-sōl′er, *s.* ஆற்றுகிறவன், தேற்றரவாளன்.
Con-sol′i-dant, *a.* இரணவாய்பொருத்துகிற, இரணஞ்சந்துசெய்கிற.
Con-sol′i-dāte, *v. a.* கூட்டுதல், உறையச்செய்தல், திரட்டுதல், உறைவித்தல், உரப்பித்தல்.
mercury, கட்டுதல், குளிகையாக்குதல்.
Con-sol′i-dāte, *a.* கட்டியான, வயிரங்கொண்ட.
Con-sol-i-dā′tion, *s.* கட்டிபடுகை, கட்டுப்படுகை, திரளுகை, உரமாகுகை, இறுகுகை, கடினமாகுகை.
of mercury, இரசக்கட்டு.
of a wound, or bone, பொருந்துகை.
Con-sol′i-da-tive, *a.* குணமாக்குகிற, சவுக்கியப்படுத்துகிற.
Con′so-nance, *s.* இசை, இசைவு, சேர்த்திக்கை, ஒவ்வுகை.
as rhyme, எதுகை, தொடை.
in music, ஒத்திசை.
Con′so-nant, *s.* உடலெழுத்து, உடம்பெழுத்து, மெய்யெழுத்து, ஒற்றெழுத்து.
animated, உயிர்மெய்யெழுத்து, சார்பெழுத்து.
mute, or sonant, மூகையெழுத்து, ஊமையெழுத்து.

Con'so-nant, *a.* இணக்கமான, இசைவான, ஒவ்வுதலான.
Con'so-nant-ly *adv.* இசைவாய், ஐக்கமாய், அன்னியோன்னியமாய்.
Con'sort, *s.* கூட்டாளி, தோழன், அநுசாரி, சங்காத்தி, பாங்கன்.
as wife, or husband, மனைவி, கணவன்.
union, ஐக்கம், இசைவு.
Con-sort', *v. n.* கூடுதல், சம்பந்தமாதல், சங்காத்தம்பண்ணுதல், சேர்தல்.
Con-sort'a-ble, *a.* ஏற்ற, தகுந்த.
Con'sort-ship, *s.* ஐக்கம், சங்காத்தம்.
Con-spi-cū'i-ty, *s.* தெளிவு, துலக்கம், விளக்கம், பிரகாசம், துலாம்பரம், விளம்பரம்.
Con-spic'u-ous, *a.* விளக்கமான, வெளியரங்கமான, தெளிவான, துலக்கமான.
to draw one up, as a well-beam, ஏகுதல், எஃகுதல்.
water as a ship, மரக்கலம்அகாதத்திலமிழ்தல், மரக்கலநீச்சளவுநீரிலமிழ்தல்.

Draw'back, *s.* கழிவு, குறைவு.
Draw'bridge, *s.* இழுவைப்பாலம்.
Draw'ee, *s.* செல்லேற்போன், உண்டியற்சீட்டுக்கொள்வோன்.
Draw'er, *s.* பெட்டியறை, இழுப்போன், இறைப்போன், அள்ளுவோன், சாம்புவோன், சாம்பி, உண்டியலெழுதுவோன், எழுதுவோன்.
Draw'ers, *s.* *(pl.)* சல்லடம், உட்காற்சட்டை, நிசரா.
Draw'ing, *s.* சித்திரப்படம், இலிபி, இலேகை, எழுத்து, படம், இழுவை, உருப்பு, குறிப்பு, வரைதல்.
of a liquid, தெளிப்பு, தெளிவு, வாங்குதல்.
master, சித்திராசாரி, சித்திரஉவாத்தி, ஓவியன், ஓவன்.
lines in, ஓவியம், ரூபுரேகை.
room, கொலுமண்டபம், சித்திரமண்டபம், சபாமண்டபம்.
Drawl, *s.* சோம்பல்வார்த்தை, இழுத்துப்பேசுதல், குரல்நீட்டிப்பேசுதல்.

Drawl, *v.* சோம்பலாய்ப்பேசுதல்.
Draw'-net, *s.* கரைவலை, இழுவைவலை.
Drāy, *s.* சிறுசிறப்பண்டி.
Drāy'horse, *s.* சிறுசிறப்பண்டிப்பரி.
Drāy'man, *s.* சிறுசிறப்பண்டியோட்டு வோன்.
Dread, *s.* அச்சம், பயம், பயங்கரம்.
of death, மரணக்கெடி.
Dread, *v.* அஞ்சுதல், பயப்படுதல், திகைத்தல், கலக்கடிப்படுத்தல், கெடிடித்தல், அச்சுறல்.
Dread, *a.* பயப்படத்தக்க, அஞ்சத்தக்க, ஏங்கத்தக்க, கலங்கத்தக்க, கெடிக்கத்தக்க, கலக்கடிப்படத்தக்க, பயங்கரப்படத்தக்க.
Dread'ful, *a.* பயப்பாடுள்ள, ஏக்கமான, அஞ்சத்தக்க.
death, பயங்கரமானமரணம், துன்மரணம்.
Dread'ful-ly, *adv.* பயங்கரமாய், ஏக்கமாய்.
Dread'ful-ness, *s.* பயப்பாடு, ஏக்கம், கெடி, அச்சப்பாடு.
Dread'less, *a.* பயமில்லாத, தைரியமுள்ள, துணிவுள்ள, அஞ்சாத.
Drēam, *s.* கனவு, சொப்பனம்.
as fancies, வீணெண்ணம், மனோரதியம், மனோராச்சியம்.
Drēam, *v.* கனவுகாணுதல், சொப்பனங்காணுதல்.
as to imagine, வீணெண்ணங்கொள்ளுதல், மனோராச்சியம்பண்ணுதல்.
he would not even dream of doing it, அவன்அதைக்கனவிலுஞ்செய்யான்.
to be sluggish, சோம்பலாயிருத்தல்.
Drēam'er, *s.* சொற்பனதரிசி, சொப்பனக்காரன், சோம்பன், மனோராச்சியவதி.
Drēam'ful, *a.* சொப்பனமுள்ள, மாய்கையுள்ள.
Drēam'ing-ly, *adv.* சோம்பாய், கவலையீனமாய், மனோரதியமாய்.
Drēam'less, *a.* சொப்பனமற்ற, நனவுள்ள, சாக்கிரதையுள்ள.
Drēar, *a.* மருளுள்ள, மந்தமான, வாடின, குருவின, ஆறுதலற்ற.
Drēar'i-ly, *adv.* மனத்துயரமாய், துக்கமாய்.

Drēar'i-ness, *s.* துக்கம், சஞ்சலம்.
Drēar'y, *a.* பயங்கரமான, துக்கமான, சஞ்சலமான, பாழான.
Dredge, *s.* இழுவைவலை.
Dreg'gi-ness, *s.* கசாளம், மண்டி, அடையல்.
Dreg'gish, } *a.* } மண்டியுள்ள, கசாளமுள்ள, சேறுள்ள, கலங்கலான.
Dreg'gy,
Dregs, *s. (pl.)* மண்டி, சக்கை, வண்டல், சேறு, கூளம்.
worthless matter, களிம்பு, தள்ளுபடி.
Drench, *v. a.* தோய்த்தல், குளிப்பித்தல், ஈரமாக்கல்.
to physic, மிகவிரேசனஞ்செய்தல்.
to be drenched, நனைதல், தோய்தல், ஊறல்.
Dress, *s.* உடை, உடுப்பு, உடுபுடைவை, அணி, ஆடை.
maker, தையலாள், தையற்காரன், பொல்லன்.
one fond of dress, கோலாகலன், அலங்காரப்பிரியன், குசாற்காரன்.
home dress, வீட்டுடை.
Dress, *v.* உடுத்தல், அணிதல், தரித்தல், புனைதல்.
to adjust, or make straight, நேராக்கல், ஒழுங்குப்படுத்தல், சரியாக்கல்.
to adorn, கோலங்கட்டுதல், குசாலாயணிதல், சோடித்தல், சிறப்பித்தல், புனைதல், பூணுதல்.
one, தரிப்பித்தல், கோலம்புனைவித்தல், அலங்கரித்தல், கோலஞ்செய்தல்.
food, சமைத்தல், அடுதல், பாகம்பண்ணுதல்.
a lamp, சோடித்தல்.
a wound, காயங்கட்டுதல், இரணமாற்றுதல், பரிகரித்தல்.
as a butcher, துப்புரவுபண்ணுதல், கழிவகற்றல், நோன்றுதல்.
Dress'er, *s.* வண்ணமகன்.
a table, தீன்பண்டங்களைவைத்துஎத்தனப்படுத்தும்பீடம்.
of wounds, இரணவைத்தியன்.
Dress'ing, *s.* உடுத்தல், உடுப்பு, உடை, புடைவை.
a wound, பரிகரிப்பு.

a correction, ஆக்கினை, தண்டனை.
Dress'ing-boy, *s.* வண்ணமகன், கோலஞ்செய்வோன்.
Dress'ing-maid, *s.* வண்ணமகள், கோலஞ்செய்வாள், கோலம்புனைபெண்.
Dress'ing-room, *s.* கோலஞ்செய்யும் அறை, அணிபூணறை.
Dress'y, *a.* குசாலுள்ள, ஒய்யாரமான, ஒயிலுள்ள.
Drib'ble, *v. n.* துளித்தல், துளிதூங்கல், துளிதுளியாய்விழுதல், தூறல், பொசிதல்.
to slaver, வாய்நீர்வடிதல்.
Drib'blet, *s.* சேடம், பங்கு, சொச்சம்.
Drib'bling, *s.* துளிப்பு, துவலை, தூவல்.
Drī'er, *s.* உணக்குவது, வரட்டுவது, கோடை.
Drift, *s.* அடையல், கொழியல்.
of dust, பூதூளி, தூளிப்படலம்.
of sand, or snow, கும்பி, கும்பம், குவியல், மிட்டு, மேடு.
as aim, நோக்கம், போக்கு.
Drift, *v. a.* ஒதுக்குதல், தெள்ளுதல், தெரித்தல்.
Drift, *v. n.* ஒதுங்குதல், கொழிதல், குவிதல்.
ashore, அடைதல், ஒதுங்குதல்.
Drill, *s.* தமரூசி, துறப்பணம், பொத்தலூசி, கடுத்தலூசி, கல்லுளி, கன்னக்கோல்.
as training, யுத்தாப்பியாசம்.
Drill, *v. a.* தமரிடுதல், துருவுதல், துவாரமிடுதல், தொளைத்தல், கன்னக்கோலிடுதல், கல்லுதல், தொள்ளலிடுதல், குயிறல்.
scholars, பாடம்போற்றல், அப்பியாசித்தல்.
soldiers, &c., படைபயிற்றல், ஆயுதபரிட்சைசெய்தல், சிரமம்பயிற்றல், யுத்தாப்பியாசப்படுத்தல்.
in husbandry, பத்திபத்தியாய்வித்திடுதல்.
Drill'ing, *s.* தொளைப்பு, தமரிடுகை, யுத்தாப்பியாசப்படுத்துகை, அணியணியாய்வித்திடுகை.
as coarse cloth, பருநூற்புடைவை.
Drink, *s.* பானம், பானியம், பருகுவன, துவை.

strong, சாராயம், உலொட்டி, தீநீர், சுராபானம்.

Drink, *v. a.* குடித்தல், பருகுதல்.
to imbibe, or absorb, குடித்தல், உறிஞ்சுதல், கொள்ளுதல்.
to receive, உட்கொள்ளுதல்.
excessively, மிகக்குடித்தல், வெறிக்கக்குடித்தல்.
toddy, கள்ளுணல், சுராபானம்பண்ணல்.
to drink in, விருப்பத்தோடுகேட்டல், கருத்தாயுட்கொள்ளல்.

Drink'a-ble, *a.* குடிக்கத்தக்க, பருகத்தக்க.

Drink'er, *s.* குடியன், மதுபானன், களியன், குடிகாரன், வெறியன்.

Drink'ing, *s.* குடிப்பு, பானம்பண்ணுகை, உறிஞ்சுகை.
cup, பானபாத்திரம்.
trough, நீர்த்தொட்டி, பாத்திரம்.

Drip, Drip'ping, *s.* ஒழுக்கு, துளிப்பு, வடிகை.

Drip, *v. a.* ஒழுகவிடுதல், ஒழுக்கல்.

Drip, *v. n.* வடிதல், ஒழுகுதல், துளித்தல்.

Drīve, *s.* சாரி, உலாத்து, உலா, சவாரி.
to take a drive, சாரிபோதல், சவாரிபோதல், பவனிபோதல்.

Drīve, *v. a.* துரத்துதல், கடவுதல்.
a beast, or cattle, செலுத்துதல், ஓட்டுதல், ஊருதல்.
away, தள்ளுதல், துரத்துதல், பறக்கடித்தல்.
out of the way, ஒதுக்குதல், கலைத்தல், விலக்குதல்.
in a nail, ஏற்றுதல், கடாவுதல், இறுக்கல், அறைதல்.

Drīve, *v. n.* இழுக்கப்படுதல், ஓட்டப்படுதல்.
to rush violently, பாய்தல், தள்ளுதல்.
in a carriage, சாரிபோதல்.
as aim at, எண்ணிக்கையாயிருத்தல், நோக்கமாயிருத்தல்.

Driv'el, *s.* உமிழ்நீர், வாய்நீர்.

Driv'el, *v. n.* வாயூறுதல், வாய்நீரொழுகுதல், வாய்நீர்வடிதல்.
at the corners of the mouth, கடைவாய்வடிதல், கொடுவாய்வடிதல்.

Driv'el-er, *s.* வாய்நீர்வடியன், சாற்று வாயூற்றி, பேதை, மூடன்.

Drīv'er, *s.* பாகன், சாரதி, செலுத்துவோன், துரத்துவோன், சூதன்.
in mechanics, இயக்குஞ்சக்கிரம், திருக்கி.

Drīv'ing, *s.* செலுத்துகை, துரத்துகை, இயக்குகை.

Driz'zle, *v. n.* துமித்தல், தூறல், துளித்தல், சிலுசிலுத்தல்.

Driz'zling, *s.* துமிப்பு, தூறு, சீகரம், திவலை.

Driz'zly, *a.* துளிதுளியான, தூறலான.

Drōll, *s.* கோமாளி, நொனனைக்காரன், நையாண்டிக்காரன்.

Drōll, *v. n.* சரசம்பண்ணுதல்.

Drōll, *a.* நளினமுள்ள, குணும்புதலுள்ள, பகிடிசெய்கிற.
fellow, குணும்பி.
to be droll, கோரணிகாட்டுதல், கோமாளம்பண்ணுதல்.

Drōll'er-y, *s.* தமாசு, கோமாளம், கோரணி, கோரம்பலம், சேட்டை, நளினம், குணும்பு, சொட்டை, பாவைக்கூத்து.

Drōll'ing-ly, *adv.* நளினமாய், பரிகாசமாய், விடுப்பாய்.

Drōll'ish, *a.* நளினமான, பரிகாசமான.

Drŏm'e-da-ry, *s.* ஒருதிமில்ஒட்டகம்.

Drōne, *s.* ஆண்ஈ.
as a person, சோம்பன், தாமதக்காரன், மடியன்.
a sound, மந்தஓசை, வண்டிசைஓசை.

Drōne, *v. n.* சோம்புதல், வீணாய்த்திரிதல், மந்தோசையிடுதல்.

Drōn'ish, *a.* தாமதமுள்ள, சோம்பலான, சோம்பான.

Drōn'ish-ness, *s.* தாமதம், சோம்பு, திமிர்.

Droop, *v. n.* உலருதல், வாடுதல், கண்துஞ்சுதல், தலைதாழ்தல், கண்தூங்குதல், குருவுதல், சோர்தல், சோம்புதல், தளர்தல், தியங்குதல், தொய்தல், இளைத்தல்.
with exhaustion, &c., குழைதல், சவங்குதல், சோர்தல்.
as the head, தலைநாலுதல், தலைதூங்குதல்.

as the limbs, சோர்தல், அயர்தல், கருவிகழலல்.

Droop'ing, *s.* சோர்வு, தளர்ச்சி, தியக்கம், துயரடி, தூக்கம்.

Drop, *s.* துளி, திவலை, சொட்டு, ஒழுக்கு.
of rain, மழைத்துளி, திவலை.
of water, நீர்த்துளி.
a part of a gallows, பொறிக்கிறபலகை, தூக்குண்போனிற்கும்பலகை.
for the ear, காதிற்தொங்கணி.

Drop, *v. a.* விழவிடுதல்.
as drops, துளித்தல்.
as a leak, ஒழுக்குதல்.
to leave, abandon, விட்டுவிடுதல், போகவிடுதல், கைவிடுதல்.
in a word, இடையிலேபேசுதல்.
to lose, போட்டுவிடுதல், இழத்தல்.
to be dropped, or lost, கைசோர்ந்துபோதல், கைபறிதல், வழுவுதல்.

Drop, *v. n.* விழுதல்.
from a leak, ஒழுகுதல்.
copiously, சொரிதல், பொழிதல்.
off, உதிர்தல், விழுதல்.
to die suddenly, சடுதியாய்ச்சாதல், அவமாய்மரித்தல்.
in, or come unexpectedly, தற்செயலாய்வருதல், சடுதியாய்வருதல், நினையாதிருக்கவருதல்.

Drop'ping, *s.* ஒழுக்கு, துளிப்பு, வீழ்வு, உதிர்வு.

Drop'si-cal, *a.* நீர்ப்பிடிப்புள்ள, அதைப்பான.

Drop'sy, *s.* வீக்கம், அதைப்பு, நீராமயம், பாண்டு, நீர்க்கோவை, நீரேற்றம்.
in the abdomen, நீராமம், மகோதரம்.

Dross, *s.* கிட்டம், கழிவு, மலம், கறை, துரு, மஷ்டு, களிம்பு.
of iron, இரும்புக்கிட்டம், அயமலம், இரும்பூறல், அயமஷ்டு.

Dross'i-ness, *s.* மலினம், கறை, துரு, களிம்பு, அழுக்கு.

Dross'y, *a.* கறையுள்ள, களிம்பான, களங்கமுள்ள.

Drought, } *s.* மழையொறுப்பு, கோடை, வேனில், வறப்பு, கானல், அநாவிருஷ்டி, நாவரட்சி, வரள்வு
Drouth, }

a severe drought, கடுங்கோடை, அருங்கோடை, கானல்.

Drought'i-ness, *s.* கானல்.

Drought'y, *a.* மழைத்தாழ்ச்சியான, காந்தியான, அருங்கோடையான, வறப்பான.

Drōve, *s.* கூட்டம், கிளை, இராசி, திரள்.

Drōv'er, *s.* ஆடுமாடுமுதலியவோட்டுவோன், பசுவணிகன், கோவர்த்தகன், கோவசியன்.

Drown, *v. a.* தாழ்த்துதல், தாழ்த்திக்கொல்லல், அமிழ்த்துதல், அமுக்குதல்.

Drown, *v. n.* தாழுதல், மாழுதல், அமுங்குதல், அமிழ்ந்துதல், ஆழ்தல், மூழ்குதல்.

Drowse, *v. n.* கண்தூங்குதல், துஞ்சுதல், துயிலல்.

Drows'i-ly, *adv.* தூக்கமாய், உறக்கமாய், நித்திரையாய், சோம்பாய்.

Drows'i-ness, *s.* உறக்கம், தூக்கம், தூங்கல், மந்தம், சோம்பல், மயக்கம்.

Drows'y, *a.* மந்தமுள்ள, சோம்புத்தன்மையான, நித்திரையுள்ள.

headed, மந்தமான, தூக்கமான, சோம்பான.

person, சோம்பன், ஆலசியன், தூக்க்கமானவன்.

to be drowsy, தூங்குதல், சோம்புதல்.

Drub, *s.* குத்து, இடி, அடி, மொத்து.

Drub, *v. a.* குத்துதல், இடித்தல், அதுக்குதல், அடித்தல்.

Drub'bing, *s.* அடி, தண்டம், இடி, குத்து, ஆக்கினை.

Drudge, *s.* வேலைகாரன், அடியன், தொழும்பன், குற்றேவலாள்.

Drudge, *v. n.* கடையாட்டப்படுதல், பிரயாசப்படுதல்.

Drudg'er-y, *s.* கடையாட்டம், குற்றேவல், ஊழியம், தொழும்பு.

Drudg'ing-ly, *adv.* கடையாட்டமாய், குற்றேவலாய்.

Drug, *s.* மருந்து, ஔடதம், மருந்துச்சம்பாரம்.

prepared, or compound, செய்கைச்சரக்கு, வைப்புமருந்து.

Drug, *v. a.* மருந்துச்சரக்குவகையெழுதிக்கொடுத்தல்.

Drug'gist, *s.* மருந்துச்சரக்குவியாபாரி.
Drū'id, *s.* ஐரோப்பையரின்பூர்வகுருப் பட்டம்.
Dru-id'ic-al, *a.* ஐரோப்பையரின்பூர்வ குருப்பட்டத்துக்குரிய.
Drū'id-ism, *s.* ஐரோப்பையரின்பூர்வகு ருகோட்பாடு.
Drum, *s.* தோற்கருவி.
small in the middle, உடுக்கை.
with two heads, இருகட்பறை, மே ளம், மத்தளம், மிருதங்கம், பேரிகை, முழவு, முரசு.
one head, ஒருகட்பறை, தம்பட்டம், இடம்மானம், உறுமி.
cordage, வார், விசி, வள், வலி.
stick, வாச்சியமடிக்குந்தடி, குணில், கடிப்பு, முழவுக்கம்பு.
Drum, *v. n.* பறைதட்டுதல், பறையடி த்தல், மத்தளமடித்தல், பொறித்தல், இடித்தல், முரசறைதல்.
Drum'mer, *s.* பறையன், பறைகாரன், பறைதட்டுவோன்.
Drunk, Drunk'en, *a.* வெறிமயக்கமான, வெறியான.
to get drunk, வெறியெடுத்தல், வெறி யாயிருத்தல்.
Drunk'ard, *s.* களியன், வெறியன், வெ றிகாரன், மத்தன்.
Drunk'en-ly, *adv.* வெறியாய், வெறிம யக்கமாய்.
Drunk'en-ness, *s.* வெறி, வெறிமயக்கு, களியாட்டு, குடிவெறி, மதுமயக்கம், மஸ்து.
Dry, *v. a.* காயவைத்தல், உலர்த்துதல், வாட்டுதல், காய்ச்சுதல், சுவற்றுதல், தீய்த்தல், உணக்கல், வரட்டுதல், வ றுத்தல்.
Dry, *v. n.* காய்தல், உலருதல், வாடுதல், வற்றுதல், வரளுதல்.
up, சுவறுதல், இஞ்சுதல், வற்றுதல்.
as a wound, pustule, &c., ஆறுதல், வடுவிடுதல், வற்றுதல்.
Dry, *a.* காய்ந்த, நீர்ப்பிடியில்லாத, வர ண்ட, இஞ்சின.
not rainy, மழையில்லாத, கோடை யான.
not juicy, சாரமற்ற, பசையில்லாத, சாறில்லாத.

without tears, கண்ணீரில்லாத.
thirsty, விடாய்த்த, தாகமுள்ள.
unadorned, சோடிப்பில்லாத, சிறப்பற்ற, இலக்கணமற்ற.
ground, or land, உலர்தரை, வன்பார், வன்பால்.
sticks for fuel, துரால், செத்தை, சுல்லி, சுப்பி.
spot, in a river, திட்டை, மேடு, திடர், திட்டி.
as sarcastic, உறைப்புள்ள.
to make dry remarks, படப்பேசல், வன்சொல்வழங்கல், சுடப்பேசல்.
a pustule, or wound, கருகின.

Dry'ing, *s.* காய்ச்சுகை, வாட்டுகை, உணக்குகை.

Dry'ly, *adv.* காய்வாய், உறைப்பாய், கடினமாய்.
as sarcastically, உறைப்பாய், கார்ப்பாய், கடினமாய்.
without embellishment, சிறப்பின்றி.

Dry'ness, *s.* காய்ச்சல், காய்வு, வரட்சி, கான்றியம், காங்கை.
barren, unadorned, இலக்கணமில்லாமை, சாரமின்மை, சிறப்பின்மை.
want of ardor, வேகமின்மை, பற்றின்மை, உணர்ச்சியில்லாமை.
want of juice, சாரமில்லாமை.
want of rain, மழையில்லாமை.

Dry'-nurse, *s.* கைத்தாய், வளர்த்ததாய், ஊட்டுந்தாய்.

Dry'shod, *a.* தொடுதோல்துவளாத, கால்நனையாத.

Dū'al, *a.* துவித, உபய.

Du-al'i-ty, *s.* இருமை, இரண்டு, பிரிவு, பேதம், பின்னம், துவிதம்.

Dū'ar-chy, *s.* உபஅரசர்ஆட்சி.

Dub, *v. a.* அடித்தல், உத்தியோகத்தினியமித்தல்.
to give a name, பெயரிடுதல், நாமஞ்சூட்டுதல், நாமதாரணைசெய்தல், நாமந்தரித்தல், பட்டந்தரித்தல்.

Du'bi-ous, *a.* இருமனமுள்ள, சந்தேகமான, ஐயுறவுள்ள, சமுச்சயமான, பலநினைவான, நிச்சயமற்ற, தெளிவற்ற.
to be dubious, சந்தேகித்தல், ஐயுறுதல், பலநினைவாகுதல்.

Dū'bi-ous-ly, *adv.* சந்தேகமாய், ஐயமாய், சமுசயமாய்.

Dū'bi-ous-ness, *s.* சந்தேகம், உறுதியின்மை, நிலையாமை, ஐயம்.

Dū'bi-ta-ble, *a.* சமுச்சயமான, அசாத்தியமான, சந்தேகமான, உறுதியில்லாத.

Duc'at, *s.* ஓர்நாணயம்.

Duch'ess, *s.* ஓர்பட்டக்காறி.

Duch'y, *s.* ஓர்பட்டக்காறனுடையஅரசாட்சிக்குட்பட்டதேசம்.

Duck, *s.* பெண்தாரா, தலைவணப்பு.
 sea, கடற்றாரா.
 wild, காட்டுத்தாரா.
 a stone, நீரில்தத்தெறிகல்.
 as canvass, இரட்டுநூற்புடைவை,பருக்கன்புடைவை.

Duck, *v.* தோய்த்தல், அமுங்கியெழுதல், தாழ்தல்.

Duck'ing, *s.* தோய்ப்பு, அமுக்கம்.

Duck'-leg-ged, *a.* குறுங்காலுள்ள.

Duck'ling, *s.* தாராக்குஞ்சு, விடைத்தாரா.

Duct, *s.* நீர்க்குழல், வாய்க்கால்.
 of the body, நரம்பு, இரத்தநரம்பு.

Duc'tile, *a.* வசப்படக்கூடிய, படியக்கூடிய, வசையக்கூடிய.
 flexible, இழுபடக்கூடிய, கம்பியாக்கப்படக்கூடிய, மிருதுவான.

Duc'tile-ness, *s.* அகலத்தக்கதன்மை, பரவத்தகுந்தன்மை, இழுபடுந்தன்மை, பசுமை.

Duc-til'i-ty, *s.* பதமை, பதிவு, இளக்கம, இணக்கம், அடித்துநீட்டக்கூடியதன்மை, பசுமை.

Dudg'eon, *s.* குற்றுவாள், சமுதாடு, கட்டாரி.
 as malice, கோபம், தாங்கல், விசனம், பழி, வன்மம், வயிர்ப்பு.
 to take in dudgeon, எரிச்சல்கொள்ளுதல், தாங்கலடைதல்.

Dūe, *s.* கடன், கடமை, வருமதி, செல்லுமதி,நிலுவை, இறை, வரத்து.
 as debt, கடன்,செல்லுமதி,சேருமதி.

Dūe, *a.* நேரான, போகவேண்டிய, உரிய, ஏற்ற, நியாயமான, செல்லவேண்டிய, தகுமான.
 money, வருமதி.

proper, தகுந்த.
order, வரிசை, அணி, நிரை, பந்தி.
in due time, ஏற்றவேளையிலே.
Dūe, *adv.* நேராக, சரிநேராக.
east, நேர்கிழக்காக.
Dū'el, *s.* தனிப்போர், இருவர்போராட்டம்.
Dū'el, *v.* தனிப்போராடுதல், இருவர் போராடுதல்.
Dū'el-er, Dū'el-ist, *s.* தனிப்போராடுவோன், தனிப்போராளி.
Dū'el-ing, *s.* இருவர்போராட்டம்.
Du-et', Du-et'to, *s.* இருவர்கூடிப்பாடும் இசைப்பாட்டு.
Dug, *s.* விலங்கின்மடி, செருத்தல், மடி, ஆபீனம்.
Dūke, *s.* இறைமகன், பிரபு, தலைவன்.
Dūke'dŏm, *s.* இறைமகன்அரசு.
Dul'cet, *a.* இனிய, தித்திப்பான, மதுரமான, சுவைத்த, தீம், மாதுரியமான.
in music, ஒத்திசையான.
Dul-ci-fi-cā'tion, *s.* இனிப்பாக்குகை, சுவையாக்குகை, இன்னிசையாக்குகை.
Dul'ci-fy, *v. a.* தித்திப்பாக்குதல், சுவைப்பித்தல்.
Dul'ci-mer, *s.* தம்புரு.
Dull, *v. a.* மந்தமாக்குதல், மழுக்குதல்.
Dull, *a.* மந்தமுள்ள, அசமந்தமான, மழுங்கலான, தூக்கமான, மகிழ்ச்சியற்ற, சோம்புதலான, தெளிவற்ற.
blunt, விவேகமில்லாத, கூர்மையற்ற.
not bright, மங்கலான.
sleepy, தூக்கமான.
weather, மந்தாரம், மப்பு, பூங்காரம், மூய்சாப்பு.
Dull'ard, *s.* மந்தன், தாமதக்காரன், மூடன், திமிரன், மடன்.
Dull'ness, *s.* மந்தம், மழுங்கல், அசமந்தம்.
of intellect, அவிவேகம், மந்தம், மூடம், அசமந்தம்.
of feeling or system, ஆயாசம், சோர்வு, தளர்ச்சி, சோம்பு, திமிர், தூங்கல்.
want of a point or edge, மழுங்கல், நமுங்கல், மொட்டை.
Dul'ly, *adv.* மந்தமாய், சோம்பாய், அவிவேகமாய், மழுக்கலாய்.

Dū'ly, *adv.* தகுதியாய், ஏற்றவிதமாய், நேராய்.

Dumb, *a.* ஊமையான, மூகையான, மூங்கையான.
  person, ஊமை, மூகை, மூங்கை.
  to strike dumb, மலைக்கச்செய்தல், பிரமிக்கச்செய்தல், வாயடைக்கச்செய்தல்.

Dumb'-bells, *s.* கரங்கொண்டப்பியாசிக்குங்கருவி, சோம்பகற்றி.

Dumb'ly, *adv.* ஊமையாய், மௌனமாய்.

Dumb'ness, *s.* ஊமைத்தனம், மூகம், மௌனம், பேச்சின்மை.

Dump, *s.* மனத்துயர், துக்கஇசை, மந்தம், மனக்கலக்கம்.
  as absence of mind, பராக்கு.

Dump'ish, *a.* மந்தமான, சுவர்ணகெட்ட, துக்கமான.

Dump'ish-ly, *adv.* சோம்பாய், சுவர்ணகேடாய், மனத்துக்கமாய்.

Dump'ish-ness, *s.* மந்தம், திமிர், மனச்சோர்வு.

Dump'ling, *s.* பூரி, சுருட்டுப்பணிகாரம்.

Dump'y, *a.* கட்டையான, குள்ளமான.

Dun, *s.* விடாதகண்டன், அரிப்பு, அலட்டு.

Dun, *v. a.* அலட்டுதல், நெருக்குதல், அரித்தல்.

Dun, *a.* மங்கலான, கபிலமான, கருமைகலந்த, செங்காருள்ள, ஊதா.
  cow, கபிலைப்பசு.

Dunce, *s.* மூடன், மதிகெட்டவன், மௌட்டியன், மிலேச்சன்.

Dun'cer-y, *s.* மோட்டுத்தனம், மந்தம், மடமை, பேதைமை, மௌட்டியம்.

Dung, *s.* எரு, சாணகம், சாணம்.
  of animals in general, பீ, (*a low term*).
  human, மலம், நரகல், கஷ்டம்.
  of a horse, elephant, camel, இலத்தி.
  of cows and buffaloes, சாணி, சாணகம்.
  of asses, dogs, cats, &c., விட்டை.
  of sheep, hares, bats, rats, squirrels, பிழுக்கை.
  of birds, fowls, lizards, எச்சம்.

Dung, *v. a.* எருப்போடுதல், மலங்கழித்தல்.

Dun'geon, *s.* கீழறைச்சிறைச்சாலை, காா்க்கிரகம், காராகரம்.

Dung'hill, *s.* எருக்கும்பி, குப்பைமேடு, எருக்களம்.
 a mean abode, பாழ்வீடு.

Dung'hill, *a.* எருக்களமான, எருவுள்ள.

Dung'y, *a.* அழுக்கான, மலமுள்ள.

Dun'nage, *s.* மரக்கலத்தினேற்றினசாமான்தாங்கி, பட்டடை.

Dun'ner, *s.* விடாதகண்டன், அலட்டுவோன், நெருக்குவோன், அரிகண்டம்பண்ணுவோன்.

Dun'ning, *s.* அரிப்பு, அலட்டு, நெருக்கிடை.
 as curing fish, கருவாடாக்கல், மீனுணக்கல்.

Dū'o, *s.* துவா, துவயம், துவி.
 in singing, இருவகைக்கீதம்.

Du-o-dec'i-mo, *a.* பன்னிரண்டுபுறமுள்ள, துவாதசமுள்ள.

Du-o-lit'er-al, *a.* ஈரெழுத்துள்ள, துவியட்சரமுள்ள.

Dūpe, *s.* சுமடன், ஏய்க்கப்படுவோன், பேதை, மண்ணை, மடன்.

Dūpe, *v. a.* ஏய்ப்புப்பண்ணுதல், ஏய்ப்புக்காட்டுதல், ஏய்த்தல், ஏமாற்றுதல்.

Dū'ple, *a.* இருமடியான.

Dū'pli-cate, *s.* சவாது, பிரதி.

Dū'pli-cāte, *v. a.* இரட்டித்தல், மடித்தல்.

Dū'pli-cate, *a.* இருமடங்கான, இரட்டையான.
 ratio, வருக்கவிகிதம்.

Du-pli-cā'tion, *s.* இருமடங்கு, துவைதம்.

Dū'pli-ca-ture, *s.* மடிப்பு, இருமடங்கு.

Du-plic'i-ty, *s.* முன்னொன்றுபின்னொன்றுகூறுகை, இரண்டகம், நெரிடு, புரளி, மடிப்பு.

Du-ra-bil'i-ty, *s.* அசையாநிலை, சாசுவதம், நிலையுடைமை, அழியாமை.

Dū'ra-ble, *a.* உறுதியுள்ள, அசையாநிலையான, நிலைமையுள்ள, அசலமான.

Dū'ra-ble-ness, *s.* திரம், நிலைமை.

Dū'ra-bly, *adv.* அழியாமையாய், நிலைமையாய், நிலைக்கத்தக்கதாய்.

Dū'rance, *s.* மறியல், தடுப்பு, நிலைக்கை, தரிப்பு.

Du-rant′, *s.* மிடுக்கன்புடைவை, அழு த்தினஆட்டுமெயிர்ப்புடைவை.
Du-rā′tion, *s.* நீளிப்பு, நிலை, நீட்சி, நிலையுள்ளதன்மை.
of life, ஆயுள், வாழ்நாள்.
Dūre, *v. n.* (*see* Endure.) நீடித்துநிற்றல்.
Du-ress′, *s.* நெருக்கம், மறியல்.
Dūr′ing, *prep.* நீளிப்பு, நீட்சி, அளவு, மட்டு, காலஇடப்பொருள்தரும்ஏழாம்வேற்றுமையுருபு.
yesterday, நேற்றளவில், நேற்றுமட்டில், நேற்றுவரையில்.
Dusk, *s.* மாலைமயக்கம், கருகுமாலை, சந்தியிருள், மைமல்.
Dusk, *a.* மைமலான, மங்கலான, கருகலான, மயங்கலான.
Dusk′i-ly, *adv.* மைமலாய், செங்கல்மங்கலாய், கருகலாய்.
Dusk′i-ness, *s.* மங்குளம், மந்தாரம், மங்கல், மாலைமயக்கம்.
Dusk′ish, *a.* மைமலான, மந்தாரமான.
Dusk′ish-ly, *adv.* மைமலாய், பூங்காரமாய்.
Dusk′ish-ness, *s.* பூங்காரம், மப்பு, மந்தாரம், மங்குளம்.
Dusk′y, *a.* கருகலான, மங்கலான், துக்கமான.
color, கபிலம், மங்கல், கருமைகலந்தசெம்மை, ஊதா.
evening, கருகுமாலை.
to grow dusky, கருகுதல், மைமலாதல்.
Dust, *s.* தூள், துகள், புழுதி, தூசி, தூளம், தூளி, நீறு, பொடி, தூம்.
as earth, மண்.
Dust, *v. a.* துடைத்தல், அழுக்ககற்றல்.
as sprinkle with dust, தூவுதல், தூள்தூவுதல்.
Dust′-brush, Dust′er, *s.* வாருகோல், துடைப்பம், சோதினி.
Dust′i-ness, *s.* தூசிபிடித்ததன்மை.
Dust′-man, *s.* அழுக்குவாருவோன்.
Dust′y, *a.* தூசியான, தூசிபிடித்த, துகளடைந்த.
Dū′te-ous, *a.* கடனுன, நேர்மையான, கீழ்ப்படிவான, கடப்பாடான, அமைவான.

Dū'ti-ful, *a.* கடமையுள்ள, கட்டுப்பாடுள்ள, அமைவுள்ள, மரியாதையுள்ள.
daughter, அமைந்தபுத்திரி, சற்புத்திரி.
son, அமைந்தபுத்திரன், சற்புத்திரன்.

Dū'ti-ful-ly, *adv.* கடமையாய், கணிசமாய், மரியாதையாய்.

Dū'ti-ful-ness, *s.* கடப்பாடு, கீழ்ப்படிவு, கடமை, அமைவு.
as respect, கணிசம்.

Dū'ty, *s.* கடமை, கடன், செய்யவேண்டியது, உரிமை, பொறுப்பு, கடப்பாடு.
on goods, தீர்வை, ஆயம், சுங்கம்.
of soldiers, சேவகம்.
as function, தொழில்.

Du-um'vir, *s.* இருதலைவரிலொருபிரதானி.

Du-um'vi-rate, *s.* இருபேர்கூடியஆளுகை.

Dwärf, *s.* குள்ளன், கட்டையன், குட்டையன், குறளன், குறியன், குஞ்சன், கூழையன், வாமனன்.

Dwärf, *v. a.* சிறுப்பித்தல், குறுக்குதல்.

Dwärf'ish, *a.* கட்டையான, குட்டையான, குறளான, குறுமையான, குள்ளமான.
to be dwarfish, குறுகுதல்.

Dwärf'ish-ly, *adv.* குறுமையாய், சிறுமையாய், குட்டையாய்.

Dwärf'ish-ness, *s.* குஞ்சத்துவம், குள்ளம், குறுமை.

Dwell, *v. n.* குடியிருத்தல், வாசம்பண்ணுதல், உறைதல், தங்குதல், நிலைத்தல், வசித்தல்.
on, சிந்தித்தல், தாற்பரித்தல்.

Dwell'er, *s.* வாசம்பண்ணுகிறவன், வாசி, வசிப்போன்.

Dwell'ing, *s.* வாசம், இருப்பு, இருப்பிடம், தானம், நிலையம், பதி, கிரகம், உறைவிடம், விசயம்

Dwell'ing-house, *s.* வீடு, வாசம், வதி.

Dwell'ing-plāce, *s.* வாசஸ்தலம்.

Dwin'dle, *v. a.* குறைத்தல், சிறுப்பித்தல்.

Dwin'dle, *v. n.* குறைதல், சிறுகுதல், மெலிதல், சிறுத்தல், சுருங்குதல்.

Dwin'dled, *a.* குறைந்த, சுருங்கின, சிறுகின, மெலிந்த.
Dye, *s.* சாயம், நிறம், வன்னம்.
Dye, *v. a.* சாயங்காய்ச்சுதல், சாயந்தோய்த்தல், சாயந்தீர்தல், நிறங்கொடுத்தல், வன்னந்தீர்தல்.
Dye'ing, *s.* சாயமிடுகை, சாயந்தீருகை.
Dy'er, *s.* சாயக்காரன், வன்னக்காரன்.
Dy'ing, *s.* மரணம், சா, சாவு.
Dy'ing, *a.* சாகிற, மரணமடைகிற, காலஞ்செல்லுகிற, இறக்கிற, வாடுகிற, இற்றுப்போகிற.
as mortal, சாவுக்குரிய, மரணத்துக்குரிய.
words, தேகாந்தியவார்த்தை, கடைக்காலமொழி.
Dy'ing-ly, *adv.* சார்குந்தறுவாயாய், மரணஅவஸ்தையாய்.
Dy-nam'ics, *s.* சலனசாத்திரம், எந்திரஇயக்கவிதி, இயந்திரசாத்திரம், இயந்திரசூத்திரம்.
Dy'nast, *s.* அதிபதி, அதிபத்தியம்
Dy'nas-ty; *s.* அதிபத்தியம், அரசாட்சி, இராசவமிசம்.
Dys-en-ter'ic, *a.* இரத்தக்கழிச்சலுள்ள, இரத்தாமயமான.
Dys'en-ter-y, *s.* அதிசாரம், இரத்தக்கழிச்சல், வயிற்றுளைவு, உதராமயம், வயிற்றுக்கடுப்பு, கிராணி, மூலக்கிராணி, இரத்தபேதி.
incipient, சீதக்கழிச்சல், சீதநோய், துவக்கம்.
Dys-pep'sy, *s.* அசீரணம், செரிகுடல், குன்மம்.
with nausea, குன்மப்பிரட்டு.
Dys-pep'tic, *a.* அசீரணமான, குன்மமுள்ள, குன்மத்துக்கடுத்த.
Dys'u-ry, *s.* நீர்க்கடுப்பு, நீரெரிவு, நீர்ச்சிறுப்பு.

E.

Each, *a.* ஒவ்வொரு, அந்தந்த.
singly, தனித்தனியே, வெவ்வேறாய், ஒவ்வொன்றாய், தனிமையாய்.
Ea'ger, *a.* பேராசையுள்ள, அவாவுள்ள, ஆவலுள்ள.
desire, அவா, ஆவல், கெலி, தணியாவிருப்பம், ஆருக்காதல், பேராசை.

to be eager for, கவிதல், கருடுதல், கெலிகொள்ளுதல், வாஞ்சித்தல்.
Ea'ger-ly, *adv.* ஆவலாய், தேட்டமாய், அவாவாய், தவிப்பாய், கூர்மையாய், முயற்சியாய்.
as hastily, தீவிரமாய்.
Ea'ger-ness, *s.* கெலி, தாகம், தேட்டம், அவா, தவிப்பு, ஆவல், வேகம், சுறுசுறுப்பு.
Ea'gle, *s.* கழுகு.
a coin, ஓர்நாணயம்.
a constellation, ஓர்விண்மீன்.
Ea'gle-ey-ed, *a.* கூர்ந்தவிழியுள்ள, நுண்ணியபார்வையுள்ள, பகுத்தறிவுள்ள, நுண்ணறிவுள்ள.
Ea'glet, *s.* கழுகுக்குஞ்சு.
Ear, *s.* காது, செவி, கன்னம், சோத்திரம், சிரவணம்.
tip, or rim of, மடல்.
lobe of, சோணை.
as attention, கவனம், கேள்வி.
of corn, கதிர், குலை.
corn, &c., in the husk, பொத்தி.
pick, குறும்பிவாங்கி.
ache, செவிக்குட்குத்து, காதுக்குத்து.
drops, உருவல், தொங்கணி.
hoops, தூங்கணி, தொங்கணி.
ring, கடுக்கன், கன்னபூஷணம், காதணி, குண்டலம், குழை, தோடு.
shot, கேட்கத்தக்கதூரம், கூப்பிடுதூரம்.
wax, காதுக்குறும்பி, காதழுக்கு, செவிமலம்.
wig, காதுப்பூச்சி, காதுப்பாம்பு.
witness, கேள்விச்சாட்சி, காதாரக்கேட்டஒப்பனைசொல்வோன்.
to dig out ear wax, குடைதல்.
to be by the ears, சண்டைபிடித்தல், அடிபிடிப்படுதல், கம்பலைப்படுதல்.
to set by the ears, சண்டைமூட்டுதல், கம்பலைமூட்டுதல்.
Ear, *v. n.* கதிர்வீசுதல், கதிர்வருதல், கதிரீனுதல்.
Ear'ing, *s.* வேளாண்மை, கிரிஷி.
as the ears or heads shoot forth, கதிர்கக்குகை, ஈனுகை.
Earl, *s.* ஓர்பட்டப்பெயர்.

Earl'dŏm, s. ஒர்பட்டக்காரனுடைய விராச்சியம்.
Ear'li-ness, s. முந்துந்தன்மை.
Ear'ly, a. அதிகால, புராதன, முந்தின, பூருவ, எற்கென.
Ear'ly, adv. வெள்ளென, அதிகாலமே, நேரத்தோடே, காலம்பெற, புலர, விடிய, பிராதக்காலமாய்.
prior in time, எற்கெனவே.
Earn, v. a. உழைத்தல், தேடுதல், சம்பாதித்தல், சேகரித்தல், அர்ச்சித்தல்.
Earn'est, s. உண்மை, மெய்ச்சங்கதி, முதற்பலன், கைம்முதல், அச்சாரம்.
in earnest, not in jest, உண்மையாய், மெய்யாய், சத்தியமாய்.
Earn'est, a. முயற்சியுள்ள, ஊக்கமான, சாக்கிரதையுள்ள, விழிப்புள்ள, ஆவலுள்ள.
desire, தேட்டம், வாஞ்சை, நாட்டம், அவா, ஆதுரம், எடணை.
money, அச்சாரப்பணம்.
to be earnest for, கருடுதல், கவிதல்.
Earn'est-ly, adv. ஊக்கமாய், வேகமாய், வாஞ்சையாய், மனதார.
Earn'est-ness, s. காதல், உறுதி, அவா, ஊக்கம், வேகம், தவிப்பு, விருப்பம்.
Earn'ing, s. உழைப்பு, தேட்டம், சேகரிப்பு, சம்பளம், பலன், நயம்.
Earth, s. பூமி, பூலோகம், சகம், புவி.
as ground, நிலம், மண், தரை.
Earth, v. a. கிண்டிப்புதைத்தல், மண்ணல்மூடுதல்.
Earth'born, a. பூமியிலுற்பவித்த, மண்ணின்முளைத்த, பூமிக்கடுத்த, புவனுற்பத்தியான, சகத்துற்பத்தியான.
Earth'en, a. மண்ணிஞலுண்டான, மண்ணுற்செய்த.
ware or vessels, குயக்கலம், மட்கலம், மட்பாண்டம்.
Earth'i-ness, s. மண்தன்மை, லௌகிகம், இழிமை, மண்ணியல்.
Earth'li-ness, s. லௌகிகவிச்சை, பிரபஞ்சமயக்கு, சிற்றின்பமயக்கு.
Earth'ling, s. பௌதிகன், அழிவுள்ளோன், அநித்தியன்.
Earth'ly, a. உலக, பிரபஞ்ச, லௌகிக, சிற்றின்ப, அநித்திய.

Earth'ly-mīnd'ed, *a.* உலகசிந்தனையுள்ள, மாமிசசிந்தையுள்ள, பொருளாசையுள்ள, லௌகீகவிச்சையுள்ள.

Earth'ly-mīnd'ed-ness, *s.* லௌகீகசிந்தை, சிற்றின்பமனம்.

Earth'quāke, *s.* பூமியதிர்ச்சி, பூகம்பம், பூமிநடுக்கம்.

Earth'wŏrm, *s.* நிலப்புழு, நாங்கூழ், பூநாகம், நாகப்பூச்சி.

a person, கீழ்மகன், நீசன், ஈனன்.

Earth'y, *a.* மண்ணுன, மண்போன்ற, மண்ணுக்கடுத்த.

Ease, *s.* ஆறுதல், தணிவு, விட்டாற்றி, இலகு, சுலபம், சுகம், சௌக்கியம், சகாயம், சுகவாழ்வு, செல்வம், ஓய்வு.

at ease, சுகவாழ்வாய், சுகபோகமாய், சௌக்கியமாய்.

Ease, *v. a.* ஆற்றுதல், தணித்தல், ஆறுதல்செய்தல், இலகுவாக்குதல், இலேசாக்குதல், சகாயம்பண்ணுதல்

Ease'ment, *s.* இலகு, வசதி, சுகங்கொடுக்கிறது.

Eas'i-ly, *adv.* இலகுவாய், எளிதாய், சுகமாய், வருத்தமின்றி.

Eas'i-ness, *s.* இலேசு, இலகு, சுகம், சகாயம், இணக்கம், படியுமியல்பு, மிருது.

East, *s.* கிழக்கு, கீழ்த்திசை, கீழ், எழுவான், குணக்கு, கீழ்பால்.

East, *a.* கிழக்கிலுள்ள, குணக்கிலுள்ள, கீழ்த்திசையிலுள்ள.

wind, கீழ்காற்று, கொண்டல்.

East'er, *s.* மாமிசோத்தானநாள்.

Eas'ter-ly, *a.* கிழக்கிலிருக்கிற, கிழக்குக்குநேரான், கீழ்த்திசையிலுள்ள.

Eas'tern, *a.* கிழக்கிலுள்ள, கீழ்த்திசையிலுள்ள.

Eas'ter-ly, East'ward, *adv.* } கிழக்கே, கீழ்த்திசையாய்.

Eas'y, *a.* எளிமையான, எளிதான, இலகுவான, இலேசுள்ள, சுலபமான, அமைதியான, சாந்தமான, சௌக்கியமான.

manners, இளக்கம், படிவானநடை, பாவனை, பதமை, மரியாதை.

style, செவ்வியவாசகம், செஞ்சொனடை, செம்பதநடை, கதலிபாகநடை.

Eat, *v.* சாப்பிடுதல், தின்னல், புசித்தல், உண்ணல், அருந்துதல்.
away, as caustic, கல்லுதல், அரித்தல், கரைத்தல்.
one's words, கூறியதைநிராகரித்தல், சொற்குற்றம்பரிகரித்தல்.
as rust, அரித்தல்.
as enjoy or experience, அநுபவித்தல், புசித்தல், நுகர்தல்.
Eat'a-ble, *s.* போசனபதார்த்தம், தீன்பண்டம், உணவு, ஆகாரம், புசிகரணம், துப்பு, துத்தி.
Eat'a-ble, *a.* தின்னத்தக்க, தீனுக்குரிய, உணவுக்குவந்த, உருசிகரமான.
Eat'er, *s.* உண்போன், அரிப்பது.
Eat'ing, *s.* புசிக்கை, புசிப்பு.
Eat'ing-house, *s.* அன்னசத்திரம், அசனமண்டபம், அன்னசாலே.
Eaves, *s.* தாழ்வாரம், வீட்டிறப்பு.
Eaves'drop-per, *s.* ஒட்டுக்கேட்கிறவன்.
Ebb, *s.* நீர்வற்றம், வற்றம், தாழ்ச்சி, இழிவு.
decline, குறைவு, தாழ்ச்சி.
of life, வயோவிருத்தம்.
and flow, ஏற்றம்வற்றம், ஏற்றத்தாழ்ச்சி.
Ebb, *v. n.* வற்றுதல், குறைதல், இழிதல், தாழ்தல்.
Ebb'tīde, *s.* வற்றம், குறைவு.
Eb'on, *a.* கருங்காலிபோன்ற, கரிய.
Eb'on-īze, *v. a.* கருமையாக்கல், கருக்குதல்.
Eb'on-y, *s.* கருங்காலி, கதிரம்.
red, செங்கருங்காலி.
E-brī'e-ty, *s.* குடிவெறி, மதுமயக்கு, இலாகிரி.
E-bri-os'i-ty, *s.* நிதவெறி, தினவெறி.
Eb-ul-li'tion, *s.* பொங்கல், கொதி, வேகம், கொதிப்பு.
Ec-cen'tric, *s.* பிரதிமண்டலம், வேற்றுமத்தியசக்கரம், ஒழுங்கற்றது.
Ec-cen'tric, Ec-cen'tric-al, *a.* நடுமையத்துக்குவிலகிய, கோமாளமுள்ள, ஒழுங்கற்ற, வழக்கக்கேடான.
in geometry, இதரமத்திய, பிரதிமண்டல.
person, தேசாசாரம்விலகிநடப்போன்.

Ec-cen-tric'i-ty, *s.* மையவிலக்கு, மத்திப்பெயர்வு, இழுக்கு, தக்கடி, ஏகதேசம், விபரீதம்.
in astronomy, அவமத்தியம்.

Ec-chy-mō'sis, *s.* இரத்தக்கண்டல்.

Ec-cle-si-as'tēs, *s.* வேதாகமத்தின்பிரசங்கியின்புத்தகம்.

Ec-cle-si-as'tic, *s.* குரு, தேசிகன்.

Ec-cle-si-as'tic, } *a.* கிறிஸ்துசபைக்
Ec-cle-si-as'tic-al, } குரிய.
body, institution, &c., குருசங்கத்தார், வேதநூலாசிரியர், மதபோதகாசிரியர், வேதசாத்திரக்கல்லூரி.

Ech-ī'nus, *s.* முட்பன்றி, ஓர்மட்டி.

Ech'o, *s.* எதிரொலி, மாறொலி, பிரதிதொனி, வியனுநாதம், அனுநாதம், சீர்க்காரம், குன்றுகூப்பிடுகை.

Ech'o, *v.* எதிரொலித்தல், மாறொலித்தல், சீர்க்காரங்கொள்ளுதல்.

E-clāt', *s.* வியப்பொலி, சந்தோஷாரம்பம், பிரகாசம், வேடிக்கை.

Ec-lec'tic, *s.* பலகலைத்திரட்டுண்டாக்குவோன்.

Ec-lec'tic, *a.* தெரிந்தெடுக்கிற.

Ec-lec'tic-al-ly, *adv.* தெரிந்தெடுத்தவிதமாய்.

E-clipse', *s.* கிரகணம், உபராகம், ஒளிமறைவு.
to calculate, கிரகணங்கணித்தல்.
beginning of, பரிசனம், பரிசம்.
duration of, கிராணகாலம், கிரகணநிலைகாலம்.
end of, மோட்சம், மோசனம்.
of the sun, சூரியகிராணம்.
of the moon, சந்திரகிராணம்.

E-clipse', *v. a.* கிரகித்தல், பரிசித்தல், இருட்டாக்கல், மறைத்தல்.
to disgrace, ஈனப்படுத்தல், மங்கப்பண்ணுதல்.

E-clip'tic, *s.* கிராந்திமண்டலம், கிராந்திகட்சம், அருக்கன்வீதி.

E-clip'tic, *a.* கிராந்திமண்டலத்துக்கடுத்த, கிரகண.
limit, கிரகணசங்கைத்தானம்.

Ec'logue, *s.* இடையர்பாடல், முல்லைப்பண்.

E-co-nom'ic, } *a.* மட்டாய்ச் செல
E-co-nom'ic-al, } விடுகிற,இல்லோ
ம்பலுக்கடுத்த.

E-co-nom'ic-al-ly, *adv.* வரையறையா
ய், காரியக்கெட்டியாய், ஒறுப்பாய்,
மத்திமமாய், மட்டாய்.

E-co-nom'ics, *s.* இல்வாழ்வினிலக்கண
ம், இல்லோம்புமுறை.

E-con'o-mist, *s.* மட்டாய்ச்செலவிடு
வோன், காரியபாகன், இல்லோம்பு
வோன்.

E-con'o-mīze, *v.* இல்லோம்புதல், மட்
டாய்ச்செலவிடுதல்.

E-con'o-my, *s.* இல்லோப்பம், கட்டுப்
பாடு, வரையறை, மட்டானசெலவு,
ஒறுப்பானநடை.

to use with economy, மட்டுப்படுத்த
ல், கட்டுப்பாடுபண்ணுதல், வரைய
றையாய்ப்பார்த்தல்.

system of rules, ஒழுங்குப்பிரமாண
ம், நிருவாகம்.

of nations, தேசாசாரம், குலாசாரம்.

Ec'sta-si-ed, *a.* அவசமான, பரவசமா
ன, பிரமையான.

Ec'sta-sy, *s.* அவசம், பரவசம், தன்வச
மின்மை, விவசம், விம்மிதமயக்கு,
மிகுகளிப்பு, ஆனந்தக்களிப்பு.

Ec-stat'ic, } *a.* அவசமான, பரவச
Ec-stat'ic-al, } மான, மிகுகளிப்பு
ள்ள.

Ec-u-men'ic-al, *a.* சாதாரண, பொது
வான.

E-dā'cious, *a.* உணவாசையுள்ள, பெ
ருஉண்டியுள்ள, தீனவாவுள்ள.

E-dac'i-ty, *s.* பட்சணம், போசனபிரி
யம், உணவாசை, தீனவா.

Ed'dish, *s.* கொரு, அரிதாளில்முளைக்
கும்பயிர், நரு.

Ed'dy, *s.* எதிரோட்டம், நீர்ச்சுழி, நீர்ச்
சுழல், வாயுச்சுழி, சூறை.

Ed'dy, *v. n.* சுழலுதல், சுழித்தல்.

E'den, *s.* ஏதேன்தோட்டம்.

Edge, *s.* கூர், கூர்மை, கதுமை, கருக்
கு, தாரை, நுதி, வாய், பூ, நுனி, பா
லிகை.

as border, விளிம்பு, ஓரம், அருகு,க
ரை, தீரம், பக்கம், வடிம்பு.

on edge, as teeth, பற்கூச்சம்.

Edge, *v. a.* தீட்டுதல், கூராக்குதல், விளிம்புகட்டுதல், தலைகட்டுதல், கோபமூட்டுதல், குற்றுதல், 'எழுப்பிவிடுதல், அரக்கித்தள்ளுதல், ஒற்றுதல்.

Edg'ed, *a.* கூர்மையுள்ள, கதுமையுள்ள.

Edge'less, *a.* மழுங்கின, மணையான, மொட்டையான, கூரில்லாத.

Edge'tool, *s.* கூராயுதம், நுதியாயுதம்.

Edge'wise, *adv.* ஒருச்சாய்த்து, ஓராயமாய், கூர்ப்புறமாய்.

Edg'ing, *s.* கெண்டை, சரிகைப்பின்னல், தொங்கல், விளிம்பில்த்தொங்குமலங்காரத்தையல்.

Ed'i-ble, *a.* தீனுக்குரிய, உணவுக்குவந்த, உருசிகரமான, ஆகாரத்துக்கேற்ற, இரசவஸ்துவுக்கேற்ற.

E'dict, *s.* கட்டளைச்சட்டம், பிரமாணம், விதி.

Ed-i-fi-cā'tion, *s.* ஊன்றக்கட்டுகை, ஸ்திரப்பாடு, படிப்பனை, புத்தி, மனத்தேற்றம், தெளிவு.

Ed'i-fi-cā-to-ry, *a.* முயற்சிக்கடுத்த, படிப்பனையான, தெளிவுக்கேற்ற.

Ed'i-fice, *s.* வீடு, ஆலயம், மாடம், ஆகரம், கோயில்.

Ed'i-fī-er, *s.* தேறப்பண்ணுவோன், படிப்பிப்போன், கற்பிப்போன், தெளிவிப்போன், தேற்றுவோன்.

Ed'i-fy, *v. a.* ஊன்றக்கட்டுதல், ஸ்திரப்படுத்தல், போதித்தல், உபதேசித்தல், தெளிவித்தல், உறுதிப்படுத்தல்.

Ed'i-fy-ing-ly, *adv.* புத்திபோதனையாய்.

Ed'it, *v. a.* புத்தகமுண்டாக்கிப்பரப்புதல், நூல்செய்துசெலுத்தல்.

E-di'tion, *s.* புத்தகப்பதிப்பு, புத்தகப்பிரசித்தம், ஒருமுறையிற்பதித்தது.

Ed'i-tor, *s.* புத்தகத்தைஅச்சுப்பதிப்பிக்கிறவன், புத்தகப்பிரசித்தாதிக்கன், புதினபத்திராதிகாரி, புத்தககாரியஸ்தன்.

Ed-i-tō'ri-al, *a.* புத்தகாதிகாரிக்குரிய.

Ed'i-tor-ship, *s.* புத்தகப்பிரசித்தாதிக்கம், புத்தககாரியஸ்தன்.

Ed'u-cāte, *v. a.* அறிவுபயிற்றுதல், படிப்பித்தல், பழக்குதல், வளர்த்தல், கற்பித்தல், வித்தியாப்பியாசம்பண்ணுதல்.

Ed-u-cā'tion, s. கல்வித்தேர்ச்சி, படிப்பு, பழக்கம், கலாபாலனம், அப்பியாசம், கல்விப்பயிற்சி.

Ed-u-cā'tion-al, a. பழக்கத்துக்கடுத்த, பயிற்சியால்வந்த, படிப்புக்கடுத்த, அப்பியாசத்துக்கடுத்த.

Ed'u-cā-tor, s. உவாத்தி, ஆசான், பாலனன், அப்பியாசப்படுத்துவோன்.

E-dūce', v. a. வருவித்தல், பிறப்பித்தல், தோற்றுவித்தல், வெளிப்படுத்தல்.

E'duct, s. வருவிக்கப்பட்டது, தோற்றியது, பிறப்பித்தது.

E-duc'tion, s. பிறப்பு, வருவிப்பு, தோற்றம்.

E-dul'co-rāte, v. a. தூய்தாக்கல், களிம்பகற்றல், தெளிவித்தல், தித்திப்பாக்கல்.

E-dul-co-rā'tion, s. இனிப்பாக்குகை, களிம்பகற்றுகை, மாசுநீக்குகை, சுத்தமாக்கல், தித்திப்பாக்குகை.

Eel, s. மலங்கு, விலாங்கு.

Eel'pot, s. மலங்குபிடிக்குங்கூடு, கரப்பு, கைமீன்கூடு.

Ef'fa-ble, a. சொல்லக்கூடிய.

Ef-fāce', v. a. அழித்தல், கிறுக்குதல், துடைத்தல், சீத்தல், திரித்தல், தேய்த்தல்.

Ef-fāc'ing, s. துடைப்பு, தேய்ப்பு, அழிப்பு.

Ef-fect', s. காரியம், பலன், பலிப்பு, இலாபம், உறுதி, உள்ளது, காரியசித்தி, சபலம்.

of hunger, பசித்தாக்கம், பசித்தவக்கம்.

to take effect, சித்தித்தல், தைத்தல், பலித்தல்.

to this effect, இதற்கடுத்ததாய், இந்தக்கருத்தாய்.

Ef-fect', v. a. காரியப்படுத்தல், செய்தல், நடப்பித்தல், உண்டாக்குதல், இயற்றுதல், செலுத்துதல், தீர்த்தல், நிறைவேற்றுதல், சித்தியாக்கல், பிரேரித்தல்.

to be effected, காரியப்படுதல், தீர்தல், இயலல்.

Ef-fect'i-ble, a. இயற்றக்கூடிய.

Ef-fect'ive, a. இயற்றத்தக்க, உண்டாக்கத்தக்க, நிறைவேற்றத்தக்க, செலுத்தத்தக்க, செயற்படுத்துகிற, இயற்றுகிற.

Ef-fect'ive-ly, *adv.* காரியப்பாடாய், பலிப்பாய், பலமாய், தாக்கமாய்.

Ef-fect'less, *a.* பலமற்ற, காரியப்பாடில்லாத, பிரயோசனமற்ற, சித்தியற்ற.

Ef-fect'or, *s.* உண்டாக்குவோன், செய்வோன், இயற்றுவோன், கருத்தன், காரியப்படுத்துவோன், சித்தியாக்குவோன்.

Ef-fects', *(pl.) s.* தட்டுமுட்டுகள், அசைவுள்ளஆதனங்கள், தளபாடம், சரக்கு, முஸ்தீதுகள்.

Ef-fect'u-al, *a.* காரியப்பாடான, பலனுன, பலிக்கத்தக்க, கைகூடத்தக்க, இயலுந்தன்மையுள்ள, சித்தியாக்குகிற.

Ef-fect'u-al-ly, *adv.* பலமாய், சீராய், காரியப்பாடாய், பலிப்பாய்.

Ef-fect'u-āte, *v. a.* நடப்பித்தல், சேட்டிப்பித்தல், செய்துமுடித்தல், இயற்றுதல், நிறைவேற்றுதல், சித்தியாக்கல்.

Ef-fem'i-na-cy, *s.* தைரியமின்மை, வீரமின்மை, பேதைமை, பெண்மை, நொய்மை, நாணம், சிற்றின்பம், காமம்.

Ef-fem'i-nāte, *v. a.* பெண்மையாக்கல், திடமழித்தல், மெலித்தல், உரோசங்கெடுத்தல்.

Ef-fem'i-nate, *a.* பெண்மையுள்ள, நொய்ய, நாணமுள்ள, கோழையான, மோகமுள்ள.

person, தைரியவீனன், பெண்ணன், காமுகன்.

Ef-fem'i-nate-ly, *adv.* பெண்டன்மையாய், நொய்மையாய்.

Ef-fem'i-nate-ness, *s.* அதைரியம், வீரமின்மை, பெண்மைத்தனம்.

Ef-fer-vesce', *v. n.* கொதித்தல், பொங்குதல், நுரைத்தெழும்பல்.

Ef-fer-ves'cence, *s.* பொங்குகை, கொதிப்பு, நுரைப்பு.

Ef-fer-ves'cent, *a.* கொதிக்கிற, நொதிக்கிற.

Ef-fēte', *a.* கனிகொடாத, மலடான.

Ef-fi-cā'cious, *a.* பலஞ்செய்யத்தக்க, பலமுள்ள, தத்துவமுள்ள, நிறைவேற்றுகிற, காரியப்படுத்துகிற.

advice, செல்லுஞ்சொல், சித்திக்கும்புத்திமதி.

Ef-fi-cā'cious-ly, *adv.* பலமாய், சித்தியாய்.
Ef-fi-cā'cious-ness, *s.* பலஞ்செய்யத்தக்கதன்மை, பலத்துவம்.
Ef'fi-ca-cy, *s.* பலம், சாரம், நலம், காரியப்பாடு, தத்துவம், திராணி, சித்தி.
Ef-fi'cien-cy, *s.* சித்தியாக்குகை, திராணி, வல்லமை, காரணம்.
Ef-fi'cient, *s.* காரணம், கருத்தா, காரியப்படுத்துவோன்.
Ef-fi'cient, *a.* காரியப்படுத்துகிற, காரணமான, தோற்றச்செய்கிற, உண்டாக்குகிற.
cause, முதற்காரணம், கருத்தா, காரகன், செய்வோன், காரியகத்தா.
man, காரியவான், காரியஸ்தன், செல்வாக்குள்ளவன்.
Ef-fi'cient-ly, *adv.* காரணமாய், பலமாய்.
Ef'fi-gy, *s.* ஒப்புமை, பாவனுரூபம், பிரதிமை, பாவை, பொம்மை.
to carry in effigy, மடலூர்தல், பாவனுரூபஞ்செய்துதூஷணித்தல்.
Ef-flāte', *v. a.* பூரித்தல், வீக்குதல், வாயுவால்நிரப்புதல்.
Ef-flo-resce', *v. a.* சுண்ணம்படர்வித்தல், துகளேற்றல்.
Ef-flo-res'cence, *s.* புட்பகாலம், பூக்கும்பருவம், செந்தளிப்பு, கொப்பளம், வெண்பொடி, சுவேதபஸ்மம்.
Ef-flo-res'cent, *a.* செந்தழும்புள்ள, சுவேதபஸ்மமான.
Ef'flu-ence, *s.* நீர்ப்பாய்வு, வடிவு, நீர்வீழ்ச்சி.
Ef'flu-ent, *a.* பாய்கிற, வடிகிற.
Ef-flū'via, *s.* (*pl.*) துற்கந்தம், மணம், நாற்றம், வாசனை, நச்சுக்காற்றுகள்.
Ef-flū'vi-um, *s.* வஸ்துக்களிலிருந்தெழும்புந்தீயவாசனை, நச்சுக்காற்று.
Ef'flux, *s.* நீரோட்டம், ஊறுகை.
Ef-flux'ion, *s.* பெருக்கு, வடிவு, பாய்வு.
Ef-fōrce', *v. a.* பலபந்தம்பண்ணுதல், இடித்தல், தகர்த்தல், கற்பழித்தல்.
Ef'fōrt, *s.* உற்சாகம், முயற்சி, ஊக்கம், எத்தனம், பிரயத்தனம், பிரயாசம்.
Ef-frŏnt'er-y, *s.* வண்டத்தனம், நிந்தை, வெட்கமின்மை, குறும்பு, மானமின்மை, அவமானம்.

Ef-fulge', *v. n.* பிரபைகாலுதல், சோதி காலுதல், சோபைவீசுதல், பிரகாசித்தல்.
Ef-ful'gence, *s.* மாசோதி, மிகுபிரவை, ஒளி, துலக்கம்.
Ef-ful'gent, *a.* சோதிவீசுகிற, பிரவையுள்ள, சோதியுள்ள, சோபையுள்ள.
Ef-fūse', *v. a.* சொரிதல், வார்த்தல், இறைத்தல், ஊற்றுதல், பொழிதல்.
Ef-fū'sion, *s.* சொரிவு, ஊற்று, இறைப்பு, பொழிவு, வார்ப்பு.
Ef-fū'sive, *a.* ஊற்றுகிற, இறைக்கிற, வார்க்கிற.
Eft, *s.* பல்லி, கெவுளி.
E-gest', *v. a.* கழித்தல், நீக்குதல்.
E-ges'tion, *s.* கட்டம்போக்குகை, மலக்கழிப்பு.
Egg, *s.* முட்டை, அண்டம், சினை.
without a shell, தோல்முட்டை.
the yellow of, மஞ்சட்கரு.
the white of, வெள்ளைக்கரு.
of fishes, &c., சினை.
of a louse, ஈர்.
of a fly, ஈப்பி, ஈச்சினை, ஈமுட்டை.
Egg'-plant, *s.* முட்டைக்கத்தரி, வட்டுக்கத்தரி, வட்டுவழுதுணை.
E'go-ism, *s.* அகம்பிரமம், பரசூனியசாதனம், நாஸ்திகானுசாரம்.
E'go-ist, *s.* நாஸ்திகானுசாரி, நிரீச்சுரவாதி.
E'go-tism, *s.* நானென்றபேச்சு, தற்புகழ்ச்சி, தன்மேம்பாட்டுவசனம், நெடுமொழி, மமதை.
E'go-tist, *s.* தற்புகழ்ச்சிக்காரன், தன்னைமிகவெடுத்துப்பேசுவோன், தன்னைமேம்பாடாக்குவோன், கேவலன், தற்பிரியன், வீம்பன்.
E-go-tist'ic, E-go-tist'ic-al, *a.* } தற்புகழ்ச்சியுள்ள, தன்மேம்பாடுள்ள.
E'go-tīze, *v. n.* தன்னைப்புகழ்ந்தெழுதல், தன்னைமிகவெடுத்துரைத்தல், தன்னைமேலாய்ப்பேசுதல், தன்மேம்பாடுரைத்தல்.
E-grē'gious, *a.* மேலான, அபூருவமான, விதக்கத்தக்க, கடுமையான, மகாகொடிய.
E-grē'gious-ly, *adv.* மிகவுங்கொடுமையாய், மேல்மிச்சமாய்.

E-grē'gious-ness, *s.* அபூருவம், பரு மை, மகாகடுமை.
E'gress, *s.* போக்கு, புறப்பாடு.
E-gres'sion, *s.* புறப்படுகை, கட்டுப் பாட்டினின்றுநீங்குகை, வெளியே போதல்.
Eigh, *int.* களிப்புக்குறி, களிக்குறி.
Eight, *s.* and *a.* எட்டு, அஷ்ட, அட்ட.
give eight to or for each, ஒவ்வொ ன்றுக்குஅல்லதுஒவ்வொருவருக்கு எ ட்டெட்டாய்க்கொடு.
Eight'een, *s.* and *a.* பதினெட்டு, அட் டாதச, பதினெண்.
Eight'eenth, *a.* பதினெட்டாவதான, பதினெட்டாம்.
Eight-eenth'ly, *adv.* பதினெட்டாவ தாய்.
Eight'fōld, *a.* எண்மடங்கான.
Eighth, *s.* எட்டாம்.
Eighth, *a.* எட்டாவதான, எட்டாம்.
Eighth'ly, *adv.* எட்டாவதாய்.
Eight'i-eth, *a.* எண்பதாம்.
Eight'scōre, *s.* நூற்றறுபது.
Eight'y, *s.* and *a.* எண்பது, எண்பான்.
Ei'ther, *a.* or *pr.* இரண்டிலொரு, இரண் டிலெதுவும், ஏதாகிலும், எவனாகிலும்.
this or that, இஃதாவதுஅஃதாவது, இஃதல்லதஃது.
will do, எதுவுங்கூடும்.
give either this or that, இதையாகுத லதையாகுதல்தாரும்.
E-jac'u-lāte, *v. a.* எறிதல், வீசுதல், த ள்ளுதல், எய்தல்.
E-jac-u-lā'tion, *s.* வீச்சு, தள்ளு, எறி, எய்வு, சுருக்கமானவிண்ணப்பம்.
E-jac'u-la-to-ry, *a.* சடுதியாய்விடப்ப ட்ட, சுருக்கமாகச்சொன்ன, செலுத் துகிற.
a prayer, செபஞ்செலுத்தல்.
E-ject', *v. a.* எறிதல், விடுதல், தள்ளுத ல்; நீக்குதல், துரத்துதல், கழித்தல், பறித்தல், அகற்றுதல், செலுத்துதல்.
from the mouth, கொப்பளித்தல், கக் குதல், உமிழ்தல், துப்புதல், காலுதல்.
from office, தொழிலெடுத்தல், தொ ழில்மாற்றுதல், தள்ளுதல்.
poison as snakes, நஞ்சுகக்குதல், ந ஞ்சுமிழ்தல், நஞ்சுகாலுதல்.

E-jec'tion, *s.* தள்ளுபடி, கழிவு, ஆட்சி விலக்கு, கக்கல்.
E-ject'ment, *s.* தள்ளுபடி, பறிப்பு, ஆட்சிப்பிரயோகம், விலக்குமுறி.
Ej-u-lā'tion, *s.* புலம்பு, துக்கம், அழுகை, பிரலாபம்.
Ēke, *v. a.* அதிகப்படுத்துதல், பருப்பித்தல், சேர்த்தல், நிரப்புதல், நீடித்தல், குறைநிரப்புதல்.
E-lab'o-rāte, *v. a.* திருத்துதல், பிரயாசப்பட்டுச்செய்தல்.
to be elaborated, திருந்துதல், பிரயாசத்தோடுமுடிதல்.
E-lab'o-rate, *a.* வேகமுள்ள, தீர்க்கமான, திட்டமான, பிரயாசமாய்ச்செய்த.
work, திருந்தினவேலை, திருத்தமான வேலை, உயர்ந்தவேலை.
E-lab'o-rate-ly, *adv.* திட்டமாய், திருத்தமாய், வேலைநுட்பமாய்.
E-lab'o-rate-ness, *s.* திருத்தமுடைமை, மிகுமுயற்சியோடுமுடிந்தமை.
E-lab-o-rā'tion, *s.* செய்கைத்தேற்றம், திருத்தம்.
E-lănce', *v. a.* ஆயுதமெறிதல், அத்திரம்பிரயோகித்தல்.
E-lapse', *v. n.* செல்லுதல், கழிதல், போதல், இறத்தல், சறுக்குதல், வழுவுதல்.
E-las'tic, *a.* நெகிழ்ந்துறழத்தக்க, அதைக்கத்தக்க, எஃகத்தக்க, ஈயத்தக்க, விசையுள்ள, நிமிரத்தக்க.
to be elastic, எஃகுதல், நெகிழ்ந்துறழுதல், விசைகொள்ளுதல்.
E-las'tic-al-ly, *adv.* ஈய்ந்திறுகத்தக்கவிதமாய்.
E-las-tic'i-ty, *s.* நிமிர்ச்சி, விசை.
of the air, எதிர்ச்சி.
E-lāte', *v. a.* வீங்கப்பண்ணுதல், உச்சாகங்கொள்ளுதல், விம்மிதங்கொள்ளுதல்.
to be elated, இறுமாத்தல், மேட்டிமைகொள்ளல், மனோரதியங்கொள்ளல், செம்மாத்தல்.
E-lāte', *a.* மனவீக்கமான, அனுகூலத்தாற்களிப்புள்ள, செருக்குள்ள, மேட்டிமையுள்ள, மனோற்சாகமான.
E-lāt'ed-ly, *adv.* மனோற்சாகமாய், இறுமாப்பாய், வீம்பாய்.

E-lā'tion, *s.* செருக்கு, இறுமாப்பு, எடுப்பு, களி, களிப்பு, கொலுகொலுப்பு, நிமிர்ச்சி, மேட்டிமை, செம்மாப்பு.

El'bōw, *s.* முழங்கை, கூர்ப்பரம், வளைவு, கோணம், குடா.
chair, கைநாற்காலி.
room, இடுக்கமின்மை.
to be at the elbow, கிட்டியிருத்தல், சமீபித்திருத்தல்.

El'bōw, *v. a.* முழங்கையாலிடித்தல், முழங்கையாற்றள்ளுதல்.
out, அகற்றுதல்.

Eld'er, *s.* மூத்தவன், சிரேட்டன், மூத்தவன், சேட்டை.
as ancestor, கோத்திரப்பிதா.
a tree, ஓர்வகைச்செடி.

Eld'er, *a.* மூத்த, முன்பிறந்த, வயதுபின்னிட்ட, சேஷ்ட.
brother, அண்ணன், தமையன், சிரேட்டன், சேட்டன், முன்னவன்.
sister, தமக்கை, அக்காள், தவ்வை, சேட்டை.
younger brother, தம்பி, சேடன், அனுசன், கனிட்டன், இளவல், பின்னவன்.

Eld'er-ly, *a.* வயதுமுந்தின, முதிர்ந்த.

Eld'ers, *s.* (*pl.*) மூப்பர், தலைமைக்காரர், மூத்தோர்.

Eld'er-ship, *s.* மூப்பு, தலைமை.
the office, தலைமைத்தொழில்.

Eld'est, *a.* தலைமையான, மூப்புள்ள, முதிர்ந்த, சிரேட்டமான.
child, தலைச்சன், முத்தப்பிள்ளை, தலைப்பிள்ளை.
daughter, தலைமகள், மூத்தமகள், மூத்தகுமாரத்தி, சேட்டபுத்திரி.
son, தலைமகன், தலைச்சன், சேட்டபுத்திரன், மூத்தகுமாரன், அக்கிரசன்.

E-lect', *s.* தெரிந்தெடுக்கப்பட்டோன், இரட்சிப்புக்கென்றுநியமிக்கப்பட்டோன்.

E-lect', *v. a.* தெரிதல், நயந்தெடுத்தல், ஏற்படுத்துதல்.

E-lect', *a.* தெரிந்தெடுக்கப்பட்ட, நியமிக்கப்பட்ட.
in theology, நித்தியசீவனுக்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட.

E-lec'tion, *s.* தெரிவு, நியமிப்பு, வரிப்பு.
as choice, தன்னிட்டம், தெரிவு, தற்குறிப்பு.
in theology, தேவநியமம், தேவவிதானம்.
E-lec-tion-eer', *v. n.* உத்தியோகத்திற்குபயோகித்தல், உத்தியோகத்திற்கேற்படுத்தவகைபார்த்தல்.
E-lec-tion-eer'ing, *s.* உத்தியோகவுபயோகம், அதிகாரப்பிரயத்தனம், அதிகாரோபயோகம்.
E-lect'ive, *a.* தெரிதற்கடுத்த, தெரிந்தெடுக்கிற.
E-lect'ive-ly, *adv.* தெரிவாய்.
E-lect'or, *s.* தெரிந்தெடுப்போன், தெரிந்தெடுக்கப்பட்டவன், உத்தியோகநேமாதிகாரி.
E-lect'or-al, *a.* தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கடுத்த.
E-lect'or-ate, *s.* தெரிந்தெடுக்கப்பட்டவனதுஆட்சி.
E-lec'tric, *s.* மின்சாரமேறக்கூடாதபொருள்.
E-lec'tric, *a.* மின்தாதுக்குரிய, மின்சாரத்துக்கடுத்த.
E-lec'tric-al-ly, *adv.* மின்தாதுவிதிப்பிரமாணமாய்.
E-lec-tri'cian, *s.* மின்சாரநூலாசிரியன், மின்சாரநூலப்பியாசி.
E-lec-tric'i-ty, *s.* மின்தாதியல், மின்தாது, சூட்சுமகந்தம், மின்சாரம்.
E-lec'tri-fī-a-ble, *a.* மின்தாதுசகிதமான, மின்சாரம்பெறக்கூடிய.
E-lec-tri-fi-cā'tion, *s.* மின்சாரமூட்டுகை, மின்சாரங்கொண்டிருக்கை.
E-lec'tri-fy, } *v. a.* மின்தாதூட்டுதல்,
E-lec'trīze, } மின்தாதுபாய்ச்சுதல், மின்தாதேற்றல், மின்னிடித்தல், திடுக்கிடப்பண்ணுதல்.
by speaking, திகைக்கப்பேசுதல்.
E-lec'tro-chem'is-try, *s.* மின்தாதுவாதசாத்திரம்.
E-lec'tro-mag-net-ic, *a.* மின்தாதுகாந்தத்துக்குரிய.
E-lec'tro-mag'net-ic-tel-e-graph, *s.* மின்தாதுகாந்தமூட்டியகம்பிவழியாய்ச்செய்திதெரிவிக்குஞ்சூத்திரம்.

E-lec'tro-mag'net-ism, *s.* மின்னையுங் காந்தத்தையும்பற்றியநூல், மின்காந் தஇயல்பறிநூல்.
E-lec-trom'e-ter, *s.* மின்தாதளவிடுங்க ருவி.
E-lec'tu-a-ry, *s.* பாகு, இலேகியம்.
El-ee-mos'y-na-ry, *s.* ஆதுலன், அகதி.
El-ee-mos'y-na-ry, *a.* புண்ணியத்திற்கு க்கொடுத்த, அகதிக்கீய்ந்த.
El'e-gance, *s.* சிறப்பு, அழகு, இலக்கண ம், செம்மை, சீர், நேர், அலங்காரம், சீர்மை, சீத்துவம், வடிவு, வன்னிதம்.
El'e-gant, *a.* அலங்காரமான, அழகான, செவ்விய, சீரான, சிறந்த.
as rich, கோலாகலம், அணி.
dress, அலங்காரஉடை, கோலம், அ லங்காரவஸ்திரம்.
manners, நாகரீகம், மனோகரியம்.
to be elegant, சிறத்தல், சீராதல்.
El'e-gant-ly, *adv.* சீர்மையாய், சிறப்பா ய், பாங்காய், இலக்கணமாய், நாகரீ கமாய்.
E-lē'gi-ac, *a.* ஒப்பாரிக்கடுத்த, ஒப்புக் குரிய, புலம்பலான.
El'e-gy, *s.* ஒப்பாரி, ஒப்பு, துக்கப்பாட்டு.
El'e-ment, *s.* பூதம், பிரகிருதிப்பொரு ள், மூலம், காரணம்.
in chemistry, அணு, வாயு.
(*pl.*) in language, மூலபாடம், நூ லாதாரம்.
the eucharist, திருவிருந்து.
El-e-ment'al, *a.* பூதத்தினுலாய, பூதோ ற்பத்தியான, பௌதீக, மூலாங்குர மான, மூலத்தினுலுண்டாகிற.
El-e-ment-al'i-ty, *s.* பூதக்கூட்டம்.
El-e-ment'al-ly, *adv.* சொல்லர்த்தமாய், மூலபதார்த்தப்படி.
El-e-ment'a-ry, *a.* ஆதிமூலமான, தனி த்த, கலப்பற்ற, மூலபாடத்துக்கடுத்த.
books, மூலபோதநூல், முதற்பாட நூல்.
part in nature, தாது.
El'e-phant, *s.* யானை, ஆனை, கசம்.
female, பிடி, பெண்யானை, வடவை.
male, உம்பல், ஒருத்தல், களிறு.
young, யானைக்கன்று, போதகம், கய ந்தலை.
elephant hook, தோட்டி, அங்குசம்.

scream of, பிளிறல்.
El-e-phan-tī'a-sis, *s.* (of the leg.) யானைக்கால், ஓதக்கால், பொத்தைக்கால், பெருநையல், வெண்குட்டம்.
of scrotum, ஓதம்.
El-e-phant'ine, *a.* யானைக்கடுத்த, யானைபோன்ற, பென்னம்பெரிய.
El'e-vāte, *v. a.* உயர்த்துதல், ஏற்றுதல், எடுத்தல், எழுப்புதல்.
the arm, weapon, &c., ஓங்குதல், உயர்த்துதல்.
to exhalt, dignify, அதிகப்படுத்துதல், மேன்மையாக்குதல்.
to animate, cheer, தைரியப்படுத்தல், உச்சாகப்படுத்தல்.
El'e-vā-ted, *a.* உயர்ந்த, ஏற்றமான, மேலான, பெருமையுள்ள, ஓங்கின.
model or standard, மேலானதிட்டம், உத்திட்டம், எடுத்துக்காட்டு.
land, குறிஞ்சிநிலம், மலைச்சாரல், தடம், கடம், மேட்டுநிலம்.
El-e-vā'tion, *s.* உயரம், உச்சம், உயர்ச்சி, உயர்வு, உன்னதம், எழுச்சி.
exaltation, மகத்துவம், மேன்மை.
in land, திட்டி, திட்டு, திட்டை, மேடு.
as altitude, in astronomy, உயரம், உச்சம்.
El'e-vā-tor, *s.* மிண்டி, ஏற்றுவோன், உயர்த்துவோன்.
in anatomy, ஓர்நரம்பு, எலும்பிடுக்கி.
E-lev'en, *a.* பதினொரு, ஏகாதச.
E-lev'enth, *a.* பதினொராம்.
Elf, *s.* பில்லி, பேய், பிசாசம், குறளன்.
Elf, *v. a.* சடைபின்னுதல்.
Elf'in, *s.* இகழ்ச்சிக்குறிப்புச்சொல்.
Elf'ish, *a.* பிசாசுபோன்ற, கள்ளவேடமான.
E-lic'it, *v. a.* வெளியேயிழுத்தல், வெளியாக்குதல், வெளிப்படுத்துதல்.
sparks, தீத்தட்டிதட்டுதல்.
by artifice, கதைபிடுங்குதல்.
E-lic-i-tā'tion, *s.* வெளிப்படுத்துகை, வெளியாக்குகை.
El-i-gi-bil'i-ty, *s.* தெரிந்துகொள்ளப்படுந்தகுதி, தகைமை, தகுந்தன்மை, பக்குவம்.

El'i-gi-ble, *a.* அதிகசிறப்புள்ள, தகுதியான, தெரிந்துகொள்ளப்படத்தக்க.
El'i-gi-ble-ness, *s.* தகுதி, பக்குவம், போதியதன்மை, தெரிந்துகொள்ளப்படுந்தன்மை.
El'i-gi-bly, *adv.* பக்குவமாய், தகுதியாய், திறமாய்.
E-lim'i-nate, *v. a.* கழித்தல், தள்ளுதல், வாசலுக்குப்புறம்பேதள்ளுதல்.
E-lim-i-nā'tion, *s.* கழிவு, கழிப்பு, தள்ளுகை.
E-li'sion, *s.* கெடுதல், உலோபம், விகாரம்.
of a consonant, மெய்கெடுகை, ஒற்றுக்கெடுகை.
El-ix-ā'tion, *s.* அவிப்பு, சீரணிப்பு, செரிப்பு.
in pharmacy, சாறுவாங்குகை.
E-lix'ir, *s.* தைலம், திராவகநீர், வேதைமருந்து, முதல்வடி, முயற்சிதருமருந்து.
Elk, *s.* மரை.
Ell, *s.* ஓரளவுகோல்.
El-lipse', El-lip'sis, *s.* அண்டவடிவம், முட்டைவடிவு, அண்டாகாரம், அண்டாகிருதி.
in grammar, எச்சம், சொல்லெச்சம், இசையெச்சம், சொல்லொழிபு.
in geometry, தீர்க்கவட்டம், முட்டைவடிவு.
El-lip'soid, *s.* தீர்க்ககோளம், அண்டகோளம்.
El-lip'tic, El-lip'tic-al, *a.* எச்சமான, ஒழிபான, முட்டைவடிவான.
to be elliptical, எஞ்சிநிற்றல், இசையெச்சமாய்நிற்றல்,
El-lip'tic-al-ly, *adv.* அண்டாகிருதியாய், குறையாய், எச்சமாய்.
El-lip'tic-i-ty, *s.* தீர்க்ககோளவடிவு.
Elm, *s.* ஓர்மரம்.
El-o-cū'tion, *s* உச்சரிப்பு, உச்சாரணம், அட்சரசுத்தி, சாதுரியம், பேசுந்தத்துவம், வாய்சாலம், சொற்கோவை.
El-o-cū'tive, *a.* சாதுரியமான, சாமர்த்தியமுள்ள, அட்சரசுத்தியுள்ள, வாசாலமுள்ள.
El'o-gy, E-lō'gi-um, *s.* புகழ்ச்சி, பேர், புகழ்.

E-loin', *v. a.* பிரித்தெடுத்தல், விலக்கிம றைத்தல், தூரப்படுத்தல்.
E-lon'gāte, *v. a.* நீட்டுதல், நீளச்செய் தல்.
E-lon'gāte, *v. n.* நீடித்தல், நீளுதல், நீ ளித்தல், நெடுகுதல்.
in astronomy, விலகுதல், உச்சப்படு தல்.
E-lon'gā-tion, *s.* நீட்டிப்பு, நீட்சி, தூரம்.
in astronomy, கிரகதூரம், உச்சம்.
in surgery, பொருத்துநுகைவு.
E-lōpe', *v. n.* ஒளித்தோடிப்போகுதல்.
E-lōpe'ment, *s.* ஒளித்தோடுகை.
E-lōp'er, *s.* ஒளித்தோடுவோன்.
El'o-quence, *s.* வாசாலம், சொல்வல்ல பம், சொல்வன்மை, பேச்சுவல்லப ம், மதுரபாஷணம், சொற்சாதுரிய ம், வாக்குவல்லபம்.
El'o-quent, *a.* சொல்வல்லபமுள்ள, வா சாலமுள்ள, பேச்சுத்திராணியுள்ள.
persons, சொல்வல்லோர், சாதுரிய வான்கள்.
El'o-quent-ly, *adv.* வாசாலமாய், சொ ல்வன்மையாய், சொற்றிறமாய், வாக் கலங்காரமாய்.
Else, *adv.* அல்லது, அல்லாவிட்டால், மற்றப்படி.
Else'where, *adv.* எங்கேயாகுதல், வே றெங்கும், எங்கேயென்றாலும்.
who else, வேறார்.
E-lū'ci-dāte, *v. a.* விளக்குதல், தெளி வித்தல், விளங்கச்செய்தல், விபரித் தல்.
E-lu-ci-dā'tion, *s.* விளக்கம், தெளிவி ப்பு, பிரகாசம், பிரசித்தம், துலாம் பரம்.
E-lū'ci-da-tive, *a.* வெளியாக்குகிற, வி ளக்குகிற, தெளிவிக்கிற.
El-uc-tā'tion, *s.* வெடிப்பு, புறப்படு கை.
E-lūde', *v.* தப்பியொளித்தோடுதல், உ பாயமாய்த்தப்புதல்.
E-lūd'i-ble, *a.* தவிர்க்கக்கூடிய, தப்பக் கூடிய.
E-lū'sion, *s.* தவிர்வு, கரவு, தந்திரோபா யம்.
E-lū'sive, *a.* தந்திரமுள்ள, எத்துள்ள, விலக்கும்படி தந்திரஞ்செய்கிற.

E-lū'so-ri-ness, *s.* எத்துந்தன்மை, தந்திரம், உபாயம்.

E-lū'so-ry, *a.* எத்தத்தக்க, தந்திரமுள்ள.

E-lūte, *v. a.* சுத்திசெய்தல், கழுவுதல்.

E-lū'tri-āte, *v. a.* சுத்தமாக்குதல், மாசகற்றல், தெளிவித்தல்.

E-lu-tri-ā'tion, *s.* தெளிவிப்பு, அடையவைத்துத்தெளிவிக்கை, கழுவுகை, சுத்தியாக்குகை.

E-lys'ian, *a.* நந்தாவனத்துக்கடுத்த, ஆனந்தமான, பேரின்பமுள்ள.

E-lys'ium, *s.* நந்தனவனம், பதவி, யோக்கியஸ்தலம், துறக்கம்.

E-mac'er-āte, *v. a.* மெலிவாக்குதல்.

E-mac-er-ā'tion, *s.* மெலிவாக்குகை.

E-mā'ciāte, *v. a.* காய்ச்சுதல், உலர்த்தல், நோய்க்கச்செய்தல், வசக்கேடாக்கல், வாட்டுதல்.

E-mā'ciāte, *a.* மெலிந்த, தேய்ந்த, நோய்த்த.

E-mā'ciā-ted, *a.* கரைந்த, மெலிவுள்ள, சவங்கலான, நோதலையான, மெலிந்த, நோய்த்த.
 to be emaciated, மெலிதல், உலருதல், காய்தல், கெடுதல், சவங்குதல், வசக்கெடுதல்.

E-ma-ci-ā'tion, *s.* மெலிவு, வசக்கேடு, காய்வு, கேவலம், சவக்கம், தளர்வு.

E-mac'u-lāte, *v. a.* அழுக்ககற்றுதல்.

E-mac-u-lā'tion, *s.* அழுக்ககற்றுகை, மாசுநீக்குகை.

Em'a-nāte, *v. n.* சுரத்தல்; ஊறுதல், பாய்தல், பிறத்தல், தோன்றுதல்.

Em-a-nā'tion, *s.* தோற்றம், பாய்கை, புறப்படுகை.

Em'a-na-tive, *a.* புறப்படுகிற, பாய்கிற, தோன்றுகிற.

E-man'ci-pāte, *v. a.* விடுதலையாக்குதல், இஷ்டம்பண்ணுதல், பந்தநீக்குதல்.

E-man-ci-pā'tion, *s.* விடுதலை, சிறைத்தனத்தினின்றுநீக்குகை.

E-man'ci-pā-tor, *s.* விடுதலையாக்குவோன், பந்தங்களினீக்குவோன், பந்தமறுப்போன், சிறைமீட்போன்.

E-mas'cu-lāte, *v. a.* நலமெடுத்தல், விதைவாங்குதல், ஆண்மைகெடுத்தல், அண்ணகனாக்குதல்.

E-mas'cu-late, *a.* நலமெடுக்கப்பட்ட, நலமழிந்த.

E-mas-cu-lā'tion, *s.* நலமெடுப்பு, விதை வாங்குகை, வீரமழித்தல், சத்துவாங்குகை.

Em-bälm, *v. a.* சுகந்தமிடுதல், தைலமூட்டுதல், மாமிசபாலனஞ்செய்தல்.

Em-bälm'er, *s.* தைலமிடுவோன், சுகந்தமூட்டுவோன், மாமிசபாதுகாரகபுடகன்.

Em-bank', *v. a.* வரம்புகட்டுதல், கரை கட்டுதல், அணைகட்டுதல்.

Em-bank'ment, *s.* வரம்பு, கரை, அணை, செய்கரை, ஒட்டுத்திண்ணை.
of a fort, கொத்தளம்.

Em-bär, *v. a.* அடைத்தல்.

Em-bär-cā'tion, *s.* மரக்கலத்திலேறிப் போதல், துறைவிட்டுப்போதல்.

Em-bär'go, *s.* மரக்கலமறியல்.

Em-bär'go, *v. a.* கப்பல்முதலியவற்றைமறித்தல், மரக்கலம்மறித்தல்.

Em-bärk, *v. a.* மரக்கலத்தேற்றுதல்.

Em-bärk, *v. n.* மரக்கலமேறுதல்.
to engage in or enter into a business, தலைக்கொளல், முயலுதல், உட்படுதல், அடிப்போடுதல்.

Em-bärk-ā'tion, *s.* மரக்கலமேறிப்போகுகை, கப்பலேற்று.

Em-bar'rass, *v. a.* சிக்குப்படுத்துதல், குழப்புதல், கலக்குதல், கலக்கடிபண்ணுதல், கோழைப்படுத்தல்.
to be embarassed, கலங்குதல், சேருதல், கோழைப்படுதல்.

Em-bar'rass-ment, *s.* குழப்பம், சிக்கு, கலக்கம், கலக்கடி, விக்கினம்.
in speaking, சபைக்கோழை.

Em-bāse, *v. a.* கெடுத்தல், சீர்குலைத்தல், தாழ்ச்சியாக்குதல், கீழ்மைப்படுத்தல்.

Em-bas'sa-dor, *s.* தூதன், தூது, பிரதியாள், காரியபாகன்.

Em-bas'sa-dress, *s.* தூதி, காரியகாறி.

Em'bas-sage, Em'bas-sy, *s.* காரிய கர்த்தவ்வியம்.
as ministers, காரியகர்த்தர்.

Em-bat'tle, *v. a.* அணிவகுத்தல், படைவகுத்தல்.

Em-bed', *v. a.* பதித்தல், அழுத்தல், பரவுதல், படுத்தல்.

Em-bel'lish, *v. a.* அலங்கரித்தல், அணிதல், வன்னித்தல், சிறப்பித்தல், கோலம்பண்ணுதல், சிங்காரித்தல்.

Em-bel'lish-er, *s.* அலங்கரிப்போன், வன்னிப்போன், சிங்காரிப்போன், சிறப்பிப்போன், கோலஞ்செய்வோன்.

Em-bel'lish-ing, *a.* சிங்காரிக்கிற, சிறப்பிக்கிற, அலங்கரிக்கிற, சோடிக்கிற.

Fab'u-lous-ness, *s.* பொய், கட்டு, கற்பிதம்.
Fāce, *s.* முகம், முன்புறம், வதனம், ஆனனம்.
averted, பராமுகம்.
downcast, அதோமுகம், கீழ்முகம்.
happy, சௌந்தரியம், செந்தளிப்பு.
turned up, உன்முகம், உத்துவாகிதம்.
distortion of, முகச்சுளுக்கம், முகத்திரைவு.
expression of, முகக்குறி.
face to face, முகாமுகமாய், எதிரெதிராய், அபிமுகமாய்.
as aspect, பார்வை, சாயல்.
as surface, மேற்பரப்பு, மேற்புறம்.
as presence, முகதா, சமுகம், சன்னிதி, சன்னிதானம்.
as boldness, திடாரிக்கம், தைரியம், கோடாமுகம்.
Fāce, *v. a.* எதிர்த்தல், தடுத்தல், முட்டுதல், முரணுதல்.
to face one down, உறுத்திப்பிடித்தல், அழுத்திப்பிடித்தல், பலாற்காரமாய்ப்பிடித்தல்.
Fāce, *v. n.* எதிர்தல், நேர்தல், முன்காட்டிநிற்றல், அபிமுகமாதல்.

Fāce'less, *a.* முகமில்லாத.

Fa-cē'tious, *a.* களிப்பான, பகிடியான.

Fa-cē'tious-ly, *adv.* நளினமாய், பகிடியாய்.

Fa-cē'tious-ness, *s.* சித்திரப்பேச்சு, நளினப்பேச்சு, விநோதம்.

Fac'ile, *a.* இலகுவான, இலேசான, எளிதான, சுலபமான.

Fac'ile-ly, *adv.* இலேசாய், எளிதாய், சுலபமாய்.

Fac'ile-ness, *s.* எடுபடக்கூடியதன்மை, இலகு, எளிது, சுலபம்.

Fa-cil'i-tāte, *v. a.* இலகுவாக்குதல், இலேசுப்படுத்தல், உதவுதல்.

Fa-cil-i-tā'tion, *s.* இலகுவாக்குகை.

Fa-cil'i-ties, *s. (pl.)* உபகரணங்கள், துணைக்கருவிகள், உபயோகங்கள், ஏதுக்கள்.

Fa-cil'i-ty, *s.* இலகு, ஒத்தாசை, உதவி, துணை.

Fā'cing, *s.* முகப்புத்துண்டு, முகப்பு.

Fac-sim'i-le, *s.* பிரதி, சவாது, நிகர், பிரதிரூபம்.

Fact, *s.* மெய்ம்மை, உண்மை, உள்ளது, நடந்தகாரியம், செய்தி, உள்ளகாரியம், வர்த்தமானம்.

Fac'tion, *s.* கலகம், கலகக்காரர், கட்சி, பக்கம், கட்சம், பந்துக்கட்டு.

Fac'tion-a-ry, Fac'tion-ist, *s.* கட்சியான், பட்சவாதி, கலகக்காரன்.

Fac'tious, *a.* கலகமுள்ள, பட்சபாதமுள்ள, ஒருதிறத்திலுள்ள.
party, அடங்காப்பற்றூர், அரசாட்சிக்கமையாதார்.

Fac'tious-ly, *adv.* கலகமாய், குழப்பமாய்.

Fac'tious-ness, *s.* கலகம், குழப்பம், எதிரிடை.

Fac-ti'tious, *a.* கிருத்தியமான, ஆபாசமான, செயற்கையான.

Fac'tor, *s.* வியாபாரத்துணைக்காரியஸ்தன், பிரதிகாரியஸ்தன்.
in arithmetic, பெருக்கநிலையெண்.

Fac'tor-age, *s.* வியாபாரகாரியஸ்தன்சம்பளம், தரவு, கழிவு.

Fac'tor-ship, *s.* பிரதிவியாபாரத்தொழில், பிரதிவியாபாரச்சாலை.

Fac'to-ry, *s.* பிரதிவியாபாரதொழில்நடப்பிக்குஞ்சாலை, பலசாமான்விற்குஞ்சாலை, பலவஸ்துக்களுண்டாக்குஞ்சாலை.
Fac-tō'tum, *s.* சமஸ்தவியாபாரவிற்பன்னன், பலகாரியஸ்தன்.
Fac'ture, *s.* கைவினை.
Fac'ul-ty, *s.* கருவி, கரணம், தத்துவம்.
intellectual faculties, அந்தர்க்கரணம், அந்தரிந்திரியம், உட்கருவிகள், புலன்கள்.
as controllers, கழகாதிக்கர், கல்லூரியின்காரியஸ்தர்.
as ability, சாமர்த்தியம்.
Fa-cund'i-ty, *s.* வாசாலம், சதுர்ப்பாடு.
Fāde, *v. n.* நிறங்குறைதல், நிறமங்குதல், நிறங்கெடுதல், வெதும்புதல்.
in state of body, &c., சோர்தல், சோம்புதல், வதங்கல்.
to wither, வாடுதல், காய்தல்.
Fāde'less, *a.* வாடாமையான, வாடாத, வதங்காத.
Fadge, *v. n.* ஒத்திசைதல், சரிப்படுதல், ஒவ்வுதல், வாய்த்தல்.
Fād'ing-ness, *s.* சிதைவு, அழிவு, நைவு.
Fād'y, *a.* நிறங்குறைந்த, வாட்டமுள்ள, நிறங்கெட்ட, மங்கின, தேய்கிற.
Fae'cēs, *s.* (*pl.*) மலம், கசாளம், மண்டி, புரீடம்.
Fag, *s.* அடிமை, வேலைகாரன்.
Fag, *v. n.* தொய்தல், இளைத்தல், தளர்தல்.
to fag out, தளர்தல், இளைத்தல்.
Fag'-end', *s.* உச்சிட்டம், கச்சின்கழிவு, கயிற்றின்முறுக்காததலைப்பு.
Fag'ot, *s.* அலம்பல், விறகு, சுல்லிக்கட்டு, சுப்பி.
Fag'ot, *v. a.* சுல்லிகட்டுதல்.
Fāil, *s.* தவறு, வழு.
Fāil, *v. n.* பிசகுதல், பிழைத்தல், பொய்த்தல், வழுவுதல், தளர்தல், தோற்றுப்போதல், திறம்பல், குன்றல்.
before one, பின்னிடுதல், பின்னிடைதல், தோற்றுப்போதல்.
of accomplishment, கலைதல், சித்தியாகாதிருத்தல்.
as a business, வழுவுதல், நட்டப்படுதல்.

as crops, rain, &c., ஒறுத்தல், தாழ்ச்சியடைதல், விழுதல், குன்றுதல்.
in courage, நிலைகுலைதல், வீரங்குலைதல், பயப்படுதல்.
as the limbs, சோர்தல், தளர்தல், அயர்தல்.
as events foretold, குறிதப்புதல், குறிதவறுதல்.
as the eyes by looking, கண்பூத்தல்; கண்புகைதல், கண்மழுங்கல்.

Fāil'ing, *s.* தவறு, தப்பு, தாழ்ச்சி, அயர்வு.

Fāil'ure, *s.* தப்பு, தவறு, பிசகு, வழு, இழுக்கு, குறை, தாழ்ச்சி.
in an object, காரியத்தவறு, காரியப்பிழை.
in rectitude, &c., உண்மைத்தவறு, பொய்ப்படுகை.
of crops or rain, ஒறுப்பு, தாழ்ச்சி, குறைவு.
of strength, faculties, சோர்வு, தளர்ச்சி, ஒடுக்கம்.

Fāin, *a.* அக்களிப்பான, மகிழ்ச்சியான, சந்தோஷமான.

Fāin, *adv.* சந்தோஷமாய், இன்பமாய், பிரியமாய்.

Fāint, *v. n.* சோருதல், தொய்தல், களைத்தல், சவுங்குதல், தியங்குதல்.
away, துஞ்சுதல், சோர்தல், சவுங்குதல், மூர்ச்சித்தல், களைத்துப்போதல்.
as vanish, சிதைந்துபோதல்.

Fāint, *a.* சோர்வான, ஆயாசமான, மெலிவான, தளர்ச்சியான, இளைப்பான, தியக்கமான, களைப்பான.
color, இளநிறம், மங்கல்நிறம்.
hearted, மனந்தொய்ந்த, வீரக்குலைவான, இளநெஞ்சுள்ள, அதைரியமான.
applied to hands, சலித்த, அயர்ந்த, சோர்ந்த.

Fāint'ing, *s.* சோகம், துயரடி, தியக்கம்.

Fāint'ish, *a.* சோர்வுள்ள, மெலிந்த, மூர்ச்சித்த, வாட்டரவான.

Fāint'ish-ness, *s.* தளர்ச்சி, சோகம், சோர்வு, மெலிவு, வாட்டரவு.

Fāint'ly, *adv.* சோர்வாய், வாட்டரவாய், ஆயாசமாய்.

Fāint'ness, *s.* ஆயாசம், தவக்கம், சோர்வு, வீரக்குலைவு, மெலிவு.

Fāir, s. சௌந்தரம், சுந்தரம், அழகு.
stated market, இடையங்காடி, இடைக்கடை, இடைச்சந்தை, சந்தை.
Fāir, a. அழகுள்ள, இலட்சணமான, சிறப்புள்ள, சீரான, நேற்றியான, சீத்துவமான, திருத்தமான, தெளிவான.
bargain, சரியானஉடன்பிடிக்கை, நியாயமுள்ளவுடன்பாடு.
complexion, சிறந்தமுகம், இலட்சணமுகம், வாகுள்ளமுகம்.
dealing, திட்டம், நடுநியாயம்.
dealer, நேராளி, நிதார்த்தன், நிதானி.
question, நல்லகேள்வி, நியாயமான கேள்வி.
weather, வெளுப்பானகாலம், வெளிவானம்.
wind, நல்லகாற்று, சுககாற்று, வளக்காற்று.
words, இன்சொற்கள், மாதுரியவசனங்கள், நயச்சொல்.
Fāir, Fāir'ly, adv. } வெளியாய், தெளிவாய், மனசார, நியாயமாய், சந்தோஷமாய், தீர்ப்பாய், சிறப்பாய், அழகாய்.
Fāir'ness, s. பவித்திரம், சுத்தம், சிறப்பு, சௌந்தரியம், கபடமின்மை, தெளிவு, நியாயம், நேர்மை.
Fāir'-spōk'en, a. மங்கலமாய்மொழிந்த, நாகரீகமானபேச்சுள்ள, உபசாரப்பேச்சுள்ள.
Fāir'y, s. பேய், பிச்சி.
an enchantress, மயக்குகிறவள், மோகனி.
Fāir'y, s. மோகனவேஷமுள்ள.
land, திவ்வியலோகம், இந்திரபதம்.
Fāith, s. விசுவாசம், நம்பிக்கை, தெய்வபத்தி.
as persuasion, பிடி, கோட்பாடு.
as system of religion, சமயம், மதம்.
Fāith'ful, a. நம்பிக்கையுள்ள, உண்மையான, நிசமான, நேரான, நிருவாகமுள்ள.
wife, பதிவிரதை, பத்தினி, கற்புடையாள்.
Fāith'ful-ly, adv. நிசமாய், உண்மையாய், நம்பிக்கையாய்.
Fāith'ful-ness, s. நிசம், நேர்மை, பத்தி, உண்மை, நிதானம், நிருவாகம்.

to one's word, நிதார்த்தமுடைமை.

Fāith'less, *a.* உண்மையற்ற, விசுவாசமில்லாத, நேர்மையற்ற.

Fāith'less-ness, *s.* அவிசுவாசம், உண்மைத்தாழ்ச்சி, நம்பிக்கைத்துரோகம், இரண்டகம்.

Fā'ker, Fä-quïr', *s.* } மகம்மதுமுனி, மகம்மது சந்நியாசி, பக்கீரி.

Fal'cāte, Fal'cā-ted, *a.* } வளைந்த, கூனிரும்பு போன்ற, பிறைபோல் வளைந்த, பருந்துமூக்குப்போன்ற.

Fal'chion, *s.* குற்றுவாள், குறும்பட்டயம், கொடுவாள்.

Fal'con, *s.* இராசாளி, வல்லூறு.
a sort of canon, ஓர்விதப்பீரங்கி.

Fal'con-er, *s.* பருந்துவளர்ப்போன்.

Fal'con-ry, *s.* வேட்டைக்குப்பருந்துவளர்க்குகை, தீவகப்பட்சியைப்பயிற்றுகை.

Fall, *s.* வீழ்வு, இறக்கம், தாழ்வு.
of water, அருவி.
as a cataract, அருவிவீழ்ச்சி.
as autumn, இலையுதிர்காலம்.
as declivity, slope of a hill, சாரல், இறக்கம்.
as degradation or loss of greatness or office, இழிவுபடல், கீர்த்திமங்கல், கணிசக்குறை.
as distance which any thing falls, வீழ்வின்தூரம்.
as outlet of a river into the ocean, கழிமுகம், கழிவாய்.
as sinking of tone, cadence, இறங்கல், அபரோகணம், சுதியிறக்குகை.

Fall, *v. n.* விழுதல்.
backwards, மல்லாருதல், மல்லாக்காய்விழுதல்.
back, as give way, பின்னிடுதல், பின்வாங்குதல்.
as the countenance, வாடுதல், குருவுதல்.
as a river into the sea, கழிதல், ஒழுகல், பாய்தல்.
as rain, சொரிதல், பெய்தல், வருஷித்தல்.
as apostatize, மதபேதகஞ்செய்தல், மதமறுத்தல், பதிதனுதல்.

as die, மாய்தல், அழிதல், இறத்தல், சாதல்.
as the tide, அமர்தல்.
to be degraded, or sink into disgrace, சின்னத்தனப்படுதல்.
to decrease in value or weight, தணிதல், குறைதல், விலைவிழுதல்.
to happen, to befall, சம்பவித்தல், ஆதல்.
to light on, to come by chance, சடுதியாய்விழுதல், எண்ணுப்பிரகாரம்வருதல்.
to come, to arrive, சேர்தல், சார்தல், அடைதல்.
to become the property of, உரித்தாதல், உடைமையாதல்.
to languish, become feeble, தளர்தல், சோர்தல், மெலிதல்.
as perish, be lost, ruined, மாண்டுபோதல், அழிவுண்ணல்.
as fail of fulfilling a promise, தவறுதல், திறம்புதல்.
as sink, come to the ground, தாழ்தல்.
as sail towards the mouth of a river, கழிவாய்க்கெதிரேறல்.
as enter, உட்படல், புகுதல்.
as discover or come near land, கரைகாணல், கரைசார்தல்.
as perish, மாண்டுபோதல்.
as forsake, abandon, ஒழித்தல், தவிர்தல், விட்டுவிடுதல்.
as dew, rain, &c., துளித்தல், பனித்தல், பெய்தல்.
as expense, responsibility, பொறுத்தல், சுமர்தல்.
as apply one's self to, கூர்மையாய்ச்செய்யத்தொடங்குதல்.
as be rekoned with, தொகைப்படுதல், சேர்க்கப்படுதல்.
away, as become lean, வசக்கெட்டுப்போதல், விழுந்துபோதல்..
away as a rebel, கலகம்பண்ணுதல், பக்கம்மாறல்.
down, as prostrate one's self, சாஷ்டாங்கமாய்விழுதல், குப்புறவிழுதல்.
flat, குப்புறவிழுதல்.

foul of or make an assault, மோதுத ல், தாக்குதல், மொத்துதல்.
from, as revolt, எதிர்கட்சிக்குப்போ தல்.
headlong, குத்தெனவிழுதல், தலைகீ ழாய்விழுதல்.
in, as concur, agree with, உடம்படு தல், இணங்குதல்.
in with, as meet a ship, நேர்தல், ச ந்தித்தல்.
off, as withdraw, separate from, பிரி தல், விலகுதல், நீங்குதல்.
out, as quarrel, சண்டைபிடித்தல், க ம்பலைபிடித்தல்.
through, as an affair, வாயாமற்போ தல், விழலாதல்.
on, as begin suddenly and eagerly, ஆவலாய்த்தொடங்கல், ஆவென்றுவி ழுதல்.
short, as be deficient, குறைதல், சி றுகுதல், குறுகுதல்.
to, as begin hastily and eagerly, வா ஞ்சையாய்த்தொடங்குதல், கெலி கொள்ளுதல்.
under, as be subjected, கீழ்ப்படல், அடிப்படல்.

Fal-lā'cious, *a.* பொய்க்கோலமுள்ள, கள்ளநியாயமான, பொய்யான, உறு தியற்ற, நம்பிக்கைத்துரோகமான.

Fal-lā'cious-ly, *adv.* மாசாலமாய், சூதா ய், பொய்யாய், கள்ளநியாயமாய்.

Fal-lā'cious-ness, *s.* பொய்மை, பொரு ந்தாமை.

Fal'la-cy, *s.* பொய், பிழை, கள்ளம், போலி.
in logic, ஆபாசம்.

Fal-li-bil'i-ty, Fal'li-ble-ness, *s.* தவறக்கூடியதன் மை, பொய்படக் கூடியது, உறுதியின்மை, பொய்மை.

Fal'li-ble, *a.* தவறத்தக்க, பொய்க்கக்கூ டிய, தப்புக்கேதுவான.

Fal'li-bly, *adv.* தவருய், உறுதியினறி.

Fall'ing, *s.* தாழ்வு, சரிவு, படிவு, வீழ் வு, குழி.
sickness, காக்காய்வலி, நடுக்கம்.
star, தூமகேது, விண்வீழ்கொள்ளி, உற்கை.

in, as the belly, எக்கியவயிறு, பறிவா ன்வயிறு.

Fal'lōw, *s.* தரிசு, சாட்டியம், கரம்பு, வி தையாநிலம்.

Fal'lōw, *v. a.* உழுதல்.

Fal'lōw, *a.* விளையாத, கரம்பான.
as pale red, வெண்செவப்பான.
land, சாட்டித்தறை, தரிசு; செய்கை யற்றநிலம், கரம்பு, கரம்பை, சாட்டு வலம், பாழ்நிலம்.
deer, செந்நிறமான்.

Fal'lōw-ness, *s.* தரவை, கனிகொடா மை, மலடு, விளையாதபூமி.

False, *a.* பொய்யான, புரளியான, உ ண்மைக்குத்தப்பான, நெறிதவறின.
accusation, பொய்யானகுற்றச்சாட் டு,பொய்ச்சாட்டு, அபவாதம், கோள்.
arm, போலிக்கை, பொய்க்கை.
assertion, பொய்வார்த்தை, பொய்ச் சாற்று, பொய்மொழி.
bond, கள்ளவுறுதி.
bud, பொய்க்கண்ணி, பொய்க்கிளை.
drawer, கள்ளறை.
evidence or witness, பொய்ச்சாட்சி, கள்ளச்சாட்சி.
excuse, வீண்போக்கு, கள்ளச்சாட்டு.
key, கள்ளத்திறவுகோல், கள்ளத்திற ப்பு.
measure, கள்ளக்கொத்து, கள்ளஅ ளவு.
oath, பொய்ச்சத்தியம், பொய்யா ணை, கள்ளச்சத்தியம்.
report, அபாண்டம், அபவாதம், பொ ய்க்கதை.
scale, கள்ளத்தராசு, கள்ளநிறைகோல்
signature, கள்ளக்கையெழுத்து, கள் ளக்கையொப்பம்.
story, பொய்க்கதை.
step, பொய்யெடுப்பு, கள்ளவெடுப்பு.
stamp, கள்ளமுத்திரை.
tears, கள்ளஅழுகை, மாசாலக்கண் ணீர், கள்ளக்கண்ணீர்.
teeth, பொய்ப்பல்.
weights, கள்ளப்படிக்கல், கள்ளநி றை.

False'-heart'ed, *a.* கபடமனமுள்ள, க ள்ளமனமுள்ள.

False'hood, *s.* பொய், கபடம், அபத்தம், அசத்தியம், கள்ளம், தப்பறை, புரளி, இரண்டகம்.
False'ly, *adv.* பொய்யாய், புரளியாய், தப்பறையாய், தப்பிதமாய்.
False'ness, *s.* பொய்மை, இரண்டகம், வஞ்சகம், கபடம், அணுப்பு.
Fal-set'to, *s.* பொய்க்குரல்.
Fals'i-fī-a-ble, *a.* பொய்படக்கூடிய, பொய்யென்றுரூபிக்கத்தக்க.
Fals-i-fi-cā'tion, *s.* பொய்ப்பு, பொய்யென்றுரூபித்தல், உண்மைத்தவறு, கள்ளம், நாப்புரட்டு.
as confutation, ஆட்சேபம்.
Fals'i-fi-cā-tor, *s.* பொய்யன், அசத்தியவசனன், பிசுனன்.
Fals'i-fī-er, *s.* பொய்யன், போலிக்காரன், கள்ளநாணயமடிப்போன், பொய்யென்றுரூபிப்போன்.
Fals'i-fy, *v.* பொய்த்தல், பொய்க்கப்பண்ணுதல், உண்மையையழித்தல், நாப்புரளுதல்.
to counterfeit, கள்ளநாணயமுண்டாக்கல், கள்ளவுறுதியெழுதுதல்.
to violate one's words, புரட்டுதல், வாக்குப்புரளுதல்.
Fals'i-ty, *s.* பொய், பொய்மை, பொய்ப்பு.
Fal'ter, *v. n.* தெற்றிப்பேசுதல், கொன்னையாய்ப்பேசுதல், நாவுழலையாடுதல், திக்கித்திக்கிப்பேசல்.
through joy, தழுதழுத்தல், நாக்குளிறுதல்.
as the voice in dying, கேருதல், விக்கிவிக்கிபயேசுதல், நாக்குத்தட்டுதல்.
to fail, தடதடத்தல், தடுமாறுதல்.
the tongue falters, திக்குதல்.
Fal'ter-ing, *s.* தடதடப்பு, தழுதழுப்பு, நாவுழலை, நடுக்கம், தடக்கு.
Fal'ter-ing-ly, *adv.* நடுக்கமாய், தடதடப்பாய், தடக்கி.
as the voice, கொன்னையாய், விக்கலாய்.
Fāme, *s.* கீர்த்தி, பெயர், புகழ், புகழ்ச்சி, இசை.
good, நற்கீர்த்தி.
ill, துற்கீர்த்தி, அவகீர்த்தி.

as news, சமாசாரம், சங்கதி, நற்செய்தி.

Fām'ed, *a.* பெயர்போன, கீர்த்தியுள்ள, புகழ்தங்கிய.

Fāme'less, *a.* கீர்த்தியில்லாத, புகழில்லாத.

Fa-mil'iar, *s.* தோழன், உற்றசிநேகிதன், பாங்கன், முகப்பழக்கமானவன்.
a demon, கூளி, ஏவற்பேய், பிசாசு, குட்டிச்சாத்தி.
of the inquisition, பாப்புமதவைராக்கியசங்கத்துச்சேவகன்.

Fa-mil'iar, *a.* பழக்கமான, ஊடாட்டமான, நடமாட்டமுள்ள, பரிமாற்றமான, வாடிக்கைப்பட்ட, சாதாரணமான.
as easy, இலகுவான, முட்டற்ற.
illustration, தெளிந்தபேச்சு.
in a bad sense, கொள்கையான, கொண்டுகூட்டான.
spirit, கூளி, ஏவற்பேய், பிதிர்தரிசி, பிதிர்வித்தைக்காரகுட்டிச்சாத்தி.
to be familiar, ஊடாடுதல், சாவகாசம்பண்ணுதல், சாதாரணமாதல், பரிமாறுதல், நடமாடுதல், பழகுதல்.

Fa-mil-iar'i-ty, *s.* அன்னியோன்னியம், இணக்கம், சகவாசம், அறிமுகம், கொண்டாட்டம், சங்காத்தம், கொள்கை.
with, ஊடாட்டம், நடமாட்டம், பரிமாற்றம், பழக்கம், பரிசனை, பயிற்சி, தோழமை.
of relationship, உரிமை, உறவு.

Fa-mil'iar-īze, *v. a.* பழக்குதல், பயிற்றுதல், ஊடாட்டம்பண்ணுதல்.

Fa-mil'iar-ly, *adv.* பழக்கமாய், ஊடாட்டமாய், நடமாட்டமாய், நடபடியாய்; வாடிக்கையாய்.

Fam'i-ly, *s.* சமுசாரர், குடும்பத்தார்.
bond, சமுசாரபந்தம், இனக்கட்டு.
title, பரவணிப்பட்டம்.
disease, பரவணிவியாதி.
destruction of, குடிநாசம், குடிகேடு, குடியழிவு.
economy, குடித்தனவொழுக்கம், குடிவாழ்க்கை, இல்வாழ்வு, இல்லொழுக்கம், இல்லறம், மனைமாட்சி.

increase, சந்தானவிருத்தி, வமிசவி ருத்தி.
line, கிளை, கிளைவழி, வமிசம், குடும் பம், சந்தானம்.
lineage, குலம், கோத்திரம்.
government, பரிபாலனம்.
management, குடியாட்டம், கிரகஸ் தம், இல்லறம்.
name, பரவணிப்பேர், குடிப்பேர்.
state, சமுசாரமார்க்கம், இல்வாழ்வு, இல்லறம்.
in a family state, சூலுடைமை, பீளு டைமை.
as class, species, இனம், குடும்பம்.
Fam'ine, *s.* பஞ்சம், வறப்பு, கருப்பு.
Fam'ish, *v.* பட்டினிகிடத்தல், பட்டி னியினுல்வருத்துதல், பசியினுல்வரு ந்துதல்.
Fam'ish-ment, *s.* பட்டினி, பசி.
Fā'mous, *a.* கீர்த்தியான, கீர்த்திபெற்ற, புகழான, விதந்த, விதப்பான, விசித் திரமான.
Fā'mous-ly, *adv.* கீர்த்தியாய், புகழாய், பெயராய்.
Fā'mous-ness, *s.* கீர்த்தியுடைமை, புக ழுடைமை.
Fan, *s.* விசிறி, சிற்றாலவட்டம்.
for winnowing, சுளகு, முறம், சூர்ப் பம்.
for sifting, சல்லடை, அரிபெட்டி, அரிகூடை, தூற்றுங்கூடை.
of peacock's feathers, மயிற்றோகை விசிறி, பீலி.
Fan, *v. a.* விசுக்குதல், வீசுதல், விசிறு தல், தூற்றுதல், கொழித்தல், சலித்த ல், தெரித்தல், புடைத்தல்.
Fa-nat'ic, *s.* மதாபிமானி, சமயோன்ம த்தன், மதவைராக்கியன்.
Fa-nat'ic-al, *a.* மதாபிமானமுள்ள, மத மருள்பிடித்த, சமயோன்மத்தமுள்ள, மதவைரமுள்ள.
Fa-nat'ic-al-ly, *adv.* மருளாய், மதவைர மாய்.
Fa-nat'ic-al-ness, } *s.* மதாபிமானம், மதபைத்தியம், மதோன்மத்தம்.
Fa-nat'i-cism, }
Fa-nat'i-cīze, *v. a.* மதாபிமானமேற்றுத ல், மதமருள்பிடிக்கச்செய்தல்.

Fan'ci-ful, *a.* கோரணியான, நூதனமுள்ள, வீணெண்ணமுள்ள, மனோரதியமான, மனோகற்பமான.
description, மனோகற்பனம், பாவனுருபம்.
tricks, சேட்டை, கோரணி.
to be fanciful, கோரணிவிடுதல், சேட்டைபண்ணுதல், குசால்பண்ணுதல்.

Fan'ci-ful-ly, *adv.* சேட்டையாய், மனோரதியமாய், குசாலாய்.

Fan'ci-ful-ness, *s.* வீணெண்ணம், மனோகற்பம், மனோபாவிகம்.

Fan'cy, *s.* எண்ணம், மனோகற்பனை, மனோராச்சியம்.
as taste, விருப்பம், மனோகிதம்.

Fan'cy, *v. a.* எண்ணுதல், சங்கற்பித்தல், நினைத்தல், பாவித்தல், தோற்றுவித்தல், பாணித்தல், விரும்பல்.

Fan'cy-pāint'er, *s.* மனோகற்பசித்திரகாரன்.

Fan'cy-work, *s.* மனோசித்திரம், சித்திரவேலை.
in cloth, சித்திரப்படாம், சித்திரத்தையலாடை, பூச்சேலை.

Fāne, *s.* தேவாலயம், வணக்கஸ்தலம், விண்ணப்பசாலை, கோயில்.

Fang, *s.* வக்கிரதந்தம், பன்றிமுதலியவற்றின்கொம்பு.
of a serpent, கோரப்பல், நச்சுப்பல்.
as talons, நகம்.

Fang, *v. a.* இறுஞ்சுதல், பாய்தல், பாய்ச்சுதல், கிளித்தல், பீறுதல், ஈய்த்தல்.

Fang'ed, *a.* வக்கிரதந்தமுள்ள, உகிருள்ள.

Fan'gled, *a.* (*see* New-fangled.) நவமாயுண்டாக்கப்பட்ட, வேடிக்கையுள்ள.

Fang'less, *a.* வக்கிரதந்தமில்லாத, நகமில்லாத.

Fan'tasm, *s.* (*see* Phantasm.) மனத்தோற்றம், காட்சி.

Fan-tas'tic, Fan-tas'tic-al, *a.* வீணெண்ணமுள்ள, வீண்தோற்றமான, இல்பொருட்காட்சியான.

Fan-tas'tic-al-ly, *adv.* நினைவின்படி, எழுந்தபடி, வீணெண்ணமாய்.

Fan-tas'tic-al-ness, *s.* வீணெண்ணம், எழுந்தமானம், சேட்டை.

Fan'ta-sy, *s.* (*see* Fancy.) வீணெண்ணம்.

Fan'tom, *s.* (*see* Phantom.) தோற்றம், காட்சி.

Fär, *a.* தூரமான, எட்டாத, பிரிவினையுள்ள, அதிகமான.
meaning, தூரக்கருத்து.
fetched idea, எட்டாக்கருத்து, அருங்கருத்து, வலிந்துகோடற்பொருள்.
sighted, தூரதிட்டியுள்ள.
otherwise, தீரவிகற்பமான, விபட்சமான.
to be far, தூரமாதல்.

Fär, *adv.* தூரமாய்.

Färce, *s.* நாடகம், கோமாளக்கூத்து, பரிகாசக்கூத்து, பட்டாங்கு.

Fär'ci-cal, *a.* பட்டாங்குக்கடுத்த.

Fär'ci-cal-ly, *adv.* சேட்டையாய், கோமாளமாய்.

Färe, *s.* காக்கூலி, பயணக்கூலி, அனுதரம், வழியுணவு, ஆற்றுணு, உணவு, பிரயாணபோசனம்.

Färe, *v. n.* போதல், செல்லுதல், உண்டாதல், சம்பவித்தல்.
to feed, உண்ணல், பொசித்தல்.
he fares well, நன்மையாய்வாழுகிறான்.

Färe-well', *s* உத்தாரசுபமொழி, வழிவிடல், அனுப்பு, வந்தனம்.
responding, சிந்தாத்திரை, பிரியாவிடை, பிரயாணமங்கலோபசாரம்.

Fa-rī'na, *s.* சுண்ணம், பூந்தாது, பூந்துள், பராகம்.

Far-i-nā'ceous, *a.* மாவுள்ள, பூந்தாதுள்ள, சுண்ணமுள்ள.

Färm, *s.* கமம், புலம், காணி, நிலம்.

Färm, *v. a.* குத்தகைகொடுத்தல், வாடைக்குவாங்குதல், பண்படுத்தல், பயிரிடுதல், வேளாண்மைசெய்தல்.

Färm'er, *s.* கமக்காரன், வேளாண்மைக்காரன், பயிர்செய்கிறவன், கிருஷிகன்.

Färm'ing, *s.* கமச்செய்கை, வேளாண்மைசெய்கை.

Fär'mōst, *a.* மிகத்தூரமான, மகாதூரமான, ஈறுன.

Fär'ness, *s.* தூரம், கடையாந்தரம், ஈறு.

Far-rā'go, *s.* கலப்புள்ளது, பலவகைக் கலப்பு.

Far'ri-er, *s.* இலாடங்கட்டுகிறவன், குதிரைவைத்தியன்.

Far'ri-er-y, *s.* குதிரைவைத்தியம்.

Far'rōw, *v. a.* பன்றிகுட்டியீனுதல்.

Far'rōw, *a.* மலடான.

Fär'ther, *a.* அதிதூரமான, அப்புறத்திலிருக்கிற.

Fär'ther, *adv.* அப்பால், அப்புறம், தள்ளி, மேலும், இன்னும்.

Fär'ther-mōre, *adv.* மேலும், அன்றியும், அல்லாமலும், இன்னும்.

Fär'thest, *a.* (*see* Furthest.) சுருந்த, அதிதூரமான.

Fär'thest, *adv.* (*see* Furthest.) சுருந்தமாய், அதிதூரமாய்.

Fär'thing, *s.* ஒருகாசு, ஒருபணத்திலாறிலொன்று.

Fas-cic'u-lā-ted, *a.* கிளையாய்வளருகிற, திரட்சியான, திரளான, கிளைக்கிற, கொத்தாயெழும்புகிற.

Fas'ci-nāte, *v. a.* மயக்குதல், மருட்டுதல், மோகிப்பித்தல், பரவசப்படுத்துதல், அவசப்படுத்தல்.

Fas-ci-nā'tion, *s.* மயக்கம், மருள், மருட்டு, பரவசப்படுத்துகை, வசப்படுத்துகை.

of the eyes, கண்மாயம், கண்மருள், கண்ணூறு.

Fas'cin-ous, *a.* மாயமுள்ள, மயக்குள்ள, மாந்திரியமுள்ள.

Fash'ion, *s.* உரு, கோலம், பழக்கம், வாடிக்கை, ஆசாரம், உலகநடை, பாங்கு, போக்கு, மாதிரி, நாகரீகம், சாங்கம், வடிவம்.

Fash'ion, *v. a.* உருவாக்குதல், உருப்படுத்துதல், பதப்படுத்துதல், பண்ணைமைத்தல், செப்பனிடுதல், கோலப்படுத்தல், வழக்கத்தின்படிசெய்தல்.

Fash'ion-a-ble, *a.* புது, புதிய, பாங்கான, நாகரீகமான.

manners, சதுர்ப்பாடு, நாகரீகம், சாதுரியம்.

man, நாகரீகன், சதுரன்.

Fash'ion-a-ble-ness, *s.* எடுப்பு, நாகரீகம், சதுர்ப்பாடு.

Fash'ion-a-bly, *adv.* எடுப்பாய், நாகரீகமாய்.

Fash'ion-er, *s.* உருப்படுத்துவோன், கோலஞ்செய்வோன்.

Fäst, *s.* உபவாசம், நோன்பு, விரதம்.
 as firmness, இறுக்கம், பிடிப்பு.
 rigid, அரியநோன்பு, இலங்கனம், பட்டினி.

Fäst, *v. n.* உபவாசித்தல், நோற்றல்.

Fäst, *a.* சுறுக்குள்ள, சீக்கிரமான.
 as firm, tight, இறுக்கமான, நிலையுள்ள, அசையாத.

Fast, *adv.* சுறுக்காய், சீக்கிரமாய், விரைவாய்.
 as firmly, இறுக்கமாய், அசலமாய்.

Fäst'-dāy, *s.* உபவாசநாள், நோன்புத்தினம், விரதநாள்.

Fäst'en, *v. a.* அடைத்தல், கட்டுதல், பந்தித்தல், பூட்டுதல், தொடுத்தல், தைத்தல்.
 with fetters, பூட்டுதல்.
 with nails, கடாவுதல், அறைதல், முடுக்குதல்.
 on, கொளுவிக்கொள்ளுதல், கவ்விக்கொள்ளுதல், பிடித்தல்.
 on laths, சலாகைகட்டுதல், சலாகைதைத்தல்.
 as in a crevice, இடுக்குதல்.

Fäs'ten-ed, *a.* இறுக்கின, பிடித்த, அடைபட்ட, சங்கடப்பட்ட.

Fäs'ten-er, *s.* இறுக்குவோன், பதிப்போன், அழுத்துவோன், கட்டுகிறவன்.

Fäs'ten-ing, *s.* கொளுவி, பூட்டு, தொடை, தளை.
 a tie, கட்டு, பந்தம்.

Fäst'er, *s.* பட்டினிகாரன், விரதம்பிடிக்கிறவன், விரதி.

Fäst'er, *a.* சுறுக்காய், விரைவாய்.

Fas-tid'i-ous, *a.* உவட்டான, வெறுப்பான, சுகிர்தம்பார்க்கிற.

Fas-tid'i-ous-ly, *adv.* அரோசிகமாய், குற்சிதமாய், வெறுப்பாய்.

Fas-tid'i-ous-ness, *s.* அரோசிகம், வெறுப்பு, நுட்பம்பார்க்கை.

Fäst'ing, *s.* நோன்பு, விரதம், உபவாசம்.

Fäst'ness, *s.* திரம், திடம், பத்திரம், உறுதி, இறுக்கம்.

as a fortress, துருக்கம், கோட்டை.
Fat, *s.* கொழுப்பு, நிணம், நெய், ஊனம்.
Fat, *v. a.* கொழுக்குதல், நிணத்தல், நெய்த்தல்.
Fat, *a.* கொழுத்த, நிணத்த, பீன.
person, ஸ்தூலன், பீமன், நிணத்தவன், கொழுத்தவன்.
Fā'tal, *a.* மரணத்துக்கேதுவான, விதிக்கப்பட்ட, அழிவுள்ள, சாவுக்கேதுவான, விலக்கக்கூடாத.
symptoms in disease, மரணக்குறி.
consequence, துற்பலன், விநாசம்.
Fā'tal-ism, *s.* விதிவாதபோதம்.
Fā'tal-ist, *s.* விதிவாதி.
Fa-tal'i-ty, *s.* அழிவுக்குரியதன்மை, சாவுக்குரிமை, விதிப்பு.
Fā'tal-ly, *adv.* விதிப்படி, சாவுக்குரித்தாய், அழிவுக்கேதுவாய்.
Fāte, *s.* விதி, இலிபி, நியதி, ல்பிதம்.
final event, கடைமுடிவு, மரணம்.
Fātes, *s.(pl.)* திசாபல், அதிதேவதைகள்.
Fāt'ed, *a.* நியமிக்கப்பட்ட, விதிக்கப்பட்ட.
Fä'ther, *s.* பிதா, அப்பன், தந்தை, கோத்திரப்பிதா.
fathers, முற்பிதாக்கள், பிதுர்சனம்.
of the church, சபையின்சேஷ்டர்கள், சபாநாயகர், மூப்பர்.
in-law, பெண்கொடுத்தமாமன், மணவாளன்பிதா.
as step father, முதற்தாரத்துப்பிள்ளைகளுக்கு மாதாவின் இரண்டாந்தாரத்து மணமகன்.
Fä'ther, *v. a.* புத்திரசுவிகாரம்பண்ணுதல், தனதாக்கிக்கொள்ளுதல், பிதாநாமஞ்சூட்டுதல், பிதாவாகஆரோபித்தல்.
Fä'ther-less, *a.* பிதாவிழந்த.
Fä'ther-ly, *a.* பிதாவடைவான, பாலனமுள்ள.
Fä'ther-ly, *adv.* பிதாவடைவாய்.
Fath'om, *s.* பாகம், வியாமம், புருடப்பிரமாணம், ஆழம், கூர்மை.
as depth, ஆழம், யூகம்.
Fath'om, *v. a.* அளத்தல், அளவிடுதல், ஆராய்தல், ஆழம்பார்த்தல், விழுதுவிட்டளத்தல், யூகித்தல்.
Fath'om-er, *s.* அளவிடுவோன், ஆழம்பார்ப்போன், யூகிப்போன்.

Fath′om-less, *a.* அளக்கப்படக்கூடாத, அகாதமான.
Fa-tid′ic-al, *a.* எதிர்காலஞானமுள்ள, தீர்க்கதரிசன.
Fat′i-ga-ble, *a.* களைப்புள்ள, சோர்புள்ள, தளரக்கூடிய.
Fat′i-gāte, *v. a.* களைக்கப்பண்ணுதல்.
Fa-tïgue′, *s.* களை, இளைப்பு, ஆயாசம், தொய்வு.
Fa-tïgue′, *v. a.* தொய்யப்பண்ணுதல், இளைக்கச்செய்தல், தளர்வித்தல்.
to be fatigued, களைத்தல், தொய்தல், இளைத்தல்.
Fat′ling, *s.* கொழுத்தகன்று, கொழுத்த செந்து.
Fat′ly, *adv.* கொழுப்பாய், புஷ்டியாய், தூலிதமாய்.
Fat′ness, *s.* கொழுப்பு, தெளிவு, ஊனம், நெய்ப்பு, புஷ்டி, ஸ்தூலம்.
Fat′ten, *v. a.* கொழுக்கவிடுதல், கொழுப்பித்தல், செழுப்பித்தல்.
Fat′ten, *v. n.* கொழுத்தல், தெளிதல், நிணத்தல், நெய்த்தல், செழித்தல், தூலித்தல்.
Fat′ten-er, *s.* கொழுப்பாக்குவோன்.
Fat′ti-ness, *s.* கொழுப்பு, நெய்ப்பு, சிளைப்பு.
Fat′ty, *a.* கொழுப்புள்ள, நெய்ப்புள்ள.
Fa-tū′i-ty, *s.* பிரமை, மயக்கம், மதிகேடு, பேதைமை.
Fat′u-ous, *a.* பேதைமையுள்ள, புத்தியற்ற.
Fau′cet, *s.* கோண், குழல்.
Faugh, *int.* இகழ்ச்சிக்குறிப்பு, சீயெனல்.
Fault, *s.* பிழை, குற்றம், தப்பிதம், குறை, தவறு, இழிவு, ஈனம்.
in words, சொற்சோர்வு, சொற்பிழை, சொற்குற்றம்.
to find fault, குற்றம்பிடித்தல்.
Fault′er, *s.* குற்றஞ்செய்வோன், தப்பிலி.
Fault′i-ly, *adv.* பிழையாய், குற்றமாய், தப்பிதமாய், குறையாய், தப்பிலித்தனமாய்.
Fault′i-ness, *s.* பிழை, தவறு, குற்றம், தப்பிலித்தனம்.

Fault'less, *a.* தவறுத, பிழையற்ற, குற்றமற்ற, தோஷமற்ற.
Fault'less-ness, *s.* தவறுமை, குற்றமின்மை, குறைவின்மை.
Fault'y, *a.* குற்றமுள்ள, தப்புள்ள, பாவமுள்ள, பிழையான.
 defective, குறையுள்ள.
 tooth, சூத்தைப்பல்லு.
Faun, *s.* வனதேவதை, மோடி, காடுகொள்.
Fā'vor, *s.* தயை, அருள், கருணை, சார்பு, பிரீதி, இட்டம்.
 as support, aid, உதவி, துணை, ஆதரவு, சகாயம்.
 as benefit, உபகாரம், வெகுமதி, நன்மை.
Fā'vor, *v. a.* தயைசெய்தல், அனுக்கிரகித்தல், அருளல், உபகரித்தல், ஆதரித்தல், கருணைபுரிதல், கடாட்சித்தல்.
Fā'vor-a-ble, *a.* வசதியான, சுகமான, தயையான, நயப்பான.
 wind, நல்லகாற்று, வாய்ப்பானகாற்று.
 time, சுகதினம், நற்காலம், தகுந்தகாலம்.
Fā'vor-a-ble-ness, *s.* ஏது, தயை, வசதி.
Fā'vor-a-bly, *adv.* தயையாய், பட்சமாய், நேசமாய்.
Fā'vor-ed, *a.* தயைபெற்ற, நலமுள்ள.
Fā'vor-ite, *s.* நேசன், அன்பன், காதலன், நண்பன், பிரியை.
Fā'vor-ite, *a.* பிரீதியான, இஷ்டமான, பிரியமான.
 study, விரும்பியகல்வி.
 child, நேசபுத்திரன், அருமந்தபிள்ளை, அருமகவு.
Fā'vor-it-ism, *s.* பிடிமானம், பட்சம், வாரம்.
Fawn, *s.* மான்குருளை, மான்கன்று.
 as flattery, இச்சகம்.
Fawn, *v. n.* கெஞ்சுதல், நேசங்காட்டுதல்.
 to bring forth, ஈனுதல்.
Fawn'er, *s.* நேசங்காட்டி, முகத்துதிகாரன்.
Fawn'ing, *s.* முகத்துதி.
Fawn'ing-ly, *adv.* முகத்துதியாய், இச்சகமாய்.
Fāy, *v. a.* ஒத்தல், இசைதல்.

Fē'al-ty, *s.* இராசாவுக்கமைவு, தலைவற்குறுதியுடைமை.

Fēar, *s.* பயம், பயங்கரம், அச்சம், ஏக்கம், கலக்கடி.

the cause of fear, அச்சுறுத்தும்பொருள்.

Fēar, *v.* பயப்படுதல், அஞ்சுதல், ஏங்குதல்.

to reverence, வணங்குதல்.

Fēar'ful, *a.* பயப்பாடுள்ள, பயங்கரமான, அச்சமுள்ள.

Fēar'ful-ly, *adv.* பயப்பாடாய், பயங்கரமாய், அஞ்சத்தக்கவிதமாய்.

Fēar'ful-ness, *s.* அச்சம், ஏக்கம், அதைரியம்.

Fēar'less, *a.* பயமில்லாத, அஞ்சாத, ஆண்மையான, வீரமுள்ள, திடாரிக்கமான.

Fēar'less-ly, *adv.* தைரியமாய், வீரமாய், அஞ்சாமல்.

Fēar'less-ness, *s.* பயமின்மை, ஆண்மை, துணிவு, வீரம், திடாரிக்கம், அஞ்சாமை.

Fēas-i-bil'i-ty, *s.* செய்யக்கூடுந்தன்மை, நடப்பிக்கக்கூடியதன்மை.

Fēas'i-ble, *a.* செய்யக்கூடிய, பண்படுத்தக்கூடிய.

Fēas'i-ble-ness, *s.* செய்யக்கூடுந்தன்மை, நடப்பிக்கக்கூடியதன்மை.

Fēas'i-bly, *adv.* பண்படுத்தக்கூடியவிதமாய்.

Fēast, *s.* விருந்து, தீம்பண்டம்.

as festival, திருவிழா, உற்சவம், பண்டிகை.

Fēast, *v. a.* விருந்தோம்பல், உணவூட்டுதல், விருந்தூட்டுதல், குளிரப்பண்ணுதல்.

the eyes, கண்குளிரப்பார்த்தல்.

Fēast, *v. n.* விருந்துண்ணுதல், சம்பூரணமாய்ப்பொசித்தல், குளிர்தல்.

Fēast'er, *s.* விருந்தன், விருந்தோம்புவோன்.

Fēast'ing, *s.* விருந்தோம்புகை, சம்பிரமம்.

Fēat, *s.* வீரச்செய்கை, பராக்கிரமம்.

Feath'er, *s.* இறகு, சிறகு, சிறை, கலாபி, தூவி, தோகை.

bed, தூவிமெத்தை.

as hair of a quill, நெறிமயிர்.
as kind, இனம், கிளை, குலம்.
Feath'er, *v. a.* இறகணிதல், அலங்கரித்தல், சேவல்மிதித்தல்.
one's nest, ஆஸ்தியைச்சேகரித்தல், அருக்கிக்கூட்டுதல்.
to feather an arrow, அம்பிற்கிறகிடல்.
Feath'er-ed, *a.* இறகுள்ள, இறகுமொய்த்த.
Feath'er-edge, *s.* பூ, கூர், முனை, கரு.
Feath'er-less, *a.* இறகில்லாத, இறகுமுளையாத.
Feath'er-y, *a.* இறகுமுளைக்கிற, இறகரும்புகிற.
Fēat'ly, *adv.* நேர்த்தியாய், கைச்சுறுக்காய்.
Fēat'ure, *s.* சாயல், உறுப்பு, உருபு, முகருபு, முகக்குறி, முகச்சாயல்.
Fēat'ur-ed, *a.* சாயலான, முகருபுள்ள, வாகுள்ள.
Fe-brif'ic, *a.* சுரமுண்டாக்குகிற.
Feb'ri-fuge, *s.* சுரம்நீக்குமருந்து, சுரஅவுஷதம்.
Fē'brile, *a.* சுரமுள்ள, காய்ச்சலுள்ள.
Feb'ru-a-ry, *s.* மாசிமாதம்.
Fē'cal, *a.* கசாளமுள்ள, மலமுள்ள.
Fē'ces, *s.* கசாளம், மண்டி, மலம்.
Fec'u-lence, *s.* சேறுள்ளதன்மை, கசாளம், மண்டி.
Fec'u-lent, *a.* சேறுள்ள, மண்டியான, கசாளமுள்ள.
Fē'cund, *a.* செழிப்புள்ள, விருத்தியான, பலிதமான.
Fē'cun-dāte, *v. a.* சினைப்படுத்துதல், சினைப்பித்தல்.
to be fecundated, கருக்கொள்ளுதல், சினைக்கொள்ளுதல்.
Fē-cun-dā'tion, *s.* கருக்கொள்ளுகை, சினையாகுகை.
Fe-cund'i-ty, *s.* கனிகொடுக்குந்தன்மை, விருத்தித்துவம், பலிப்பு.
Fed'er-al, *a.* உடன்படிக்கையுள்ள, சம்பந்தமான.
Fed'er-al-ist, *s.* உடன்படிக்கைக்காரன், அன்னியோன்னியன்.
Fed'er-ate, *a.* வாக்குத்தத்தம்பண்ணின, சம்பந்தமான, படைத்துணையான.

Fed-er-ā'tion, *s.* படைத்துணைகொள்கை, சம்பந்தம், ஐக்கம்.
Fed'er-a-tive, *a.* சம்பந்தமான, உடன்படிக்கையுள்ள, ஐக்கமுள்ள.
Fee, *s.* சுதந்திரம், கூலி, வெகுமதி, பொருத்தம்.
 simple, மானியம், அறுதி.
Fee, *v. a.* கூலிகட்டுதல், கூலிகொடுத்தல், கைக்கூலிகொடுத்தல், மானியமாய்க்கொடுத்தல்.
Fee'ble, *a.* நொய்ய, தளர்ச்சியான, நிர்ப்பலமான, பலவீனமுள்ள.
Fee'ble-ness, *s.* தளர்ச்சி, நிர்ப்பலம், நொய்மை, பலவறுதி, பலவீனம்.
 of mind, பேதைமை, ஏழைமை.
Fee'bly, *adv.* பலவீனமாய், மெலிவாய், தளர்ச்சியாய்.
Feed, *s.* சாப்பாடு, தீன், உணவு.
 of beasts, இரை, மேய்ச்சல்.
Feed, *v. a.* அருத்துதல், போஷித்தல், ஊட்டுதல், தீற்றுதல்.
 beasts, fowls, &c., மேய்த்தல், இரைகொடுத்தல், இரையிடுதல், பருக்குதல்.
Feed, *v. n.* உண்ணல், புசித்தல், சாப்பிடுதல், அருந்துதல்.
 as beasts, fowls, &c., மேய்தல்.
Feed'er, *s.* உணவுகொடுக்கிறவன், புசிக்கிறவன்.
Feel, *v.* உணருதல், பரிசித்தல், அனுபவித்தல், அறிதல், தேருதல்.
 acutely, உறைத்தல்.
 after, தேடுதல், ஆராய்தல்.
 cold, கூதலோடுதல், குளிர்பிடித்தல், குளிர்கொள்ளுதல்.
 for, or pity, பரிதபித்தல்.
 heavy, as the head, தலைகனத்தல்.
 heavy, as a body, கனத்தல், திமிர்த்தல்.
 hot and feverish, கொதித்தல், சுடுதல்.
 hot, in the body, கொதித்தல்.
 hot, as the weather, காந்துதல்.
 hurt, மனநோதல், விசனப்படுதல்.
 out, எழுவாயறிதல், மூலமறிதல்.
 thankful, நன்றியறிதல்.
 with the hand, தடவுதல், துளாவுதல், நெருடுதல்.
 of a louse, உணுவுதல்.
 in the dark, தடவுதல், ஒற்றுதல்.

the pulse, நாடிபார்த்தல், தாதுபார்த்தல்.
Feel'er, *s.* உணருவோன்.
of insects, மூஞ்சி, கொம்பு.
Feel'ing, *s.* பரிசவறிவு, மனக்கருத்து, உணர்ச்சி, உணர்வு, அறிவு, அனுபவம்.
sense of, சுவர்ணை.
as compassion, கசிவு, இரக்கம், உருக்கம், அனுதாபம்.
of the pulse, தாதுபார்த்தறிதல்.
with fingers, நெருடல், நுணுவல்.
one past feeling, உரோசங்கெட்டவன்.
Feel'ing-ly, *adv.* உணர்வோடே, உருக்கமாய், மனசார, மனமறிய.
Feet, *s.* (*pl.* of Foot.) அடிகள், பாதங்கள்.
Feign, *v.* மாரீசம்பண்ணுதல், ஒப்பாசாரம்பண்ணுதல், கள்ளம்பண்ணுதல், பாவனைகாட்டுதல், போலிபண்ணுதல்.
Feign'ed-ly, *adv.* பொய்யாய், வேடமாய், போலியாய்.
Feign'ed-ness, *s.* போலி, வேஷம்.
Feign'er, *s.* போலிக்காரன், வேஷக்காரன், கட்டுக்கதைக்காரன்.
Feign'ing, *s.* வேஷம், கரவடம்.
Feign'ing-ly, *adv.* வேஷமாய், கரவடமாய்.
Feint, *s.* வெளிச்சாடை, பாசாங்கு, போலி.
Feld'spar, *s.* மாவயிரக்கல்.
Fe-lic'i-tāte, *v. a.* களிப்பித்தல், ஆனந்தப்படுத்தல், சந்தோஷப்படுத்தல், சோபனஞ்சொல்லிவாழ்த்துதல்.
Fe-lic-i-tā'tion, *s.* சோபனம், வாழ்த்து, மங்களம், சுமங்கலம்.
Fe-lic'i-tous, *a.* களிப்புள்ள, சோபனமான, சுபமான.
event, சோபனகாரியம், சுமங்கலகாரியம்.
Fe-lic'i-tous-ly, *adv.* களிப்பாய், சோபனமாய், சுபமாய்.
Fe-lic'i-ty, *s.* இன்பம், செல்வம், நல்வாழ்வு, செழிப்பு, சுகம், களிப்பு.
great, பேரின்பம், சுகானுபவம், சுகானந்தம், சுகாதீதம்.
Fē'līne, *a.* பூனைக்குரிய.
Fell, *s.* தோல், சருமம்.

Fell, *v. a.* தறித்தல், வெட்டுதல், குறைத்தல், வீழ்த்தல்.
Fell, *a.* குரூரமான, துஷ்ட, கொடிய.
Fell'er, *s.* தறிகாரன், குரூரன்.
Fell'mŏn-ger, *s.* தோல்வியாபாரி.
Fel'lōe, *s.* (*see* Felly.) வளையக்கட்டை.
Fel'lōw, *s.* சோடு, இணை, தோழன், உபயோகி, கூட்டாளி, உடனொத்தவன், சகவாசி, சகாயன்.
citizen, தன்னூரான், ஒரேநகரத்தான்.
creatures, உடனொத்தவர்கள், ஒத்தபிறப்பின்சிருட்டிகள்.
feeling, உடனொத்தவுணர்வு, பரநேசம்.
heir, உடன்சுதந்தரன்.
servant, உடனொத்தவேலைகாரன், உடன்வேலையாள்.
soldier, துணைப்போர்வீரன்.
student, உடன்மாணாக்கன்.
sufferer, உடனொத்தநோயாளி, கூடவுத்தரிப்போன்.
traveller, வழித்துணை, உடன்பிரயாணி.
of college, கல்லூரியின்பிரயோசனபங்காளி.
an ignoble man, நீசன், எளியன்.
Fel'lōw, *v. a.* சோடுகட்டுதல், இணைத்தல்.
Fel'lōw-ship, *s.* உடந்தை, இணக்கம், ஐக்கம், அன்னியோன்னியம், சேர்த்திக்கை.
right hand of, ஐக்கபந்தனகரம்.
Fel'ly, *s.* சில்லின்வளையக்கட்டை.
Fē'lo-de-sē, *s.* தற்கொல்லி, தற்கொலைபாதகன், தற்காதகன்.
Fel'on, *s.* குற்றவாளி, பாதகன்.
as whitlow, நகச்சுற்று, நகப்பிளவை.
Fel'on, Fe-lō'ni-ous, *a.* கொடிய, தீய, துரோகமுள்ள, துஷ்ட, சதியுள்ள, இரண்டகமுள்ள.
Fe-lō'ni-ous-ly, *adv.* இரண்டகமாய், பாதகமாய்.
Fel'on-y, *s.* பாதகம், காதகம், கொலைக்குரியகுற்றம், துரோகம்.
Felt, *s.* தோல், தோற்பாய், சருமாசனம், சுயபின்னறக்கம்பலப்புடைவை.
Fē'male, *s.* பெண், ஸ்திரி.

Fē′male, *a.* பெண்பாலுக்குரிய, பெண்களுக்கடுத்த, பிணவுள்ள.
government, பெண்ணரசு.
excellency, பெண்ணலம், பெண்மாட்சி.
friend, தோழி, காதலி, பிரியை, சகி, சங்காத்தி, பாங்கி.
Fem′i-nine, *a.* பெண்களுக்கடுத்த, பெண்மைக்கடுத்த.
effeminate, பெண்மையான, வீரமில்லாத, ஆண்மையற்ற.
gender, பெண்பால், ஸ்திரீலிங்கம்.
soft, delicate, மெல்லியலான, மிருதுவான.
Fem′o-ral, *a.* தொடைக்கடுத்த, தொடையிலுள்ள.
Fen, *s.* சகதி, செதுப்புநிலம், உளை, சேற்றுநிலம்.
Fence, *s.* வேலி, அடைப்பு, காவல், அவரோதம்.
as fencing, சிலம்பம், சிரமம்.
Fence, *v. a.* வேலியடைத்தல், அரண்படுத்தல், அடைத்தல், காத்தல்.
Fence, *v. n.* சிலம்பம்பண்ணுதல், சிலம்பமாடுதல், சிரமித்தல்.
Fenc′ed, *a.* அடைத்த, அரணித்த, காவல்செய்யப்பட்ட.
city, or town, புரம், அரண், நகரம்.
Fence′less, *a.* அடைப்பில்லாத, வேலியில்லாத, காப்பில்லாத, அரணற்ற.
Fenc′er, *s.* சிலம்பக்காரன், சிரமி, சிரமக்காரன்.
Fen′ci-ble, *a.* காக்கக்கூடிய.
Fenc′ing, *s.* சிரமம், சிலம்பவிளையாட்டு.
master, சிலம்பக்காரன், சிரமப்பணிக்கன்.
materials, கதிகால்முதலியவை, வேலிமுஸ்தீதுகள்.
school, சிலம்பக்கூடம், சிரம்பகழகம்.
Fend, *v. n.* விலக்குதல், காத்தல்.
Fend′er, *s.* தீய்த்தாங்கி, தீய்க்காப்பு.
in shipping, மரக்கலக்காப்புத்தறி.
Fen′nel, *s.* சதகுப்பி, பெருஞ்சீரகம்.
Fen′ny, *a.* செதும்புள்ள, சேறுள்ள, அள்ளலான.
Feoff, *s.* மானியம், வெகுமதி.

Feoff, *v. a.* (*see* Fief.) ஆட்சியொப்புக் கொடுத்தல், மானியங்கொடுத்தல்.

Feoff'ment, *s.* மானியங்கொடுக்கை.

Fe-rā'cious, *a.* கனியுள்ள, கனிகொடுக்கக்கூடிய.

Fer'ment, *s.* கொதி, வேக்காடு, அவியல், நொதி.
 as confusion, குழப்பம், கலகம்.

Fer-ment', *v. a.* பொங்கப்பண்ணுதல், நொதிக்கப்பண்ணுதல், குழப்புதல்.

Fer-ment', *v. n.* பொங்குதல், கொதித்தல், நொதித்தல், நுரைகொள்ளுதல்.
 as leaven, புளித்தல், நொதித்தல்.

Fer-ment-a-bil'i-ty, *s.* நொதிக்கக்கூடியதன்மை.

Fer-ment'a-ble, *a.* வேகக்கூடிய, நொதிக்கக்கூடிய.

Fer-ment-ā'tion, *s.* நொதி, புளிப்பு.
 of vegetable matter, அவியல், உட்கல்.
 of liquids, கொதிப்பு, நொதி, பொங்கல், நுரைப்பு.
 of leaven, புளிப்பு, நொதிப்பு.

Fer-ment'a-tive, *a.* கொதிக்கச்செய்கிற, நுரைக்கச்செய்கிற, நொதிப்பிக்கிற.

Fern, *s.* நீர்வேம்பு.

Fern'y, *a.* நீர்வேம்புள்ள.

Fe-rō'cious, *a.* துட்டமுள்ள, உக்கிரமான, கொடுமையான.
 persons, கண்டகர், துட்டர், தறுகுறும்பர்.

Fe-rō'cious-ly, *adv.* கொடுமையாய், மூர்க்கமாய், சண்டாளத்தனமாய், உக்கிரமாய்.

Fe-rō'cious-ness, *s.* உக்கிரம், கொடுமை, குறும்பு.

Fe-roc'i-ty, *s.* மூர்க்கம், உக்கிரகோபம், துட்டம், வெடுவெடுப்பு.

Fer're-ous, *a.* இரும்புக்குரிய.

Fer'ret, *s.* கீரியினத்தோர்மிருகம்.
 as a tape, ஓர்விதநாடா.

Fer'ret, *v. a.* கலைத்தல், ஒளிப்பிடத்தினின்றுதுரத்தல்.

Fer'ret-er, *s.* ஒளிப்பிடத்திலிருந்தகற்றுவோன்.

Fer'ri-age, *s.* ஆயம், துறைக்கூலி, ஓடக்கூலி, அனுதரம்.

Fer-rif'er-ous, *a.* இரும்புள்ள, இரும்பு விளைகிற.

Fer-rū'gi-nous, *a.* இரும்புள்ள, இரும்புக்கிட்டம்போன்ற.

Fer'rule, *s.* பூண், சுரை, கிம்புரி.

Fer'ry, *s.* துறை, இறக்கம், இரேவுத்துறை.
 rent, துறைமுகக்குத்தகை.
 renter, துறைமுகக்குத்தகைகாரன்.

Fer'ry, *v. a.* துறைத்தோணியிற்கொண்டுபோதல்.

Fer'ry-bōat, *s.* ஓடம், துறைத்தோணி.

Fer'ry-man, *s.* ஓடக்காரன், துறைத்தோணிக்காரன்.

Fer'tile, *a.* செழிப்புள்ள, விளைவுள்ள.
 country, செழித்தநாடு, விளைவுள்ளநாடு, வளநாடு.
 land, செழும்பூமி, விளைவுள்ளநிலம், உருவரை, தசைத்தபூமி.
 to be fertile, செழித்தல்.

Fer'til-ly, *adv.* செழிப்பாய்.

Fer'tile-ness, } *s.* செழிப்பு, கொழுப்பு, வளம், செழுமை.
Fer-til'i-ty,

Fer'til-īze, *v. a.* செழிக்கப்பண்ணுதல், பண்படுத்தல், நிலத்தைச்சுகிபண்ணுதல்.

Fer'ule, *s.* சாட்டை.

Fer'ven-cy, *s.* மிகுதாபம், அகோரம், மனோவேகம், அனல், பத்திச்சுவாலை.

Fer'vent, *a.* உட்டணமான, உக்கிரமான, விவேகமான, வைராக்கியமான.

Fer'vent-ly, *adv.* வெப்பமாய், வைராக்கியமாய், விருப்பமாய், அனலாய்.

Fer'vid, *a.* வெப்பமான, சூடான, வைராக்கியமான.

Fer'vid-ly, *adv.* வெப்பமாய், வைராக்கியமாய்.

Fer'vid-ness, *s.* சூடு, வேகம், வைராக்கியம், விருப்பம், மிகுதாபம்.

Fer'vor, *s.* அனல், வேகம், விருப்பம், சூடு.

Fes'cen-nīne, *s.* மணவாழ்த்து.

Fes'tal, *a.* விருந்துக்கடுத்த, மகிழ்ச்சியான, ஆடம்பரமான.

Fes'ter, *v. n.* சீக்கட்டுதல், கொதித்தல்.

Fes'ti-val, *s.* பண்டிகை, திருவிழா, உற்சவம்.

Fes'ti-val, *a.* விருந்துக்குரிய, மகிழ்ச்சி யான.

Fes-tiv'i-ty, *s.* கொண்டாட்டம், உண்டாட்டு, களியாட்டு, விழா, மகிழ்.

Fes-toon', *s.* பூமாலை, தோரணம்.
 in architecture, சித்திரமாலை.

Fes'tu-cous, *a.* வைக்கோலாற்செய்யப்பட்ட.

Fetch, *s.* உபாயம், தந்திரம்.

Fetch, *v. a.* எடுத்துக்கொண்டுவருதல், கொண்டுவருதல், வருவித்தல்.
 a breath, மூச்சுவாங்குதல்.
 a price, விலைபெறுதல்.
 as reach, சேருதல், அண்டுதல்.

Fetch'er, *s.* கொண்டுவருகிறவன்.

Fet'id, *a.* நாற்றமான, துற்கந்தமான.
 to be fetid, நாறுதல்.

Fet'id-ness, *s.* நாற்றம், நாறல், துற்கந்தம்.

Fet'lock, *s.* குதிரைக்காற்குழைச்சுமயிர்.

Fē'tor, *s.* நாற்றம், துற்கந்தம்.

Fet'ter, *s.* காற்றளை, கால்விலங்கு.

Fet'ter, *v. a.* பிணைத்தல், கட்டுதல், பூட்டுதல்.

Fē'tus, *s.* கரு, கருப்பிண்டம், புரூணம்.

Feūd, *s.* குழப்பம், சண்டை, தீராப்பகை, குலப்பகை.
 as feif, மானியம், உம்பிளிக்கை.

Feūd'al, *a.* உம்பிளிக்கைக்கடுத்த.

Feūd'al-ism, *s.* உப்பிளிக்கைப்பிரமாணம், மானியப்பிரமாணம்.

Feūd-al'i-ty, *s.* உப்பிளிக்கைத்தன்மை.

Feūd'a-to-ry, *s.* உப்பிளிக்கைகாரன்.

Fē'ver, *s.* சுரம், வெப்புநோய், காய்ச்சல்.
 bilious, பித்தசுரம்.
 burning, தாபசுரம்.
 contagious, தொற்றுக்காய்ச்சல்.
 violent, கடுஞ்சுரம்.
 continual, விடாக்காய்ச்சல், விடாச்சுரம்.
 intermittant, முறைக்காய்ச்சல்.
 irregular, இடைக்காய்ச்சல், ஒட்டுக்காய்ச்சல்.
 night, இராக்காய்ச்சல்.
 tertian, மூன்றுமுறைக்காய்ச்சல்.
 quartan, நாலாமுறைக்காய்ச்சல், நாளுளைமாறன்.

quotidian, தினக்காய்ச்சல்.
in adults, உட்காய்ச்சல், குளிர்காய்ச்சல், சீதசுரம்.
internal in children, கணக்காய்ச்சல், உட்காய்ச்சல்.
bilious, பித்தசுரம்.
burning, தாபசுரம்.
continual, விடாக்காய்ச்சல், விடாச்சுரம்.

Fē'ver-ish, *a.* காய்ச்சற்குணமுள்ள, சுரச்சாடையான.

Fē'ver-ish-ness, *s.* கொதி, வெப்பு, சூடு.

Few, *a.* சில, அற்ப, கொஞ்ச.

Few'ness, *s.* சுருக்கம், சிறுத்தொகை.

Fī'ance, *v. a.* விவாகத்துக்குவாக்குக்கொடுத்தல்.

Fī'at, *s.* கட்டளை, முடிப்பு, விதி.
of God, திருவாக்கு.

Fib, *s.* பொய், சித்திரவசனம், புரளி.

Fib, *v. n.* பொய்சொல்லுதல், பொய்த்தல்.

Fib'ber, *s.* பொய்யன், புரளிக்காரன், புளுகன், வீம்பன்.

Fī'bre, *s.* சிம்பு, தும்பு, நார், நூல்.
of a rope, இழை, புரி.

Fī'brous, *a.* சிலும்பலான, சிம்பான, நரம்பான, நாருள்ள, தும்புள்ள.
as clasp, பூட்டு.

Fick'le, *a.* தளப்பமான, நிலையற்ற.

Fick'le-ness, *s.* நிலையின்மை, உறுதியின்மை, அசைவு, சலனம், புரளித்தனம், மாறுபாடு.

Fick'ly, *adv.* நிலையின்மையாய், அசைவாய், சலனமாய்.

Fic'tile, *a.* உருவாக்கின, வனைந்த, கைசெய்த, இயற்றின.

Fic'tion, *s.* கட்டுக்கதை, கட்டுவிசேஷம், பொய்க்கதை, கற்பிதகத்தியம்.

Fic'tious, Fic-ti'tious, *a.* வைப்புக்கட்டான், கட்டுக்கதையான, பொய்க்கதையான, கற்பிதமான.

Fic-ti'tious-ly, *adv.* கட்டுக்கூட்டாய், பொய்வேஷமாய், பொய்யாய்.

Fic-ti'tious-ness, *s.* வைப்புக்கட்டு, இட்டுக்கட்டு.

Fid, *s.* தொற்றுப்பாய்மரந்தாங்கி, பாய்மரத்தின்தொற்றுமுறிதாங்கி.

as a pin, கயிறுதொற்றவைத்துப்பின்னூசி.

Fid'dle, *s.* யாழ், வீணை, கின்னரம், நரம்புக்கருவி.
bow or stick, வில்.
bridge of, வீணையின்குதிரை.
hair of the bow, வில்நாண்.
string, தந்திரி, நரம்பு.

Fid'dle, *v.* யாழ்வாசித்தல், வீணைவாசித்தல், கொளுத்துதல், இயக்கல்.
to trifle, வீணாய்க்காலத்தைப்போக்கல், பொழுதுபோக்கல்.

Fid'dler, *s.* கின்னரன், கந்தருவன், யாழ்ப்பாடி, குயிலுவன்.

Fi-del'i-ty, *s.* உண்மை, நிசம், நிதானம், நேர்மை, நாணயம்.
conjugal fidelity of a wife, கற்பு, பதிவிரதம், பத்தினித்தன்மை.

Fidg'et, *s.* துருதுருப்பு, பரபரப்பு.

Fidge, Fidg'et, *v. a.* குடுகுடுத்தல், துருதுருத்தல், பரபரத்தல், அடிக்கொருகுணங்கொள்ளுதல்.

Fidg'et-y, *a.* துருதுருத்த.
a fidgety person, கடுகுடுத்தவன், துருதுருத்தவன்.

Fi-dū'cial, *a.* நம்பிக்கையுள்ள, உறுதியுள்ள, அசையாத, நிலையுள்ள.

Fi-dū'cial-ly, *adv.* நம்பிக்கையாய், ஸ்திரமாய்.

Fi-dū'cia-ry, *s.* நம்பப்படுபவன், நம்பத்தக்கவன், கையடைகாரன்.
in theology, கிரியைவேண்டாதவிசுவாசி.

Fi-dū'cia-ry, *a.* நம்பப்படத்தக்க, விசுவாசிக்கத்தக்க.

Fīe, *int.* சீசீ, இகழ்ச்சிக்குறிப்பு.

Fiēf, *s.* ஆட்சி, மானியம், நன்கொடை, உம்பிளிக்கை.

Fiēld, *s.* வெளி, விளைநிலம்.
barren, கரம்புநிலம், பொட்டற்றரை, களர்நிலம், பாழ்நிலம்.
cultivated, தூர்வைநிலம், விளைபுலம்.
marshal, சேனைபதி.
mouse, அகழெலி.
spoils, கொள்ளைப்பொருள்.
sports, வேட்டம், வேட்டை.
of battle, போர்க்களம், அடுகளம், அமர்க்களம், சமர்க்களம், இரணகளம்.

of rice, வயல், பண்ணை, மருதநிலம், நன்செய்.
to take the field, போரிலேற்றல், போர்கலத்தல்.
to lose the field, தோற்றுப்போதல், புறங்கொடுத்தல்.
to gain the field,. வெல்லுதல், சயங்கொள்ளுதல், கெலித்தல்.
in scriptural sense, உலகம்.
Fiēld'-piēce, *s.* சிறுபீரங்கி, கைப்பீரங்கி.
Fiēnd, *s.* துட்டதேவதை, பசாசு, பேய், தீராப்பகைஞன், பில்லி.
Fiēnd'-līke, *a.* பேயாட்டமான, துட்ட.
Fiērce, *a.* கொடுமையான, உக்கிரமான, அகோரமான, மூர்க்கமான, துட்டத்தனமான.
countenance, உக்கிரமுகம், கொடியமுகம்..
invective, கொடுஞ்சொல், வெஞ்சொல், வெம்மொழி.
wrath, உக்கிரகோபம், கடுங்கோபம், குரோதம், உருத்திரம், இரௌத்திரம்.
Fiērce'ly, *adv.* மூர்க்கமாய், அகோரமாய், தறுகுறும்பாய், வேண்டாத்தலையாய், துட்டத்தனமாய்.
Fiērce'ness, *s.* கொடுமை, உக்கிரம், அகோரம், மூர்க்கம்.
Fī'er-i-ness, *s.* கடுமை, வெம்மை, வேகம், கோபம், கனல், வெப்பம்.
Fī'er-y, *a.* கனலுள்ள, தீபோன்ற, வேகமான, வெப்பான, அனலான.
bright, அக்கினிப்பிரகாசமுள்ள, சோதியுள்ள.
Fīfe, *s.* ஆய்க்குழல், வேய்ங்குழல்.
Fīf'er, *s.* குழலூதுகிறவன்.
Fif'teen, *a.* பதினைந்து.
Fif'teenth, *a.* பதினைந்தாம்.
Fifth, *a.* ஐந்தாவதான, ஐந்தாம்.
Fifth'ly, *adv.* ஐந்தாவதாய்.
Fif'ti-eth, *a.* ஐம்பதாம்.
Fif'ty, *a.* ஐம்பது, ஐம்பான்.
Fig, *s.* அத்தி, அத்திப்பழம்.
Fig'-tree, *s.* அத்திமரம்.
Fīght, *s.* போர், யுத்தம், சமர், சண்டை.
Fīght, *v.* போராடுதல், யுத்தஞ்செய்தல், பொருதல், சண்டைசெய்தல்.
Fīght'er, *s.* போராடுவோன், யுத்தஞ்செய்வோன், சண்டைக்காரன்.

Fight'ing, s. போராட்டம், சண்டை.
cock, போர்ச்சேவல்.
Fig'ment, s. வைப்புக்கட்டு, பொய்க்க தை.
Fig'u-late, a. உருவாக்கப்பட்ட, வனை ந்த, குயிற்றின, இயற்றின.
Fig'u-ra-ble, a. வனையக்கூடிய, உருவா க்கப்படக்கூடிய.
Fig-u-ra-bil'i-ty, s. உருப்படக்கூடிய தன்மை.
Fig'u-rate, a. போலியான, உருவகமா ன, உருபான.
Fig-u-rā'tion, s. உருவகிப்பு, உருப்ப டுத்துகை.
Fig'u-ra-tive, a. பிறிதொன்றைவெளிப் படுத்திய, உருவகமான, பாவனை யான.
language, உவமை, உவமானம், உரு வகப்பேச்சு.
Fig'u-ra-tive-ly, adv. உவமையாய், ஒப் பனையாய், உருவகமாய், பாவனை யாய்.
Fig'ure, s. வடிவம், உருவம், இயந்திரம்.
appearance, personage, } கோலம், தோற்றம், சாயல், பாங்கு, சாங் கம்.
as numeral, இலக்கம்.
as a letter, அட்சரம், எழுத்து.
shape, சாயல், ஆகாரம், வடிவு, உரு பு, ஆகிருதி.
image, statute, } பாவனை, பிரதிமை, பொ ம்மை.
as horoscope, சாதகம்.
of speech, சொல்அலங்காரம், அணி.
in the mind, கற்பிதம், எண்ணம், ச ங்கற்பம், உத்தேசம்.
to make a figure, கோடுகீறுதல், சக் கரங்கீறுதல்.
Fig'ure, v. a. பாவித்தல், பாவனைசெய் தல், உருவாக்கல், உருவகப்படுத்தல், சித்திரித்தல், சித்திரந்தீட்டுதல்.
in the mind, கற்பித்தல், எண்ணுதல், உத்தேசித்தல், சங்கற்பித்தல், மனோ பாவியங்கொள்ளல்.
Fil'a-ment, s. நூல், தும்பு, சிம்பு.
in botany, அல்லி, கூந்தல்.
of leaves, நரம்பு.
as fibre, நார், நரம்பு.

Fil-a-ment'ous, *a.* புட்பநூல்போன்ற.
Filch, *v. a.* சோர்த்தல், சிறுகளவுசெய்தல், பொதுக்குதல்.
Filch'er, *s.* சிறுகள்வன், நிமிண்டி, சோரன்.
Filch'ing-ly, *adv.* களவாய், திருட்டுத்தனமாய்.
Fīle, *s.* அரம்.
a list, பட்டோலை, இடாப்பு, இலாவணம், அட்டவணை.
of papers, olas, பட்டோலைக்கட்டு, காகிதச்சுருள், காகிதக்கோவை.
of soldiers, அணி, நிரை, பத்தி, பௌஞ்சு.
Fīle, *v. a.* அராவுதல், அராத்துதல்.
to arrange, கோத்தல், எழுதியணிப்படுத்தல், எழுதிச்சேர்த்தல்.
an account in court, கணக்குக்காட்டுதல்.
Fīle, *v. n.* ஒருவர்பின்னொருவராய்ப்போதல், வரிசையாய்ப்போதல்.
Fil'ial, *a.* பிள்ளைமையான, பிள்ளையடைவான.
affection, பிள்ளையடைவானவுருக்கம், புத்திரநேசம்.
Fil-i-ā'tion, *s.* பிதாவுடன்பிள்ளைக்குள்ளஇனபந்தம், பிதாப்புத்திரசம்பந்தம்.
Fil'i grane, Fil'i-gree, *s.* சரிகையிழைப்பு.
Fīl'ings, *s. (pl.)* அரபொடி.
Fill, *s.* பூரணம், திருத்தி.
Fill, *v. a.* நிரப்புதல், நிறைத்தல், பூர்த்திசெய்தல், நிறைவேற்றுதல்.
up by cramming, செருமுதல், அமுக்குதல், திணித்தல், நிறைத்தல்.
up a well, pit, &c., தூர்த்தல், மேவுதல்.
to satisfy, திருத்தியாக்குதல்.
Fill, *v. n.* நிரம்புதல், நிறைதல், தேங்குதல், தெவிட்டல்.
as clouds with water, கருக்கொள்ளுதல், சூல்கொள்ளுதல்.
up as a well, தூர்தல், மேவுணல்.
as an obstructed water course, தேங்குதல்.
Fill'er, *s.* நிரப்புவோன், நிரப்புவது.
Fil'let, *s.* கச்சு, நாடா, பிணிகை.
Fill'ing, *s.* நிரப்புகை, நிறைப்பு.

as thread, தார்நூல்.
Fil'lip, *s.* சுண்டுகை.
Fil'lip, *v. a.* சுண்டுதல், மீட்டுதல்.
Fil'ly, *s.* குதிரைக்குட்டி.
Film, *s.* சவ்வு, மெல்லியதோல், படலம்.
over the eye, நேத்திரப்படலம், பசாடு.
to take off the film, படலம்உரித்தல்.
Film'y, *a.* சவ்வுள்ள, படல்முள்ள.
Fil'ter, *s.* வடிசீலை, வடிக்குங்கருவி.
Fil'ter, *v. a.* வடித்தல், அரித்தல்.
Fil'ter, *v. n.* ஊறுதல், வடிதல்.
Filth, *s.* அழுக்கு, ஊத்தை, மலம், அசுத்தம், ஊழல், கசுமாலம், அசுசி, தீட்டு.
Filth'i-ly, *adv.* மலினமாய், அசுசியாய், அழுக்காய்.
Filth'i-ness, *s.* அழுக்கு, ஊத்தை.
Filth'y, *a.* மலினமான, ஊத்தையான, அழுக்கான, கசுமாலமான.
person, கசுமாலன், கசுமாலி.
words, அசப்பியம், தூஷணை.
Fil'trāte, *v. a.* அரித்தல், வடித்தல், வடிகட்டுதல்.
Fil-trā'tion, *s.* அரிப்பு, வடிப்பு, பொசிவு.
Fim'bri-āte, *v. n.* உரோமஓரமுள்ள.
Fin, *s.* மீன்சிறகு, மீன்செட்டை, செலு.
Fīn'a-ble, *a.* குற்றம்போடப்படத்தக்க, அபராதப்படத்தக்க.
Fī'nal, *a.* ஈறுன, கடையான, முடிவான, தீர்மானமான.
cause, நிமித்தகாரணம், கடைநோக்கம்.
Fī'nal-ly, *adv.* ஈறுய், அந்தமாய், கடையாந்தமாய்.
Fi-nance', *s.* பணவரத்து, இராசாவுக்குச்சேரும்இறை, வருமானம், இறை.
Fi-nan'cial, *a.* பணவருமானத்துக்கடுத்த.
Fi-nan'cial-ly, *adv.* வருமானமாய்.
Fin-an-ciēr', *s.* சம்பிரதி, சம்பத்துக்கணக்கன்.
Finch, *s.* ஓர்பட்சி.
Fīnd, *v. a.* கண்டுபிடித்தல், அடைதல், பெறுதல், கண்டெடுத்தல், தெரிதல், தீர்த்தல்.

fault, பிழையெடுத்தல், பிழைபிடித்தல், குற்றம்பிடித்தல்.
one's self, தன்பொறுப்பாய்ச்செய்தல், தன்செலவாய்ச்செய்தல்.
the way, வழிகாணுதல், வழிபிடித்தல், துறையறிதல்.
ways and means, வழிதுறைபிடித்தல், வழிவகைகாண்டல்.
to find in, as supply, வேண்டியதைக்கொடுத்தல்.
in law, தீர்த்தல்.

Fīnd'er, *s.* கண்டுபிடிப்போன், கண்டடைவோன், காண்போன்.

Fīnd'ing, *s.* காணுகை, காட்சி, கண்டுபிடிக்கை.
of a jury, தீர்ப்பு.

Fīne, *s.* தண்டம், அபராதம்.
in fine, முடிப்பாய்ச்சொல்லுகில், முடிப்பாய்.

Fīne, *v. a.* தண்டங்குறித்தல், தண்டம்போடுதல், அபராதமிடுதல்.
as clarify, தெளித்தல், தேற்றுதல், வடித்தல், சுத்தம்பண்ணுதல்.
metals, medicine, &c., புடமிடுதல், புடம்வைத்தல்.

Fīne, *a.* மென்மையான, நுண்மையான, மெல்லிதான, தெளிந்த, சுத்தமான, அழகான, நேற்றியான, நாகரீகமான, கபடமான, சிறப்பான.
gold, பசும்பொன், தங்கம், அபரஞ்சி.

Fīne'draw, *v. a.* இழைப்போடுதல், நேற்றியாயிழைப்போடுதல்.

Fīne'draw-er, *s.* இழைப்போடுவோன்.

Fīne'ly, *adv.* நுண்மையாய், கூர்மையாய், சிறப்பாய், நாகரீகமாய், அழகாய்.

Fīne'ness, *s.* கெட்டி, நுட்பம், கூர்மை, சூட்சம், நொய்மை, தெளிவு, சுத்தம், மிருது, சிறப்பு.

Fīn'er, *s.* புடமிடுவோன், அறவைப்போன்.

Fīn'er-y, *s.* குசால், கோப்பு, ஒய்யாரம், நாகரீகம், பிலுக்கு, வேடிக்கை.

Fi-ness', Fi-nesse', *s.* தந்திரம், உபாயம்.

Fin'ger, *s.* கைவிரல்.
the fourth, or ring finger, ஆழிவிரல், அநாமிகை, ஞானவிரல்.

fore finger, ஆட்காட்டிவிரல், சுட்டு விரல், தற்சனி.
little, சின்னிவிரல், கனிட்டிகை, சுண்டுவிரல்.
Fin'ger, *v.* தடவுதல், தொடுதல், நெரிடுதல், நுழைவுதல்.
to steal, கையாடுதல், கைபரிமாறுதல்.
play on an instrument, மீட்டல்.
Fin'ger-ed, *a.* கைதொட்ட, பரிசித்த.
Fin'i-cal, *a.* ஒய்யாரமான, ஒயிலான, வேடிக்கையான.
Fin'i-cal-ly, *adv.* ஒயிலாய், ஒய்யாரமாய், குசாலாய்.
Fin'i-cal-ness, *s.* ஒயில், குசால், வேடிக்கை.
Fīn'ing, *s.* தெளிப்பு, சுத்தம்பண்ணல், புடமிடுதல்.
as penalty, அபராதம்.
pot, குகை.
Fī'nis, *s.* முடிவு, சமாப்தம்,
Fin'ish, / Fin'ish-ing, *s.* முடிவு, முற்று, சம்பூரணம், நிறைவு.
to give a finish, சிறப்பாக்குதல், செப்பமாக்கல், செப்பனிடுதல், தேற்றுதல்.
Fin'ish, *v. a.* முடித்தல், தீர்த்தல், எல்லைகட்டுதல், முடிப்புக்கட்டுதல், தீர்ப்புக்கட்டுதல், செய்துமுடித்தல்.
a plan, கருமம்முடித்தல், துருவம்முடித்தல்.
Fin'ish-ed, *a.* முடிந்த, பூரணமாக்கப்பட்ட, தீர்ந்த, தீர்க்கமான.
rogue, தீர்ந்தகள்வன்.
to become finished, தீர்தல், முடிதல்.
Fin'ish-er, *s.* முடிப்போன், தீர்ப்போன்.
Fī'nīte, *a.* எல்லையுள்ள, மட்டுள்ள, தீர்ப்பான, அநித்திய, முடிவுள்ள.
verb, முற்றுவினை, வினைமுற்று.
Fī'nīte-ly, *adv.* மட்டாய், அநித்தியமாய்.
Fī'nīte-ness, *s.* எல்லையுள்ளதன்மை, அநித்தியதன்மை.
Fin'less, *a.* சிறகில்லாத, செலுவில்லாத, செட்டையில்லாத.
Fin'-līke, *a.* மீன்சிறகுபோன்ற.
Fin'ned, *a.* சிறகுமுளைத்த.
Fin'ny, *a.* சிறகுள்ள, செலுவுள்ள.
Fin'-tō-ed, *a.* தோலடியுள்ள.
Fĭr, *s.* தேவதாரு.

Fīre, *s.* நெருப்பு, அக்கினி, தீ, தேயு, அழல்.
arms, *(pl.)* வெடிக்கருவிகள்.
brand, எரிகொள்ளி, தீக்கொள்ளி, நெருப்புக்கொள்ளி, ஞெகிளி, உற்கை.
brand, as a person, நெருப்பன், தீயன், நெருப்புக்கொள்ளி.
coal, தணல், தழல்.
engine, தீயவிக்குஞ்சலசூத்திரம்.
fly, மின்மினி, கச்சோதம்.
god of, அக்கினிதேவன்.
lock, துப்பாக்கி.
place, அடுப்பு, சுல்லி, உலை, முத்தானம், காமரம், தீக்கரை.
ship, தீகால்மரக்கலம்.
spark, நெருப்புப்பொறி, புலிங்கம்.
wood, விறகு, இந்தனம்.
works, வாணம், பாணம்.
submarine fire, ஊழித்தீ, வடவானலம்.
as conflagration, பேரழல், பெருந்தீ.
as ardor, passion, மனவேகம்.
Fīre, *v. a.* கொளுத்துதல், தீமூட்டுதல்.
cannon, வெடிசுடுதல், வெடிதீர்தல்.
Fīre, *v. n.* நெருப்புப்பற்றுதல், எரிதல், கோபமுறுதல்.
Fīre'man, *s.* நெருப்பவிப்போன்.
Fīre'-pan, *s.* கணப்புச்சட்டி.
Fīre'sīde, *s.* அடுப்பங்கரை.
Fīr'ing, *s.* வெடிவைத்தல்.
Fīr'ing-ī'ron, *s.* சூட்டுக்கோல்.
Fĭr'kin, *s.* ஓர்முகத்தலளவு.
Fĭrm, *s.* உபயோகவத்தகர், கூட்டுவியாபாரிகள்.
Fĭrm, *a.* நிலையான, திடமான, திரமான, ஸ்திரமான, உரமான, உறுதியான.
attachment, திடபத்தி.
body, உரத்தசரீரம், கற்சரீரம், வச்சிரதேகம்.
cloth, கடுத்தப்புடைவை.
declaration, உறுதிச்சொல், திடவசனம், கட்டுரை.
gait, திடாரிக்கமானநடை.
mind, திடமனம், திடாரிக்கமனம், கலங்காநெஞ்சம்.
soil, உரத்தநிலம், வயிரநிலம்.
a firm built man, இறுகினவன், உரபிடியானவன், வச்சிரதேகி.

to be, grow, or become firm, உரத்தல், உரமுறுதல், திடங்கொள்ளுதல், நிலைபெறுதல்.

to be firm, or decided, துணிதல், நிமிர்தல், தீர்மானமாதல்.

Fĭrm'a-ment, *s.* வானவெளி, ஆகாயம், ஆகாயவிரிவு.

Fĭrm-a-ment'al, *a.* ஆகாயவிரிவுக்கடுத்த.

Fĭr'man, *s.* பிரயாணப்பத்திரிகை.

Fĭrm'ly, *adv.* உறுதியாய், ஸ்திரமாய், நிலையாய், திடமாய்.

Fĭrm'ness, *s.* அழுத்தம், உரப்பு, உரம், உறுதி, கடினம், திரம்.

unflinching, விடாப்பிடி.

of mind, or principle, கல்நெஞ்சு, மனநிறை.

as a grasp, tie, &c., பிடிப்பு.

Fĭrst, *a.* ஆதியான, முதலான, முதலாம், மூல, தலைமையான, மேன்மையான, சேட்ட.

begotten, முதற்பேறான, முதற்பிறந்த, சேட்ட.

born, தலைப்பிள்ளை, தலைச்சன், சேட்டன், மூத்தோன்.

cause, முதற்காரணம், ஆதிகாரணம், மூலகாரணம்.

daughter, தலைமகள், சேட்டபுத்திரி.

fruits, முதற்பாகம், முதற்கனி, முதற்பலன்.

principle, அடிமூலம், மூலாதாரம், மூலதத்துவம்.

son, தலைமகன், சேட்டபுத்திரன்.

Fĭrst, *adv.* முதலாய், ஆதியாய், ஆதியில், முதன்மையாய்.

Fĭrst'ling, *s.* தலையீற்று, சேட்டமகவு.

Fĭrst'-rāte, *a.* பிரதானமான, முதல்த்தரமான, மேலான, உத்தம.

Fisc'al, *s.* வருமானம், சம்பிரதி, வரவு பண்ணுகிறவன்.

Fisc'al, *a.* வருமானக்கணக்கனுக்கடுத்த.

Fish, *s.* மீன், மச்சம், புலால்.

basket, மீன்பறி.

charmer, புலால்கட்டி.

dried, கருவாடு.

eater, மச்சவூணன், மீனூணன்.

fins, மீன்சிறகு, மீன்செட்டை, மீன்செலு.

flying, பறவைமீன்.
pond, மீன்மடு.
renter, மீன்தீர்வைக்காரன், மீன்குத்தகைகாரன்.
salted, உப்பிட்டமச்சம், உப்பிட்டமீன்.
scales, சிலாம்பு, செகிள், செதிள்.
spawn, மீன்சினை, குண்டி, சினை.
Fish, *v. n.* மீன்பிடித்தல், குளித்தெடுத்தல்.
out secrets, கதைபிடுங்கல், கதைவிட்டுப்பிடுங்கல், காரியமூலமறிதல்.
Fish'er, } *s.* மீன்பிடிகாரன், நுளையன், பரதவன், வலையன், வலைஞன், செம்படவன்.
Fish'er-man,
Fish'er-y, *s.* மீன்பிடி, மீன்பிடிதுறை.
pearl, சலாபத்துறை, முத்துச்சலாபம்.
Fish'hook, *s.* தூண்டில், வெளிசம், வடிசம்.
Fish'ing, *s.* மீன்வேட்டை, மீன்பிடி.
Fish'-mŏn'ger, *s.* மீன்விற்போன்.
Fish'-wŏm-an, *s.* மீன்விற்பவள், வலைச்சி.
Fish'worm, *s.* நாக்குளிப்பாம்பு, நாங்கூழ், நிலவேர்.
Fish'y, *a.* மீன்நாற்றமுள்ள, வெடுக்குள்ள.
Fis'sile, *a.* பிளபடக்கூடிய.
Fis'sure, *s.* பிளப்பு, வெடிப்பு, விடர், கமர்.
Fist, *s.* கரமுட்டி, கைப்பொத்து.
Fist, *v. a.* கரமுட்டியாற்குத்துதல், கைபொத்திக்குத்துதல்.
Fist'i-cuffs, *s.* கைக்குத்துச்சண்டை, மல்யுத்தம், முட்டியுத்தம்.
Fis'tu-la, *s.* இசைக்குழல்.
in surgery, புண்ணளை, புண்புரை.
Fis'tu-lāte, *v. a.* சுரையாதல், குழலாதல்.
in surgery, புண்ணளைவைத்தல், புண்புரையாதல்.
Fis'tu-lous, *a.* குழலான, புரையான, அளையான.
Fit, *s.* சன்னி, வலிப்பு, இசிப்பு.
Fit, *v. a.* செப்பனிடுதல், இணக்குதல், சரிப்படுத்தல், பக்குவமாக்குதல், பொருத்துதல்.

up, கட்டுதல், ஆயத்தம்பண்ணுதல், திட்டப்படுத்துதல், திருத்துதல்.
out, முஸ்திப்பாக்கல்.

Fit, *v. n.* பொருந்தல், இசைதல், ஏற்குதல்.

Fit, *a.* தகுதியான, தக்க, ஒப்பான, நேரான, ஏற்ற, உரிய, யோக்கியமான, செம்மையான, பக்குவமான, கூடிய, செப்பமான, இணக்கமான, உசிதமான, வாய்ப்பான.
to be fit, இசைதல், இணங்குதல், கூடுதல், ஒவ்வுதல், ஒண்ணுதல், ஒத்துக்கொள்ளுதல், சரியாகுதல், சேர்தல், பொருந்துதல்.

Fitch, *s.* உழுந்து.
